உ

சிவமயம்

# வத்திய சிந்தாமணி

ஐ. பொன்னையா

விலை ரூபா-1

பாணத்து வைத்தியநூல் வெளியீடு-௬.

உ

சிவமயம்

# வைத்திய சிந்தாமணி

யாழ்ப்பாணத்து ஏழாலை,
சுதேசவைத்தியர்

## ஐ. பொன்னையா

ஏழாலை;
திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலை

ஆங்கீரச ஹு புரட்டாதி மீ
1932

உரிமை பதிவுசெய்யப்பெற்றது

## நூல்

## க. அட்டவிதபரீட்சை.

### 1. நாடிப்பரீட்சை.

பெருவிரலடியிலே கூர்ச்செந்நெல்லளவில் நாடியிருக்கும். அந்தநாடி உடம்புமுழுவதிலும் பரந்திருப்பினும் கையடியிலும் காலடியிலும் பார்க்க இசைவாகும்.

பெண்களுக்கு இடதுபக்கத்திலும், ஆடவர்களுக்கு வலதுபக்கத்திலும் நாடிப்பரீட்சை பண்ணுவர்.

பெருவிரலடியிலே வாதநாடியும், நடுவிரலிலே பித்தநாடியும் கீழே சிலேற்பனநாடியும் நடக்கும். இதைத் தாண்டி நடந்தால் அச்சரிநாடி யென்றறிக.

1 வாதநாடி வக்கிரமாகவும் கெதியாகவும் நடக்கும். அந்நடை வெளிச்சக்குருவிபோல் தத்தியும், சிறுபிள்ளைகள் தூங்கிய தொட்டிலாட்டம்போல் அசைந்தும், பாம்பு அட்டை இவற்றைப்போல் ஊர்ந்தும் தோன்றும்.

2 பித்தநாடி சலனமாய், ஊர்க்குருவி, மயில், அன்னம், புரு இவற்றைப்போல் அமைந்து நடக்கும்.

3 சிலேற்பனநாடி ஸ்திரமாய், ஊர்க்குருவி, கோழி, மாடப்புரு இவற்றைப்போல் அமைந்து நடக்கும்.

4 தொந்தநாடி பலவகையான கதியுடையதாகும். முதலில் வெளிச்சக்குருவிபோல் தத்தி, உடனே மயில்போல நடக்கில் வாதபித்த தொந்தநாடி. முதலில் அட்டைபோலூர்ந்து, உடனே கோழிபோல நடக்கில் வாதசிலேற்பன தொந்தநாடி. சலனமுடையதாய் முதலில் ஊர்க்குருவிபோல் நடந்து உடனே மாடப்புருப்போல நடக்கில் பித்தசேற்பன தொந்தநாடி. இவ்வாறே ஏனையதொந்தநாடிகளை

யும் அறிந்துகொள்ளுக. வாதம்முதலிய மூன்றனுள் எவையாயினும் இரண்டுகூடுவது தொந்தம்என்றும், மூன்றும் கூடுவது சன்னிபாதம் என்றும் அறியப்படும். வாதத்தோடு பித்தம் அரைப்பங்கு கூடுவது வாதபித்ததொந்தம். பித்தத்தோடு வாதம் அரைப்பங்கு கூடுவது பித்தவாத தொந்தம், இவ்வாறு ஏனைய தொந்தங்களும் ஆம். பெருவிரலடியிலே வக்கிரமாகவும் விரைவாகவும் நடக்குமியல் பினையுடைய வாதநாடியில் பித்தசிலேற்பனங்கள் தனித்தனி கூடுவதினல் அதன்நடை பேதப்படுவதையும், அதனுல் இயக்கப்படும் மற்றைநாடிகளின் நடைவேறுபாடுகளையும சேர்ந்து கவனித்துவருவதினல் தொந்தநாடிகளின் இயல்பினையும் தனித்துநடக்கும தன்மையையும் எளிதில் அறிந்துகொள்ளுதல் கூடும். அன்றியும்; சரீரசோதனைமுதலிய பிற பரீட்சைகளினுலும், வெளிப்பட்டுத் தோன்றும் குணங்களின் வேறுபாட்டினுலும் அறிந்துகொள்ளும் நோய்களுக்குரிய நாடிகளில் மேலே கூறப்பட்டிருக்கும் நடை வேறுபாடுகளைக் கவனித்து வருவதினுலும் இது இன்னநாடியெனப்பகுத்து அறிந்துகொள்ளுதல் எளிதான காரியமாகும். உதாரணமாக;

5 அசிரணநாடி—மந்தாக்கினியாகவும், மத்தயானை போலவும்நடக்கும் என்று கூறப்படுவதினல், மத்தயானையின் நடை எவ்விதம் என்பதை அசிணநோயுடையானிடத்தில் வைத்துக் கண்டுகொள்வது எளிதாம். (இதனுல் அசிரணநாடி கூறப்பட்டவாறு மாயிற்று).

6 தீபனநாடி—நித்திரைபண்ணுகிற காக்கைபோலே தூங்கிநடக்கும. வக்கிரத்தில் அன்னம்போல நடக்குமாகில் மலபந்தநாடி. மாதரிடத்தே கூடினவன் நாடியும் நித்திரை பண்ணுகிற காக்கைபோலே தூங்கிநடக்கும்.

7 சன்னிபாதநாடி—விறகுகட்டுச்சுமந்து போகிறவன் நடைபோலவும், அட்டைபோலவும், அன்னம்போலவும் குடிலமாகவும், மந்தமாகவும், மெலிந்து நடக்கும்.

## சரீரசோதனை.

### 2. பரிச இலக்கணம்.

வாதரோகிக்குத் தேகம் உட்டணமாயிருக்கும். பித்த ரோகிக்கு அதிக உட்டணமாயும், சயித்தியாதியாகவும் கூடியிருக்கும். சிலேற்பன ரோகிக்குச் சற்றே குளிர்ந்திருக்கும். தொந்தரோகிக்கு வெவ்வேறு குணமாயிருக்கும். சன்னிபாதரோகிக்குத் தண்ணீர் போலே குளிர்ந்திருக்கும்.

### 3. உருவ இலக்கணம்.

வாதரோகிக்குத் தேகம் கறுத்திருக்கும். பித்தரோகிக்கு மஞ்சள் நிறமாயும், சிவந்ததாயுமிருக்கும். சிலேற்பன ரோகிக்கு வெளுத்திருக்கும். தொந்த ரோகிக்குப் பலவர்ணமாயிருக்கும். சன்னிபாத ரோகிக்கும் பலவர்ணமாயிருக்கும்.

### 4. வசன இலக்கணம்.

வாதரோகிக்கு வார்த்தை சமனமாயிருக்கும். பித்த ரோகிக்கு எடுப்பாயும், பிதற்றலாயுமிருக்கும். சிலேற்பன ரோகிக்கு ஈனசுரமாயிருக்கும். தொந்தரோகிக்குப் பலவகையாயிருக்கும். சன்னிபாத ரோகிக்கு மந்தமாயிருக்கும்.

### 5. கண்ணின் இலக்கணம்.

வாதரோகிக்குக் கண்கறுத்திருக்கும். பித்தரோகிக்குப் பச்சென்றாயினும் சிவந்தாயினுமிருக்கும். சிலேற்பனரோகிக்கு வெளுத்துப் பீளைசாறியிருக்கும். தொந்தரோகிக்குப் பலவிதமாயிருக்கும். சன்னிபாதரோகிக்குச் சிவந்தாயினும் பச்சென்றாயினுமிருக்கும். காமாலைரோகிக்கு அதிகபச்சென்றிருக்கும்.

### 6. நாக்கின் இலக்கணம்.

வாதரோகிக்கு நாக்குக் கறுத்திருக்கும். பித்தரோகிக்குப் பச்சென்றாயினும் சிவந்தாயினு மிருக்கும். சிலற்பனரோகிக்கு வெளுத்து நீருண்டாயிருக்கும். தொந்தரோகிக்குப் பலவர்ணமாயிருக்கும். சன்னிபாதரோகிக்குக் கறுத்து முள்ளுப்போலிருக்கும். தண்ணீர்ப் பசையற்று உலர்ந்து மிருக்கும்.

### 7. மலத்தின் இலக்கணம்.

வாதரோகிக்கு மலம் கறுத்திருக்கும். பித்தரோகிக்குப் பசுந்தாயினும் சிவந்தாயினுமிருக்கும். சிலேற்பனரோகிக்கு வெளுத்துச் சீதமுண்டாயிருக்கும். தொந்தரோகிக்குப் பலவிதமாயிருக்கும். சன்னிபாதரோகிக்குப் பசுந்தாயினும் சிறுத்தாயினும்விழும்.

### 8. மூத்திரத்தின் இலக்கணம்.

வாதரோகிக்கு மூத்திரம் தெளிந்திருக்கும். பித்தரோகிக்கு மஞ்சள் நிறமாபாயினும் சிவந்தாயினுமிருக்கும். சிலேற்பனரோகிக்கு வெளுத்து நுரைத்திருக்கும். தொந்தரோகிக்குப் பலவகையாயிருக்கும். சன்னிபாதரோகிக்குப் பசுந்தாகுதல் சிவந்தாகுதலிருக்கும்.

## உ. அசீரணம்.

சேஷப், விஷம், ஆமம், வீதாமம், என அசீரணம் நாலுவகைப்படும்.

1 சேஷம்:- சுவாசமாய்த் தேக்கிடும் (மேல்எப்பமுண்டாகும்) உச்சியும் நெஞ்சும் நோகும். சோம்பல் உண்டாகும்

2 விஷம்:- சரீரமெல்லாம் நோகும் கள்ளப்பசியுமுண்டாகும்.

3 ஆமம்:- சுவாசமாய்த்தேக்கிடும் வாய் நீரூறும்.

4 வீஷாமம்:- புளியேப்பமிடும் தாகம் மிகும் அசதி யுண்டாகும்.

---

## உ சுரம்.

சுரம் எழுவகையாயிருக்கும். அவை; வாதசுரம், பித்த சுரம், சிலேற்பனசுரம, தொந்தசுரம், பூதசுரம், அசீரண சுரம், அதிசாரசுரம் என்பன.

### 1. வாதசுரத்தின் இலக்கணம்.

முகம் கறுத்திருத்தல், உதடுகறுத்து உலர்ந்திருத்தல், சரீரமெல்லாம் நோதல், தினவெடுத்தல், அதிரெடுத்தல், உட்டணமாயிருத்தல், பாரித்திருத்தல், மலம்பேதமாயிருத் தல், தாகமெடுத்தல், குளிர்வருவதாயிருத்தல், மயிர்க்கூர்ச் செறிதல், வாய்துவர்த்திருத்தல், என்னுமிப்பன்னிரண்டு குணங்களுமுடையது வாதசுரமாயிருக்கும்.

இன்னமும் நீர்கடுத்தலும், கண்ணீர் சொரிதலும், மூக்கு நிமிர்த்தலும், கண் ஆழ்ந்திருத்தலும், கண் சிவந் திருத்தலும், இமை தடித்திருத்தலும், மலம் கறுத்திருத் தலும், வாய்துவர்த்திருத்தலும், இருமலுண்டாயிருத் தலும், உள்ளங்கைகால் குளிர்ந்திருத்தலும் என்னுமிப் பத்துக்குணங்களோடு, சந்து, உச்சி, பிடரி, கழுத்து, கீழ்முதுகு, இவைநோவெடுத்தலும், மூக்குமினுங்கியிருத் தலும் ஆகப்பன்னிரண்டும் வாதசுரத்தின் குணங்களெனக் கொள்ளுவர். அன்றியும் இச்சுரத்தை நிச்சயித்தலில் முன் கூறிய அட்டவித பரீட்சையையும் கவனித்துக் கொள்ளுக.

## 2. பித்தசுரத்தின் இலக்கணம்.

நித்திரை வருகுதல், எழுந்திருந்தோடுதல், மூர்ச்சை வருகுதல், வாய்பிதற்றிப்பேசுதல், கைத்தல், தாகமெடுத்தல், வாயூறுதல், சந்தாபமுண்டாதல், விகாரமுண்டாதல், உதடுமினுங்கியிருத்தல் என்னுமிப்பத்துக்குணங்களுமுடையது பித்தசுரமாயிருக்கும்.

இன்னமும், தீராததாகமுண்டாதலும், கண்ணிமை உலர்ந்திருத்தலும், உதடு மினுங்கியிருத்தலும், ஓய்ந்திருத்தலும், நோவுண்டாகலும், குளிர்மையான பண்டங்களை வயிற்றிற் பூசவேண்டுதலும், பிதற்றுதலும், வயிறுமஞ்சள் நிறமாகக்கழிதலும் என்னுமெட்டும் பித்தசுரத்தின் குணங்களாகக் கொள்ளுவர். இதற்கு முன்சொன்ன அட்ட வித பரீட்சையையும் கவனித்துக் கொள்ளுக.

## 3. சிலேற்பன சுரத்தின் இலக்கணம்.

முகம்வெளுத்திருத்தல், மார்புநோவெடுத்தல், இருமலுண்டாதல், இரைப்புண்டாதல், அருவருப்புத் தோன்றுதல், நா உரிசிஉணராதிருத்தல், சுவாசம் விட்டுப்போகாமலிருத்தல், விக்கல் எடுத்தல், தாகமெடுத்தல், மேல்மூச்செடுத்தல், கண்ணிற்பீளை அடைதல், வாய்நீர் தடித்தல் என்னுமிப்பன்னிரண்டு குணங்களும் உடையது சிலேற்பனசுரமாயிருக்கும்.

அன்றியும்; சுவாசமுண்டாதலும், கண்பீளைசாறுதலும், உடம்புவெளுத்திருத்தலும், மேல்மூச்சுண்டாதலும் என்னுமிந்நாலும் சிலேற்பனசுரத்தின் முக்கிய குறிகள் என்றுகொள்ளுவர். முன்பரீட்சையும் பார்த்துக் கொள்ளுக.

### 4 தோந்தசுரத்தின் இலக்கணம்.

1 வாதபித்த தொந்தசுரம்-உடம்பெல்லாம் நோகுதல், பிரலாபித்தல், நித்திரைவருகுதல், வாய்கறுக்குதல், மலம் பந்தித்தல் இந்தஐந்து குணங்களுமுடையது வாதபித்ததொந்தசுரமென்றறிவது.

2 வாதசிலேற்பன தொந்தசுரம்-சரீரம் நோகுதல், சுவாசம் எடுக்குதல், இருமல் உண்டாதல், வாய் வெளுக்குதல், பிடரி நோகுதல், மயிர்க்கூர்ச்செறிதல், தாபம் வருதல், இந்த எழுகுணங்களுமுடையது வாதசிலேற்பன தொந்தசுரமென்றறிவது,

3 பித்தசிலேற்பனதொந்தசுரம்-வெயர்வை உண்டாதல், பிதற்றுதல், மயிர்க்கூர்ச்செறிதல் இருமல்தோன்றுதல், நெஞ்சுநோகுதல் தாபமாயிருக்குதல், உடம்புவிறைத்தல், இநத எழுகுணங்களுமுடையது பித்தசிலேற்பன தொந்தசுரமென்றறிவது. இவற்றிற்கு முன்சொன்ன பரீட்சையும் பார்த்துக்கொள்க.

### 5. பூதசுரத்தின் இலக்கணம்

குமாகண்டன் போலே வலிப்புவாங்குதல், சுரம் தோன்றியவுடனே பிரலாபித்தல், கண்உருட்டி விழிக்குதல், மயிர்க்கூச்செறிகுதல், பாடுதல், ஆடுதல், நகைத்தல், பாலும் சோறும் வேண்டுதல், நித்திரைபண்ணுதல், என்னும், ஒன்பதுகுணங்களுமுடையது பூதசுரமாயிருக்கும்.

### 6. அசீரணசுரத்தின் இலக்கணம்.

அடிக்கடி இளைப்புத்தோன்றுதல், வாயாலெடுக்குதல், மந்தமாயிருக்குதல், புளித்தேப்பமிடுதல், சந்து குறங்கு நோதல் என்னும் ஐந்து குணங்களுமுடையது அசீரணசுரமாயிருக்கும்.

## 7. அதிசாரசுரத்தின் இலக்கணம்.

சரீரமெல்லாம் நோகுதல், ஆலசியமா யிருக்குதல், வெயர்வை உண்டாதல், தாபமெடுக்குதல், குளிர்ந்தசுரசம் வேண்டியிருக்குதல் என்னுமிக்குணங்களுடையது அதிசார சுரமாயிருக்கும். அந்த அதிசாரம் ஐந்துவகையாமாறுபின்பு காட்டுதும்.

மாறற்சுரமாவது:- இரண்டுநாள்மாறல், மூன்றுநாள் மாறல், நான்குநாள்மாறல், ஐந்துநாள்மாறல், பதினைந்து நாள்மாறல், பத்துநாள்மாறல், அர்த்தராத்திரிமாறல், வாத அதிகம், பித்தஅதிகம், சிலேற்பனஅதிகம், என ஒன்பது வகைப்படுமென்பதறிக. (எண்ணுமிடத்துப்பத்து இருக்கின் றன. வாதஅதிகமென்பது முதலிய மூன்றினலும் மாறி வரும்நேரமேகுறிக்கப்பட்டனவாகும்)அவற்றின்குறிகுணங் களாவன:- சரீரம் புளகிதமாதல், (இதுபிசிதமாகுதல்என்று இருக்கலாம் போலும்.) இருமலுண்டாதல், கண்ணுந்தலை யும் நோதல், கண் இரத்தப்பசை யற்றுப் பசந்திருத்தல், வயிறு சழிதல் அல்லது கட்டுப்படல், சரீரமடங்கலுமெரி தல், நெளுந்து இருக்குதல் என்பனவாம்.

## சுரத்தின் வகை.

சுரமாவது தோலைப்பற்றியதும், மாமிசத்தைப்பற்றி யதும், இரத்தத்தைப்பற்றியதும, எலும்பைப்பற்றியதும் ஆக நாலுவகைப்படும். அவற்றுள்;

## க. தோலைப்பற்றிய சுரம்.

சற்றேகாயும், சற்றேதலைநோகும், தாகமுண்டாகும், நாடி மந்தமாயிருக்கும்.

## உ. மாமிசத்தைப்பற்றிய சுரம்.

தாபசுரமடிக்கும், சுவாசமெடுக்கும், வெயர்வைபிறக்கும், உதடுஉலரும், சரீரம்நோகும், ஆலசியமாயிருக்கும், மயிர்க்கூர்ச்செறியும், மூர்ச்சையாகும்.

## ௩. இரத்தத்தைப்பற்றின சுரம்.

அதிகசுரமாயடிக்கும், தாகமெடுக்கும், இளைப்புண்டாகும் உடம்புநோகும், சித்தப்பிரமையாயிருக்கும். மூர்ச்சையுண்டாகும்.

## ௪. எலும்பைப்பற்றின சுரம்.

உள்ளேதாகமெடுக்கும், மேலேகுளிரும், கபடசுரமடிக்கும், சரீரமிளைக்கும், வெளுத்திருக்கும், இவ்வாறு நால்வகைச்சுரமும் கண்டு கொள்க.

---

## அபநியாச சன்னி.

வாதம் முதலிய முத்தோஷங்களும் முறைதப்பிக்கூடியிருக்குதல், சுரம் நியதியின்றி அடிக்குதல், நாக்குப்பலவன்னமாயிருக்குதல், நித்திரையதிகமாதல், சரீரமெல்லாம் நோகுதல், வெயர்வைகொள்ளுதல் என்னுமிவை அபநியாச சன்னியின் குறிகளாம்.

## சன்னிபாதம்.

சுரம்வந்த ஒன்பதுநாட்களுக்குள் எந்த அபத்தியத்தினாலேனும் தோஷம் பிறக்கும். அவையாவன:- புளிப்பு, கசப்பு, தித்திப்பு, அழலிப்பு, நெய், எண்ணெய், வெல்லம், பால் முதலிய சயித்தியப்பண்டம், தாம்பூலம், பரிமளசுகந்தம், பலசய்பாரம், குளிர்ந்தகாற்று, மாதருறவு, வழிநடை,

கோபம், துக்கம், அழுகை, உரத்துப்பேசுகை என்னும் இவைமுதலியவற்றுல் ஏழுவகைத்தோஷம் பிறக்கும். அவை யாவன:

வாததோஷம், பித்ததோஷம், சிலேற்பனதோஷம், விஷதோஷம், இரத்தசிங்குவாததோஷம், சீதசிங்குவாத தோஷம், கிருட்டினசிங்குவாததோஷம், என்பனவாம். அவற்றுள்:-

## க. வாததோஷத்தின் குணம்.

மூர்ச்சைவரும், பிரமைகாணும், தாகமெடுக்கும், புலம்பும், மார்புநோகும்.

## உ. பித்ததோஷத்தின் குணம்.

மேற்கூறியகுணங்களோடு ஆடுதல், பாடுதல், எழுந்திருத்தல், அடிக்கடி சித்தப்பிரமையாயிருத்தல், உடம்புளரிதல், கைகள்குளிர்ந்திருத்தல் என்னுமிவையுமுண்டாகும்.

## ௩. சிலேற்பனதோஷத்தின் குணம்.

சுரமடிக்கும், உட்டணமாயிருக்கும், தாகமுண்டாகும், நாடிகுடிலமாய்நடக்கும், எரியும், மூர்ச்சையுண்டாகும், வெயர்வைபிறக்கும். ஒருநாளைக்கு இரண்டு மூன்றுமுறை குளிர்ந்து சுரம்வரும்.

## ச, சன்னிபாதவிஷதோஷம்.

அடிக்கடிகுளிரும், சுரமும்வரும், தலைநோகும், நாக்குக்கறுத்து முள்ளுப்போலிருக்கும், தாகமெடுக்கும்.

## ரு. இரத்தசிங்குவாததோஷத்தின் குணம்.

நாக்குச்சிவந்திருக்கும் சுரமுண்டாம் முள்ளுப்போலிருக்கும் சுரம் தாகமுண்டாம்.

## சா. சீதசிங்குவாததோஷத்தின்குணம்.

நாக்குப்பொன்னிறமாய் வெடித்திருக்கும் முள்ளுப்போலிருக்கும், தண்ணீர்பசையற்றுக்காய்ந்திருக்கும், இரவிற் தூக்கமில்லாமலிருக்கும். தியக்கம், மூர்ச்சை, தாகம், என்னுமிக்குணங்களையுண்டாக்கும் வேர்க்கும்.

## எ. கிருட்டினசிங்குவாததோஷத்தின் குணம்.

நாக்குக்கறுத்து உலர்ந்திருக்கும், முள்ளுப்போலிருக்கும், அடிக்கடிஎழுந்திருக்கும், சித்தப்பிரமையாகும், சுவாசம்வாங்கும். தினவெடுக்கும். இரைக்கும். தாகமுண்டாம். இவ்வாறு எழுவகைத் தோஷங்களினியல்பை நுட்பமாகக் கவனித்துப் பார்க்கவும்.

---

## அதிசாரம்—5.

வாதஅதிசாரம், பித்தஅதிசாரம், சிலேற்பனஅதிசாரம், சுரஅதிசாரம், அதிசாரசன்னி, என அதிசாரம் ஐந்து வகைப்படும்.

### 1. வாதஅதிசாரத்தின்குணம்.

வயிறுபொருமி அடிக்கடி வாய்வு பறியும். நுரை கறுத்து மலம்விடும். அடிவயிறு வலித்து இறுகிமலம்விடும் உடம்புநோகும்.

### 2. பித்தஅதிசாரத்தின்குணம்.

மலம் சிவந்து போகும். உட்டணமாய்த் தாகமெடுக்கும். வாய்நுரைக்கும். விக்கலெடுக்கும். மார்புவலிக்கும். உதடு உலரும். மூர்ச்சைகாணும்.

### 3. சிலேற்பனஅதிசாரத்தின்குணம்.

மலம் நுரைக்கும். சீதம் விழும். இருமல் சுவாசங் காணும். அரோசியமுண்டாகும். வயிறுவலிக்கும்.

### 4. சுரஅதிசாரத்தின்குணம்.

மிகுசுரமடிக்கும். இருமல், மூச்சு, நாவரட்சி, மிகுதாகம் இவையுண்டாகும். கழிச்சல்காணும்.

### 5. அதிசார சன்னியின்குணம்.

கைகால் குளிரும். உள்ளே எரியும். புலம்பும். வாதைபண்ணி விக்கலெடுக்கும். வெயர்வை தோன்றும். உடல் நடுங்கும். நித்திரைமிகும்.

## அதிசாரத்தில் அசாத்தியம்.

மலம் விளக்கெண்ணைய் போலவும், தேன்போலவும் இரத்தமாகவும், மாமிசமாகவும், இளகியும், இறுகியும் பலவிதமாய்க் கழியும். துர்க்கந்தமாயிருக்கும். குரல் ஈனப்படும். முகத்திற் காந்தியும், கைகால்களில் இரத்தமுமற்றிருக்கும். நாசி நாற்றமறியாது. செவி சத்தமறியாது. அதிகமாய்ச் சுரமடிக்கும். அதிகமாய்க் குளிரும். கால் அற்பமாய்க் குளிரும். விக்கலெடுக்கும். கண்கள் மலர்ச்சியிழந்துவிடும். மேற்சுவாசம் வாங்கும். நாடி குடிலமாய் நடக்கும். இக்குணங்கள் காணில் மீளுதல் அரிதெனஅறிக.

---

## உவாந்தி—4

வாத உவாந்தி, பித்த உவாந்தி, சிலேற்பன உவாந்தி, சன்னிபாத உவாந்தியென உவாந்தி நாலுவகைப்படும்.

1 வாதஉவாந்தி:- கறுத்து நுரை நுரையாகவும், மஞ்சளாகவும் உவாந்திக்கும். வாய் துவர்க்கும், குரல் கம்மும், அடிவயிறுநோகும், முதுகுளேயும்.

2 பித்த உவாந்தி:-சிவந்தாயினும் பசந்தாயினும் உவாந்தியெடுக்கும், சுடும், தாகமுண்டாகும், வாய்கசக்கும் உடம்பெரியும், தலைசுழலும்.

3 சிலேற்பன உவாந்தி:- வெளுத்தும் தடித்தும், வணசிலாகவும் உவாந்திக்கும், வாய்இனிக்கும், முகம்வெளிறும், ஊதும்.

4 சன்னிபாத உவாந்தி:-பலநிறமாயும் பலவிதமாயும் உவாந்திக்கும். நாற்றமாயும், மலம்போலும், ஊனமாயுமிருக்கும், வாயிற் பல சுவைதோன்றும். உடம்புளையும், கைகால்கள் வசப்படா. நெஞ்சுலர்ந்து உடம்புகெடும். இது மருந்துக்கு வசப்படாது. இயமனூர் புகுவிக்கும்.

இவையன்றிக் கண்ணீற்றினாலும், மருத்தீட்டினாலும் அச்சத்தினாலும், வயிற்றிற்றோன்றும் பலவகைக்கிருமிகளினாலும், மருந்து §கைதப்பினதினாலும், உவாந்தி தோன்றும். தோன்றுங்கால் குணமும் பலபேதமுற்றுத் தோன்றும். உவாந்தி வகையும், தன்மையும்,காரணமும் முதலியவற்றை நிதானித்துப்பார்க்கவும்.

---

## விக்கல்.—5

அன்னசவிக்கல், தமளவிக்கல், சுரவிக்கல், கெம்பீரவிக்கல், அதிவிக்கல், என விக்கல் ஐந்துவகைப்படும்.

1 அன்னசவிக்கல்:- நெஞ்சு உலரும், உடலிளகும், நாவில் அருவருப்புத்தோன்றும், சிறுகவிக்கலெடுக்கும்.

2 தமளவிக்கல்:- விட்டு விட்டு ஒருமுறை இருமுறை விக்கலெடுக்கும். தலைவலிக்கும். தாகம், அருவருப்பு, கொட்டாவிதோன்றும்.

3 சுரவிக்கல்:- உடம்பில் அசதிதோன்றும், நெஞ்சுகுழியும், உணவுகொள்ளும்வேளைகளிலும், பசிமிகுந்த வேளைகளிலும் தோன்றும்.

4 கெம்பீரவிக்கல்:- நெஞ்சுகுழியவாங்கி நீண்டவிக்கலெடுக்கும், உடம்பிளைக்கும், கண்சிவக்கும், நெஞ்சுலரும், கண்முளி புறப்படும், கணணீர்கலங்கும், வயிறுபொருமும்

---

§கை-ஒழுங்கு

கால்கை சந்துகளின் நரம்பை வலித்துவாங்கும், மிகுந்த வேதனைசெய்யும், செய்வதின்னதென அறியாது தடுமாறும்.

5 அதிவிக்கல்:- கெம்பீரவிக்கலின் குணங்கள் அதிகரித்துத் தோன்றும், உடல் நடுங்கும், உடம்பை வில்லுப்போல வளைக்கும். நாசி, தொண்டைக்குழி, நாக்கு, நெஞ்சு பசையற்று உலர்ந்துபோம். தலைகீழாய்ப்புரட்டிவிடும். மிகக் கொடிய வேதனைசெய்யும்.

எந்தவிக்கலாயினும் மூன்றுநாட்களுட் கொல்லாவிடின் மருந்துக்கு வசப்படும்.

---

## நாடிதெரியாத பேர்கள்.

நீரில்மூழ்கினவன், வழிநடந்தவன், பட்டினிகிடந்தவன், இளைத்துக் கிடந்தவன், பேய்பிடித்தவன், கோபமுள்ளவன், பயித்தியம் பிடித்தவன், கள்ளுக் குடித்தவன், தவளை-பாம்பு-முயல்-கோழி தின்றவன், மாதர்போகஞ்செய்தவன், கெந்தகம் முதலிய பாஷாணங்கள் தின்று பழகினவன், வாயுதாரணஞ் செய்பவன், குமரகண்டனுற் பீடிக்கப்பட்டவன் இவர்களுக்கு நாடி செம்மைப்படாது.

## அறிவுடையோர்க் கடாதன.

வழக்கறுத்தலும், வாதம் பண்ணுதலும், சோதிடம் சொல்லுதலும், வயித்தியம் பண்ணுதலும், ஆகிய இந்நாலும் அறிவுடையோன் செய்யான். செய்யின் நடுவுநிலைமை தவறுன். தவறின் அவன் குடிநாசமாகும். வயித்தியனுயுள்ளோன் நோயின்தன்மை, அதன் பூர்வரூபம் அதன் காரணம், உடல்நிலை, மருந்தின்வேகம் என்னுமிவை போல்வனவற்றை நன்கு நிதானித்தறிந்து தக்கவாறு சிகிச்சை புரியானுயின், அந்த அறிவில்லாத மூடன் கொடிய நரகத் துன்பத்திலிருந்து மீளுதல் அரிதாகும்.

## வைத்தியம் செய்யத் தகுந்தவன்.

கல்வியறிவும், கடவுள்பக்தியும், உயர்குடிப்பிறப்பும், உயிர்களிடத்து இரக்கமும், பலநூலாராய்ச்சியும், பிறர் பொருளில் இச்சையில்லாமையும் போன்ற உத்தமகுணங்களுடையானே வைத்தியம் செய்தற்குத் தகுதியுடையோனவன்.

---

## இலங்கணவிதி.

சுரரோகிக்கு அவன் தேகநிதானமறிந்து இலங்கணம் போடுவர். அதிசாரமுமுடையானுக்கும், கெர்ப்பனிக்கும், கிழவனுக்கும், குழந்தைக்கும், இழந்தவனுக்கும், வழிநடந்தவனுக்கும், நேத்திரரோகிக்கும், கடிரோகிக்கும், கிரகணியுள்ளவனுக்கும் இலங்கணமாகாது. அல்லாதவர்க்குச் சுரம் தோன்றின் இலங்கணமுரியதாம்.

சுரந்தோன்றினநாள்உபவாசமிருப்பர். மற்றைநாள்உதயகாலத்தில் தந்தசுத்தியண்ணி நாக்கு வழித்து வெந்நீர் கொண்டு வாய்கொப்பளிப்பர். சிரசில் வேட்டிகட்டிக் கொண்டு இடதுகை கீழாகப் படுப்பர். அன்றும் உபவாசமிருப்பர். மூன்றாம்நாள் ஒருதேத்தாங்கொட்டை தின்று நாலொன்றாய்க்காய்ச்த வெந்நீர் குடிப்பர். இதனாற்றிரிதோஷமும் சமப்படும்.

நாலாநாள் உபவாசமிருந்து ஐந்தாநாள் கஞ்சிகுடிப்பர் ஆறாநாளுங்கஞ்சிகுடித்து எழாநாள் தந்தசுத்திசெய்து வாய் கொப்பளித்து உபவாசமிருப்பர். எட்டாநாளும் ஒன்பதாநாளும் அவ்வண்ணமே உபவாசமிருந்து பத்தாநாள் கஞ்சி குடிப்பர். சுரம் விட்டுப்போகும். பத்தியம்,வற்றல்க்கறி கூட்டவும். சுரம் நீங்கியபின் பேதிக்குவாங்கிக் கொள்ளவும்.

சுரத்துக்குமேற்குறித்தவாறு இலங்கணம் போடுவதி ஞல் மூன்று நாட்களில் திரிதோஷமுந்தீரும். அவசியமாயின் நாலாநாள் ஆறினகஞ்சி கொடுத்து அப்பால் நோயின் ஏற்றத்தாழ்வும் சரீரநிலையுமறிந்து இலங்கணமாயினும் மருந்தாயினும் செய்க. பித்தசரீரமுடையானுக்கும் இளைத்தவனுக்கும் சுத்தலங்கணமாகாது, சரீரவலியுடையவனுயின் நித்தியம் காலமே தந்தசுத்தி செய்து வாய்கொப்பளித்து எட்டுநாளைக்கு அப்பால் வேண்டுமாயின் மருந்து கொடுக்கவும். அதுவரையிலும் சுத்தலங்கணமாகும். பக்குவம்பார்த்துக்கஞ்சி கொடுக்கவும்.

இலங்கணமும் மருந்தும் முறைதவருது செய்யின்வாதசுரம் ஒன்பதுநாட்களிலும், பித்தசுரம் ஏழுநாட்களிலும், சிலேற்பனசுரம் எட்டுநாட்களிலும், தொந்தசுரம் பத்துநாட்களிலும், விடும். விட்டபின் இலகுவாகப்பேதிக்கு வாங்கிக்கொள்ளவும் இந்தத்தவணைகளில் விடாமலிருந்தால் மறுபடியும் மருந்து கொடுக்கவும்,

குறிக்கப்பட்ட நாட்களில் சுரம் நீங்காமலும், சன்னி தோன்ருமலும் இருப்பின் மேலும் இலங்கணம் போடார்-போடுவராயின் சுரம் இரதகத்தை அமுதாகஉண்டு எலும்பைப்பற்றி அத்திசுரமாகிவிடும். எந்தச்சுரமாயினும் பத்தியத்தாழ்விஞலும் சிகிச்சைமுறைதவறுதலிஞலும் சன்னி தோன்றின் அந்தச்சுரத்தின் குணங்களுக் கிசைந்தவாறே பேதப்படும். சன்னிக்கட்டுந்தோன்றும். இவற்றையறிந்து இயன்ற சிகிச்சைபுரிவது சிகிச்சகனுக்குக்கடமையாகும்.

---

## கஷாயவிதி

### வாதசுரத்துக்கு

தழுதாழைவேர், இபங்கம்வேர், விட்டுணுகிராந்திசமூலம் சுக்கு, திப்பிலி இவைசமமாய்க்கூட்டி எட்டொன்ருய்க்காய்ச்சிக் கொடுக்க வாதசுரந்தீரும்.

### பித்தசுரத்துக்கு.

சதகுப்பை, கொத்தமல்லி, அதிமதுரம், சுக்கு, வெட்டிவேர் ஆடாதோடையிர்க்கு, முத்தற்காசு, தண்ணீர்விட்டான் கிழங்கு, முசுமுசுக்கைவேர் சமன்கூட்டி எட்டொன்ருய்க் காய்ச்சிக் கொடுக்க பித்தசுரந்தீரும்.

### சிலேற்பனசுரத்துச் கு.

கண்டங்கத்தரி, சிறுகாஞ்சோன்றி, வெட்டிவேர், சீந்தில் சுக்கு, சிறுதேக்கு சமன் முன்போலக்கஷாயமிட்டு திப்பிலிப் பொடி மேற்றூவிக் கொடுக்கவும்.

### வாதபித்தசுரத்துக்கு.

சிற்றமட்டி, நன்ஞரி, பற்படாகம், நற்சந்தனம், சீந்தில் முந்திரிகைப்பழம், திப்பிலி சமன்முன்போலக்கஷாயமிட்டுக் கொடுக்கவும்.

### சிலேற்பனசுரத்துக்கு.

முந்திரிகை, பேரீஞ்சு, சந்தனம், சீந்தில், முத்தற்காசு, சுக்கு, சிறுகாஞ்சோன்றி, கண்டங்கத்தரி சமன்கூட்டி எட்டொன்ருய்க்காய்ச்சிக் கொடுக்கவும்.

### சிலேற்பனசுரத்துக்கு.

சுக்கு, திப்பிலி, கண்டங்கத்தரி, இருவேலி, இலாமிச்சு, வட்டத்துத்தி, பற்படாகம், சீந்தில் சமன்கூட்டிஎட்டொன் ருய்க்காய்ச்சிக் கொடுக்கவும்.

## பித்தசிலேற்பனசுரத்துக்கு.

சிந்தில், முத்தற்காசு, சிற்றமட்டி, தாகசிங்கி, அனிச்சை நிலவேம்பு, சுக்கு, கடுக்காய், நெல்லிக்காய் சமன் கூட்டி எட்டொன்றாய்க் காய்ச்சிக்கொடுக்கவும்.

## தோந்தசுரத்துக்கு.

கண்டங்கத்தரி, சிந்தில், சுக்கு, கடுக்காய், வேப்பலகு மிளகுசமன்வறுத்து எட்டொன்றாய்க்காய்ச்சித் திப்பிலிப் பொடி தூவிக்கொடுக்கவும்.

## அதிசாரசுரத்துக்கு.

அதிவிடயம். பெருமரப்பட்டை, சுக்கு, முத்தற்காசு வில்வம்வேர், மாதளையோடு, பொன்முசுட்டைவேர் எட்டொன்றாய்க்காய்ச்சிக் கொடுக்கவும்.

## சன்னிபாதசுரத்துக்கு.

சிந்தில், ஆடாதோடை, நிலவேம்பு, பற்படாகம், சுக்கு, சிறுகாஞ்சோன்றி, சிற்றமட்டி, சிறுதேக்கு சமன் எட்டொன்றாய்க்காய்ச்சிக் கொடுக்கவும்.

ஒவ்வொருசுரத்திலும் கோளாறடைந்திருக்கும் வாதம் முதலிய தோஷங்களைச் சமப்படுத்தக்கூடிய பொருட்களே பெரும்பாலும் இங்கு கூறப்பட்டிருக்கின்றன. இவற்றோடு சுரத்தைப்போக்கத்தகுந்தனவாயுள்ள பொருட்களைக்குணங் கண்டு கூட்டிக்கொள்ளுவது வைத்தியனுக்குக் கடமையாகும். அப்பொருட்கள்; பற்படாகம், நிலவேம்பு, பேய்ப்புடோல், சிறுதேக்கு, சிற்றாமுட்டி, இருவேலி, இலாமிச்சு என்னுமிவை போல்வன.

## அசீரணசுரத்துக்கு.

சிந்தில், ஆடாதோடை, நிலவேம்பு, பற்படாகம், சுக்கு சிறுகாஞ்சோன்றி, சிற்றமட்டி இவை எட்டொன்றாய்க்காய்ச்சிக்கொடுக்கவும்.

## தோஷசுரத்துக்கு.

வெட்பாலைப்பட்டை, சீந்தில், பற்படாகம், சிறுகாஞ் சோன்றி, நிலவேம்பு, கோட்டம், முத்தற்காசு, ஆடா தோடை, சுக்கு, பேய்ப்புடோல் சமனெட்டொன்றாய்க்காய் ச்சிக் கொடுக்கவும்.

## மாறற்சுரத்துக்கு

சிறுகாஞ்சோன்றி, நிலவேம்பு, முத்தற்காசு, பற்படா கம், ஆடாதோடையிர்க்கு, சீந்திற்றண்டு, சிறுதேக்கு, திப் பிலி, சுக்கு, செங்கழுநீர்க்கோட்டம், கஞ்சாங்கோரை, பேர மட்டி சமன் எட்டொன்ருய்க்காய்ச்சிக் கொடுக்கவும்.

## சகலசுரத்திற்கும்

சீந்தில், வட்டத்துத்தி, நிலவேம்பு, சிறுகாஞ்சோன்றி, பற்படாகம், இலாமிச்சு, இருவேலி, சுக்கு, மல்லி சமன் முன்போல.

முத்தற்காசு, சீந்தில், கண்டங்கத்தரி, சிறுவழுதலை, வேப்பலகு, பற்படாகம், நெய்தல், நிலவேம்பு, திரிபலை, சுக்கு, திப்பிலிமூலம், பேய்ப்புடோல், மல்லி, கடுகுரோ கணி, வாய்விளங்கம் சமனெட்டொன்ருய்க்காய்ச்சித் தேன் முலைப்பால்மேற் பொடியிட்டுக்கொடுக்கவும்.

சீந்தில், சிற்றமட்டி, ஆடாதோடை, கோரை, வேப் பலகு, இலாமிச்சு இருவேலி, சந்தனம், பற்படாகம், பேய்ப் புடோல், நிலவேம்பு, சிறுதேக்கு, திரிபலை, திப்பிலி வகை கழஞ்சு உ எட்டொன்ருய்க் கஷாயம்வைத்து திப்பிலிப் பொடி தேன்மேலிட்டுக் கொடுக்கவும்.

சீந்தில், வேப்பலகு, சிறுகாஞ்சோன்றி, ஆடா தோடை, சாரணை, நெருஞ்சி, பெருங்குரும்பை, பேய்ப் புடோல், வட்டத்துத்தி, வரிக்கூற்ருழை, விட்டுணுகிராந்தி,

ஆடாதோடை, வில்வம்வேர், கொன்றைவேர், முத்தற்காசு, தூதுவளை, சிற்ருமல்லி, சேவகன்பூடு, நிலவேம்பு, முள்ளி, முல்லை, பற்படாகம், சந்தனம், முந்திரிகை, பேரீஞ்சு, இலாமிச்சு, இருவேலி, நன்னரி, ஏலம், கருவேம்பு, கோட்டம் திரிபலை, திரிகடுகு, இருசீரகம், மதுரம், வெட்பாலை, சிறுதேக்கு, ஓமம், தேவதாரு, அரத்தை, சதகுப்பை, மல்லி, கடுகு, இருப்பைப்பூ, கறுவா முன்போலக்காய்ச்சி திப்பிலி முலைப்பால் தேன்மேற் பொடியிட்டுக் கொடுக்கப் பழஞ்சுரம் முதலிய சகல சுரமும் போகும்.

## திரிதோஷசுரத்துக்கு

இலாமிச்சு, பாதிரி, சிறுகாஞ்சோன்றி, சீந்தில், சுவரொட்டி இவைவேர் வேப்பலகு, வேப்பிலை, கண்டங்கத்தரி, சுக்கு, கடுக்காய், சமன் முன்போலக் காய்ச்சிக்கொடுக்கவும்.

## உட்டணதாபசுரத்துக்கு

சிறுவழுதலை, ஆடாதோடை, வில்வம்வேர், பற்படாகம், நிலவேம்பு, கடுகுரோகணி, முந்திரிகை முன்போல.

## கெர்ப்பசுரத்துக்கு

நன்னரி, சிற்றமட்டி, பேரமட்டி சீந்திற்றண்டு, மாகாளிக்கிழங்கு, நிலப்பனை, வெட்டிவேர், இலாமிச்சு, தேவதாரு, மதுரம், சுக்கு சமன் தேன்மேற்பொடி

## பிள்ளைப்பெற்றவள் தாபசுரத்துக்கு

சிற்றமட்டி, பேரமட்டி, நிலவேம்பு, எருக்கலம்வேர், சீந்தில், முத்தற்காசு, சுக்கு, பற்படாகம், சிறுதேக்கு சமன் திப்பிலி மேற்பொடி

## மேகசுரம் சிலேற்பனசுரத்துக்கு

திரிபலை, தேவதாரு, மரமஞ்சள், பேய்த்தும்மட்டி, முத்தற்காசு சமன் தேன், மஞ்சள்மா மேற்பொடி

## கிராணிக்கு

அதிவிடயம், சுக்கு, முத்தற்காசு, சிந்தில் சமன் அவித்து ஐந்துநாளைக்குத் தேன்மேற்பொடியிட்டுக் கொடுக்கவும்.

## அதிசாரசுரத்துக்கு

பெருமாப்பட்டை, குடசப்பாலைப்பட்டை, முத்தற்காசு, அதிவிடயம், சுக்கு, ஓமம் அவித்துத் திப்பிலித்தூள் தேன்மேற்பொடி

மஞ்சள், அதிமதுரம், குடசப்பாலைப்பட்டை, முத்தற்காசு, ஆடாதோடையிலை அவித்துத் தேன்மேற்பொடி.

சிந்தில், வட்டத்திருப்பி, பெருமுத்தற்காசு, சுக்கு, சிவந்தபாலைவேர் அவித்துத் தேன்மேற்பொடி

## இரத்தஅதிசாரத்துக்கு

குடசப்பாலைப்பட்டை, மாதளைவேர்-பூ-பழத்தோடு, முத்தற்காசு, அதிவிடயம், சுக்கு சமன் அவித்துக்கொடுக்கவும்.

கடுக்காய், கற்கடகசிங்கி, நாயுருவிவேரும்-கொழுந்தும், கற்றாழைமடல், நற்சீரகம், வெந்தயம் சமன் முன்போல

## சீத அதிசாரத்துக்கு

வில்வப்பழம், காட்டாத்திப்பூ, வெட்டிவேர், பலாசம் பட்டை, ஆனைலத்தி, சமன் அவித்து தேன்மேற்பொடி

காட்டாத்திப்பூ, கருங்காலிவேரும்-பட்டையும், வில்வம்வேர், திப்பிலி, அத்திப்பட்டை சமன் தேனும் முலைப்பாலும் மேற்பொடியிட்டுக்கொடுக்கக் குழந்தைகளதிசாரமுந் தீரும்.

நன்னாரிவேர், கோரை, ஆவரைவேர்ப்பட்டை, வில்வப்பழச்சதை, மாதளம்வேர், நற்சீரகம், வெந்தயம், ஓமம், கடுக்காய் கற்கடகசிங்கி அவித்து சர்க்கரைமேற் பொடி-தூவிக் கொடுக்க இரத்தஅதிசாரம் சீதஅதிசாரம் கடுப்பு நீங்கும்.

### வாதவெப்புக்கு

ஆடாதோடை வேர் பிடி-க, சீந்திற் தண்டு பிடி-க அவித்து ஆமணக்கெண்ணெய் மட்டாய்க்கூட்டி ஏழு நாட் கொள்ளவும்.

### வாதசூலைக்கு

சிற்றாமணக்குவேர், வில்வம்வேர், கண்டங்கத்தரி சிறு வழுதலை, சிறுபீளை, நெருஞ்சி, திரிகடுகு சமன் எட்டொன் றாய்க்காய்ச்சி எவச்சாரம், பெருங்காயம் பொடித்துத் தூவி ஏழு நாட்கொள்ளவும்.

### வயிற்றுவலிக்கு

கறுத்தக்கழற் கொடிப்பருப்பு, காயம், சுக்கு, வெள் ளுள்ளிசமன் அரைத்து இளவெந்நீரிற்கலக்கிக்கொடுக்க வலி வாதசூலை, அசீரண வலி தீரும்.

### தீபனத்துக்கு

வெண்ணொச்சிக்கொழுந்து, கொடுவேலிவேர், ஓமம், இந்துப்பு, சுக்கு சமன் அரைத்து மோரிற்கலக்கி எட்டொன் றாய் வற்றவைத்திறக்கிக்கொடுக்கத் தீபனமுண்டாகும்.

### வயிற்றிற்புழுவுக்கு

முத்தற்காசு, எலிச்செவி, முருங்கைவேர், திரிபலைசமன் கூட்டி எட்டொன்றாய் வற்றவைத்திறுத்து வாய்விளங்கம் திப்பிலி மேற்பொடிதூவிக் கொடுக்க வயிற்றுப்புழுச்செத்து விழும்.

கருங்காலி, சிவதைவேர், குடசப்பாலைப்பட்டை, வேப் பீர்க்கு, திரிபலை, திரிகடுகு, வசம்பு சமன் பசுமூத்திரத்தி விட்டு எட்டொன்றாய்க்காய்ச்சிக் கொடுக்கப் புழு விழும்.

எலிச்செவி, முத்தற்காசு, மாதளம்வேர்ப்பட்டை, மாங் கொட்டைப்பருப்பு, வாய்விளங்கம், முருங்கையீர்க்கு, கடுக் காய் எட்டொன்றாய்க் காய்ச்சி வாய்விளங்கம் மேற்பொடி தூவிக் கொடுக்கவும்.

ஆடுதின்னாப்பாலைவேர்-விதை, முசுட்டைக்கொடி, வாய்விளங்கம் அவித்துக் கொடுக்கப் புழு விழும்.

## நீர்க்கடுப்புக்கு

நெருஞ்சி, சிறுபீளை, ஆடாதோடையிலை, கொன்றைப் பழச்சதை, கடுக்காய் சமன்கூட்டி எட்டொன்றாய்க் காய்ச்சி சற்றுத்தேன் கூட்டிக் குடிக்க மூத்திரக் கிரிச்சினம் நீர்க் கடுப்பு இவைதீரும்.

நீற்றுப்பூசினிக்காயை இரண்டாய்க்கீறி குடல் தள்ளி அதற்குள் நெய் நாழி-க தேன் நாழி-க சீனி நாளி-க பேயன்பழம்-உo இவையெல்லாம்கூட்டிஊறவிட்டுக் கலக்கி காலைமாலைகளில் உரிநீர் குடித்துவர பிரமியம், பித்தம், தலை சுழற்சி, உடம்பெரிவு தீரும்.

## நீரடைப்புக்கு

வெண்கொடுப்பைவேர், சிறுகீரைவேர், வகை பலம்-உ சிறுபீளைவேர் பலம்-ச மாவிலங்கை வடக்குவேர் பலம்-இ தேற்றாவிரை ரு கூட்டி எட்டொன்றாய்க் காய்ச்சிச் சிற்றா மணக்கெண்ணெய் கூட்டிக்குடிக்க நீர்ச்சிறுப்பு, கல்லடைப்பு முதலியவைதீர்ந்து நீரிறங்கும்.

## கிரிச்சினம் மேகம் முதலிய வற்றிற்கு

வில்வம்வேர், மருதம்பட்டை, வெந்தயம், கராம்பு, ஏலம், முல்லை, ஆவரை, இலந்தை, கொடுப்பை, நன்னாரி, வல்லாரல், சிற்றமட்டி சமன் ஐந்திலொன்றாய்க் காய்ச்சி யிறுத்து அதில் மதுரம், வெந்தயம், கராம்பு, அதிவிடயம் செண்பகப்பூ, ஆவரையல்லி, கற்றாழஞ்சருகு அரைத்த தூள் மேற்பொடிதூவிக் குடிக்க மூத்திரக் கிரிச்சினம், புலால்மேகம், இலவணமேகம் இவைதீரும்.

## நீரடைப்புக்கு

வெள்ளையுள்ளி-பலம்-க. செம்முருங்கைக்காம்பு, மூங்கிற்றேல், அறக்கீரை, நன்னாரி வகை-பிடி க. மிளகு-ஆழாக்கு க. மிளகைமட்டும் வெடிக்க வறுத்து ஏனையவற்றையுங் கூட்டி நாலுபடிதண்ணீர் ஒருபடியாய் வற்றவைத்து இறுத்து பொரிகாரம் பொரித்ததூள் மேற்பொடியிட்டுக் குடிக்க நீருடைக்கும்.

சிறுகீரை, சிறுபீளை, பொன்னாங்காணி, செப்புநெருஞ்சி, ஓரிதழ்த்தாமரை, நன்னாரி, முத்தற்காசு சமன் முன்போலக் கஷாயமிட்டுக் குடிக்க நீரிறங்கும்.

## நீரழிவுக்கு

ஆவரை, கடலிருஞ்சி, கட்டுக்கொடி, நாவல், மருது, நாற்பால்மரத்திற்பட்டை, ஓதி, கிளுவை இவை-பட்டை நாவல்விரை, தேற்றாவிரை, மரமஞ்சள் முத்தற்காசு, இலாமிச்சம்வேர், திரிபலை-இவை இடித்து எட்டொன்றாய்க் காய்ச்சிக் குடிக்கவும்.

வட்டத்திருப்பி, மஞ்சள், மரமஞ்சள், திரிபலை, கருவேப்பந்தண்டு, அதன்வேர், தேற்றாவிரை, கடலிருஞ்சிப்பட்டை, ஆவரைவிரை-வேர், கருங்காலி வயிரம், ஆலம்வேர், மூங்கிலிலை, நிலப்பனை-வகை-பலம்-இ. முருங்கைப்பட்டை பலம்-க. இவை கூட்டி எட்டொன்றாய்க்காய்ச்சி ஆகாரத்தின்பின் கொள்ள தாத்தோடு கூடிய நீரழிவுதீரும்.

தேற்றாவிரை பலம்-க நெல்லிமுள்ளி பலம்-உ மஞ்சள் பலம்-ங முருங்கைப்பட்டை பலம்-ச கடுக்காய் பலம்-ரு இவைஇடித்து எட்டொன்றாய்க்காய்ச்சி நேரம் கஉ காசிடை கஷாயம் உட்கொள்ளவும்.

நீரழிவிற் தாகந்தீர

திரிபலை, வட்டத்திருப்பி, முத்தற்காசு, நாவற்பட்டை, கடலிருஞ்சிப்பட்டை, ஆவரைவேர்,-விரை,-பட்டை, பஞ்சள் பறங்கிப்பட்டை எட்டொன்ருய்க் காய்ச்சிக்கொள்ளத் தாகம்போம்.

கஷாயவிதி முற்றிற்று.

---

## சரக்குச்சுத்தி

## அப்பிரகம்

### அதன்வகை

அப்பிரகம்-நாலுவகையாயிருக்கும். அவை: மண்டுக அப்பிரகம், வச்சிர அப்பிரகம், நாகஅப்பிரகம், பிஞக அப்பிரகம் என்பன.

### சோதனை.

உலையிலிட்டுருக்க மண்டுக அப்பிரகம் தத்திவிழும். வச்சிரஅப்பிரகம் புகைந்துபோம். நாகஅப்பிரகம் பாம்புபோற் சீறும். பிஞகஅப்பிரகம் உருகிச்சிவக்கும்

### குணம்

மண்டுக அப்பிரகம் நோயைஉண்டாக்கும். வச்சிர அப்பிரகம் எல்லாநோய்களையும் போக்கும். நாக அப்பிரகம் சிலேற்பனத்தை உண்டாக்கும். பிஞகஅப்பிரகம் வாதத்தைப்போக்கும்.

### நிறம்

செம்மை, பொன்மை, வெண்மை, கருமை என நால்வகையாயிருக்கும். அவற்றுள் செம்மை வாதத்தைப் போக்கும். பொன்மை உட்டணத்தைப் போக்கும். வெண்மை சிலேற்பனத்தைப்போக்கும். கருமை சகலநோய்களையும் போக்கும்.

## சுத்தி

கரியநிறமுள்ள கிருட்டின அப்பிரகத்தை உலைமுகத்திற் சிவக்கக்காய்ச்சி கோசலத்திற் ௧௦ முறையும் வெள்ளாட்டுச்சலத்திற் ௧௦ முறையுந் தோய்த்து, மேற்படி இரண்டுவகைச் சலமும் சமனிடை கலந்து ஓர் மண்பாத்திரத்திவிட்டுமூடிச் சீலைமண்செய்து பசுத்தொழுவத்தில் குழிதோண்டிப் புதைத்துவைத்து கரு நாட்கள் சென்றெடுக்கவும்.

## நவநீதம்.

பின் காரமான காடியில் ௩ நாளூறவைத்து எடுத்துலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்துப் பொடியாக்கி அப்பொடியை மறுபடியும் மூன்றுநாட் காடியிலூறவிட்டு எடுத்து நெல்லு அரைப்பங்கு கூட்டி சீலையிற்கிளிகட்டிக்கொண்டு, பெரிய சட்டியில் காடிவிட்டு அதிற்றேய்த்துத் தோய்த்துக் கையினாற் கசக்க அப்பிரகம் சட்டியிலிறங்கும். காடியைத்தெளியவிட்டு இறுத்துவிட நவநீதம் அடியில் உறைந்திருக்கும்

---

## இரசம்.

இரசத்தைக் குழிக்கல்லிலிட்டு விநாயகருக்குப் பூசைபுரிந்து மஞ்சட்பொடிகூட்டி இரண்டு நாழிகை அரைத்து அப்படியே வெயில்முகத்தில் இரண்டுநாழிகைவைத்து இரண்டாய்மடித்த சீலையிற்பிழிந்து,ஒட்டறையிலும் அப்படியே செய்து பிழிந்துகொள்ளவும். பின் சந்தனம், தேவதாரு, முருங்கைப்பட்டை, வெற்றிலை, பாகலிலை, நிலப்பனைக்கிழங்கு, வேலிப்பருத்தியிலை, பலாசம்பட்டை, கொடுவேலிவேர், ஊமத்தையிலை, கையாந்தகரையிலை, வெள்ளைச்சாரணை இந்தப் பன்னிரண்டுவகைச் சாறுகளிலுந் தனித்தனி உ நாழிகை திட்டமாய் விட்டுச் சாறுசுவற அரைத்து மடித்த சீலையிற் பலதடவை பிழிந்துகொள்ளச் சுத்தியாம்.

இரசத்தை முன்போல மஞ்சட்பொடியிலும் ஓட்டறையிலும் சுத்திசெய்துகொண்டு பின் நெல்லிக்காய்க்கெந்தகம் சமன்கூட்டி வெற்றிலைச்சாறுவிட்டு இரசம் தோற்றுமல் மறையும் வரைக்கும் அரைத்து வெயிலில் உலர்த்திப் பொடித்து உயரமானசட்டியிலிட்டு வேறொரு சட்டிகொண்டு மூடிச் சீலைமண்செய்து உலர்த்தித் தீபாக்கினியாக எரிக்க மேற்சட்டியில் இரசம் பதங்கித்திருக்கும். இவ்வாறு இரண்டு மூன்றுமுறை மடக்கிமடக்கிச்செய்ய இரசத்திலுள்ள எல்லாத் தோஷங்களும் நீங்கி உயர்ந்த சுத்தியாகும்.

மெல்லிய சீலையை நாலாய் மடித்து அதில் இரசத்தைப் பலதடவை பிழிந்து பின் இரட்டைமடிப்புச்சீலையில் கிளிகட்டி சுத்தலத்தில் தோலாயந்திரம் கட்டி ஒருநாழிகை எரித்து எடுத்து, அழிஞ்சில்வேர்ச் சாறும் கொடுவேலி வேர்ச்சாறும் சமன் கலந்து செங்கற்பொடியும் மொளிமஞ்சட்பொடியும் தூவிக் கலக்கி அதில் மேற்படி இரசத்தை உ-நாழிகை மத்தித்துலர்த்தி வடிகட்டிப் பின் கற்றாழஞ்சாற்றில் உ-நாழிகை மத்தித்து வடிகட்டச் சுத்தியாகும்.

---

## கேந்தகம்

இரும்புச்சட்டியில் கெந்தகமிட்டு அது முழுக ஆமணக்கெண்ணெய் விட்டு தீபாக்கினி யிட்டெரித்துப் பாலிற் சாய்க்கச் சுத்தியாகும்.

வாழைமட்டைச்சாறும் பசுப்பாலும் சமன்கலந்து பானையில் விட்டுப் பானைவாயைக் கம்பிளியினல் வேடுகட்டி வேட்டின்மேல் கெந்தகத்தைவைத்து சட்டிகொண்டு மூடிச் சீலைமண்செய்து உலர்த்திப் பூமிமட்டத்தின் கீழ்ப்புதைத்து

மேலே எருவடுக்கிப் புடம்போடக் கெந்தகமுருகிப் பானைக்குள் விழுந்திருக்கும். இப்படி இரண்டு மூன்று முறை செய்ய நல்ல சுத்தியாகும.

கையாந்தகரையிலைச்சாறு, ஊமத்தையிலைச்சாறு, எள்ளிலைச்சாறு இவற்றில் ஒன்றும் நெய்யும் சமன் கலந்து இரும்புக்கரண்டியில் கெந்தகமும் மேற்படி கலவையும்விட்டு உருக்கி வெள்ளாட்டுப்பாலிற் சாய்க்கவும். இப்படி எழுமுறை சாய்க்கச் சுத்தியாகும்.

## சாதிலிங்கம்.

சாதிலிங்கத்தை முலைப்பாலிலாயினும் எலுமிச்சம்பழச் சாற்றிலாயினும் அரைத்துக் கொள்ளச் சுத்தியாம்.

## அரிதாரம்

அரிதாரத்தைப் பொடிசெய்து பூசினிக்காய்த்தண்ணீரில் அரைத்து மெழுகுபோலானபின், இரட்டைமடிப்புச் சீலையிற்கட்டி, பூசினிக்காய்ச்சாறு, சுண்ணாம்புநீர், காடி இவற்றில் வகைக்கு ஒருசாமம் தோலாயந்திரத்தில் எரித்தெடுக்கச் சுத்தியாகும்.

## தாளகம்.

தாளகத்தை மடலாக உரித்து நான்காக மடித்தவெள்ளைச்சீலையில் கிளியாகக்கட்டி, கோசலத்திலாகுதல், காடியிலாகுதல் மூன்றுநாளைக்குத் தோலாயந்திரத்தில் எரியிடச் சுத்தியாகும்.

## மனோசிலை.

மனோசிலையைச் சிறு சிறுதுண்டுகளாகச்செய்து இரட்டைமடிப்புச் சீலையிற்கட்டி வெள்ளாட்டுச் சலத்தில் மூன்று நாளைக்குத்தோலா யந்திரத்தில் எரியிடச் சுத்தியாகும்.

## வெள்ளைப்பாஷாணம்.

வெள்ளைப்பாஷாணத்தைத் தேனில் அரைத்துத் திரண்ட கம்பிகளாக உருட்டி வளையமாடி இரட்டைமடிப் புச்சீலையில் முடிந்து கோசலம், கொள்ளுச்சாறு, காடி இவை களில் வகைக்கு நாலுசாமம் தோலாயந்திரமாகக்கட்டி எரியி டச் சுத்தியாகும்.

## கெவுரிபாஷாணம்.

கெவுரியை எலுமிச்சம்பழச் சாற்றில் நாலுநாழிகை அரைத்து மிளகளவுருட்டி இரட்டைமடிப்புச் சீலையில் முடிந்து சுண்ணும்பு நீரில் தோலாயந்திரமாகக்கட்டி ஒருநாள் எரியிடச் சுத்தியாகும்.

## தொட்டிபாஷாணம்.

தொட்டிபாஷாணத்தைப் பொடிபண்ணி இரட்டை மடிப்புச்சீலையில் முடிந்து கோசலத்தில் தோலாயந்திரமாகக் கட்டி எரிக்கச் சுத்தியாகும்.

## எலிப்பாஷாணம்.

எலிப்பாஷாணத்தைப் பொடிசெய்து இரட்டைமடிப் புச்சீலையில் முடிந்து சுண்ணும்பு நீரில் ஒருநாள் தோலாயந் திரமாகக்கட்டி எரிக்கச் சுத்தியாகும். தேனில் ஒருசாமம் வேகவைத்தாலும் சுத்தியாகும்.

வசநாவி-வெள்ளாட்டுச்சலத்தில் மூன்றுநாளூறவைக் கச்சுத்தியாகும்.

நாவி-சிறுகீரைவேரும் நாரத்தம்பழமும் அரைத்துக் கிளாவிலைச்சாற்றிற் கலக்கி அதில் நாவியை ஊறப்போட்டு கொதிப்பித்தெடுக்கச் சுத்தியாகும்.

## கற்துத்தம்.

கற்றுத்தம் பொடிசெய்து இரும்புக்கரண்டியிலிட்டு பசு நெய்யும் கூடவிட்டு எரித்து ஏழுமுறை பொங்கினபின் எடுக்கச் சுத்தியாகும்.

## பாற்துத்தம்.

பாற்துத்தம் பொடிசெய்து இரட்டைமடிப்புச்சிலையில் முடிந்து சுண்ணும்பு நீரில் ஒருநாள் தோலாயந்திரமாகக்கட்டி எரிக்கச் சுத்தியாகும்.

## மயிற்துத்தம்

மயில்துத்தம்பொடிசெய்து இரட்டைமடிப்புச் சிலையில் முடிந்து தோலாயந்திரமாக கழுதைச்சலத்தில் ஏழுசாமமும் கோசலத்தில் இரண்டுசாமமும் எரிக்கச் சுத்தியாகும்.

தயிர்விட்டரைத்து வில்லைதட்டி ஓட்டில் சற்றுவெதுப்பியெடுக்கச் சுத்தியாகும்.

## கரியபோளம்-வெள்ளைப்போளம்

காடியில் ஒருநாள் அரைத்து வெய்யிலில் வைத்து உலர்த்தியெடுக்க இரண்டுபோளமும் சுத்தியாகும்.

## சலாசத்து

நெய்தற்கிழங்குச் சாற்றில் ஒருநாழிகை அரைத்து வெய்யிலில் உலர்த்தியெடுக்கச் சலாசத்துச் சுத்தியாகும்.

## கர்ப்பூரசலாசத்து

நெய்தற் கிழங்குச்சாற்றிலும் தாமரைவளையச்சாற்றிலும் ஒவ்வொருசாமமரைத்து வெய்யிலில் உலர்த்தியெடுக்கச் சுத்தியாகும்.

## குக்கில்

திரிபலைக்கஷாயத்தில் இரண்டுசாமம் தோலாயந்திரமாய்க் கட்டியெரிக்கச்சுத்தியாகும்.

## நேர்வாளம்

ஓடும் முளையும் போக்கிப் பருப்பெடுத்துக் கோமயத்தில் வேகவைத்து உலர்த்திப் பின் பசுநெய்தெளித்து வறுத்தெடுக்கச் சுத்தியாகும்

எருமைச்சாணியைக் கரைத்து அதில் வேகவைத்துக் கழுவிப்பின் பசுப்பாலிலும் எலுமிச்சம் புளியிலும் வேகவைத்து தோலியும் நஞ்சும்போக்கி எடுக்கச்சுத்தியாகும். நெய்தெளித்து வறுப்பதனால் கடுப்பு, உவாந்தி முதலிய துர்க்குணங்கள் நீங்கும்.

## எட்டிவிரை

முளையைநீக்கிவிட்டு தேற்றாவேர்ச்சாற்றில் உ-நாழிகை வேகவைக்கச் சுத்தியாகும்.

## ஊமத்தைவிரை.

எலுமிச்சம்பழச்சாற்றில் உ-நாழிகை ஊறவைக்கச் சுத்தியாகும்.

## பஞ்சலவணம்

இந்துப்பு-காடியிலிட்டு வெய்யிலில் வைத்தாலும், வெள்ளாட்டுச்சலத்தில் வேகவைத்தாலும் சுத்தியாகும்.

சிவந்தஉப்பு- சிவந்தபசுவின்சலத்திலும் எலுமிச்சம் பழச்சாற்றிலும் ஊறவைக்கச் சுத்தியாகும்.

பொட்டிலுப்பு-கோசலத்திலாவது மோரிலாவது இட்டு வெய்யிலில்வைக்கச் சுத்தியாகும்

வளையலுப்பு-புளியிலைச்சாற்றில் நனைத்து வெய்யிலில் வைக்கச்சுத்தியாம்.

கல்லுப்பு-ஓட்டிலே மூன்றுமுறை வறுக்கச் சுத்தியாகும்.

திப்பிலி-கொடுவேலிவேர்ச்சாற்றில் நனைத்து உலர்த்தவும்.

அத்தித்திப்பிலி-காடியில் வெள்ளாட்டுச் சலத்தில் நனைத்து உலர்த்தவும்.

மிளகு-மோரில் நனைத்து உலர்த்தவும்.

ஓமம்-சுண்ணாம்புநீரில் நனைத்து உலர்த்தவும்.

இருசீரகம்-வெய்யிலில் உலர்த்தியெடுக்கவும். அதிசார ரோகிக்குச் சிறுகவறுத்துக்கொள்ளவும்.

காரவகை ரு

வெண்காரம்-பொரிகாரம்-இவற்றைப் பொரித்துக்கொள்ள-எலுமிச்சம்புளியிலாவது காடியிலாவது ஊறவைத்து உலர்த்தச் சுத்தியாகும்.

சவர்க்காரம்-அப்பளாக்காரம்-கோசலத்தில் அரைத்து வெய்யிலில் உலர்த்தச் சுத்தியாகும்

சீனக்காரம்-உலைமுகத்தில் ஊதியெடுக்கச்சுத்தியாகும்.

சாரவகை ரு

எலுமிச்சம்பழச்சாற்றில், கழுநீரில், காடியில் அரைத்து வெய்யிலில் உலர்த்தச் சுத்தியாகும்

பெருங்காயம்-தாமரையிலைச்சாற்றி லரைத்து வெய்யிலில் உலர்த்தவும்.

நவரத்தினங்கள் லோகங்கள் இவற்றின் சுத்தி பற்பசிந்தூரவிதியிற் பெறப்படும்.

---

## நஞ்சுமாற்று.

இரசம்முறிய-நீர்ப்பூலாச்சாறு ஆழாக்கு வீதம் மூன்று நாட்காலையில் கொள்ள இரசத்தின் வேகந்தணியும். கோழி முட்டை வெற்றிலை இவையும் இரசத்துக்கு முறிப்புகளாம்.

கெந்தகத்துக்குமாற்று-பூசினிக்காய்ச்சாறு சதகுப்பை

நாவிக்கு- சிறுகீரை, கையாந்தகரை, மிளகு

பாஷாணத்துக்கு-மிதிபாகல், அவுரி, மிளகு

எட்டிக்கு-நாவற்பட்டை, வாழைப்பூ, இலவம்பிசின், விளாவேர், மாவிலங்கம்பட்டை, தேவதாளியிலை, பெருங்காயம் இவற்றில் ஒன்ருயினும் பலவாயினும் காடியில் அரைத்துக்கலக்கிக் குடிக்க.

பூமத்தைக்கு-தாமரைப்பூ, தாமரைவளையம், பருத்திக்காய்.

அலரிக்கு-கடுக்காய்.

கள்ளிக்கு-ஆவரை, நெல்லிப்பட்டை.

கள்ளிப்பாலுக்கு-ஆவரையிலை மோரில், அல்லது மதுரம், எள்ளு, சர்க்கரை பாலில்.

எருக்கலம்பாலுக்கு-தேங்காய்ப்பால், எள்ளு, இயங்கம்பழம்.

எலிமருந்துக்கு-நிருவிஷம்.

நேர்வாளம் கைதப்பினல்-வசம்புகருக்கியவித்த நீரும், தேனும் அல்லது பசுச்சாணி பிழிந்தநீர்.

அபினுக்கு-துரிசை எலுமிச்சம்புளியிற் கொடுத்தாயினும் அல்லது வசம்பும் உப்பும் வெந்நீரிற் கொடுத்தாயினும் சத்தியெடுக்கச் செய்துபின் தேங்காய்ப்பால், மேனியிலை கோழிமுட்டை வெள்ளைக்கரு இவைகொடுக்க.

குன்றிவிரை விஷமித்தால்-சுக்கு.

விஷங்கள்தின்ருல் - முன்போலச் சத்திக்கச்செய்து பின் சர்க்கரை, மஞ்சள், ஓட்டறை, பூசினிக்காய் இவைபாலில் அல்லது வெந்நீரில் குடித்தாலும், சிறுகீரைவேர், அவுரி வேர், மிளகு அரைத்துப் பாலிற்குடித்தாலும், அவுரிவேரும்

பருத்திப்பருப்பும் காடியிற்குடித்தாலும், விளாம்பழம் இளநீரிற் குடித்தாலும் முறியும். அவுரிவேர், மிளகு, காண்டாமிருகக்கொம்பு இவை எல்லாவிஷங்களுக்கும் பொதுவான மாற்ருகும்.

கைவிஷத்துக்கு--அழிஞ்சில் வேர்ப்பட்டை வெந்நீரிலரைத்துக் கொடுத்துச் சத்திியெடுப்பிக்க. இப்படி மூன்று நாட்செய்தபின் கீழ்ச்சொல்லிய மருந்துகளைக்கொடுக்கவும்.

1. வேப்பம்பட்டை, ஒட்டறை, உள்ளி, கடுகுரோகணி, திப்பிலி வெந்நீரில் கரைத்துக்குடிப்பது.

2. வாகைப்பஞ்சாங்கம் பொடிசெய்து வெந்நீரில் குடிப்பது.

3. மஞ்சாடிவேர், மதுரம், மஞ்சள், முந்திரிகைப்பழம் வெந்நீரில் குடிப்பது.

4. பேய்ச்சுரைவேரும் திப்பிலியும்.

5. சிவதை, ஒட்டறை, கடுகுரோகணி, சர்க்கரை பசுப்பால்.

6. சிறுகீரைவேரும் ஒட்டறையும்-பாலில் குடிப்பது

7. திப்பிலி, இந்துப்பு, கடுக்காய், மஞ்சள் வெந்நீரில் குடிப்பது.

8. சிற்றகத்தி விரையரைத்துப் பாலில்குடிப்பது.

9. மேற்படி இலையவித்தநீரும் பாலும் கலந்து குடிப்பது.

10. அவுரிவேர் பத்துப்பலமும் மிளகும் அவித்துப் பலநாட்களுக்குத் தொடர்ந்து குடிப்பது.

உணவுவகையில்,

மாம்பழத்துக்குமாற்று - தேங்காய்ப்பால், பசுப்பால், தேன்.

பலாப்பழத்துக்கு-தேன், வெல்லம், சுக்கு, மாம்பருப்பு.
வாழைப்பழத்துக்கு-தேன், வெல்லம்.

பாற்சோறு மந்தித்தால்-மோர்.

நெய்க்கு-வெந்நீர்.

வாழைக்காய்க்கு-மிளகு கூட்டிச்சமைக்க.

கிழங்குவகை, அகத்திப்பூ முதலியவற்றிற்கு எலுமிச்சம்புளி கூட்டிச்சமைக்க.

ஆட்டிறைச்சிக்குமாற்று-சாதிக்காய்.

கோழியிறைச்சிக்கு-முருங்கை.

முயலிறைச்சிக்கு-எலி.

எலியிறைச்சிக்கு-மோர், இவ்வாறு பிறவற்றிற்குமறிவர்

---

## பற்பசிந்தூரவிதி

### அப்பிரசிந்தூரம்.

அப்பிரக நவநீதத்தைக் குழிக்கல்லிலிட்டு, பசுநெய்யில் அரைத்து அடைதட்டி உலர்த்தி மடக்கிலிட்டு மூடிச் சீலைமண்செய்து கெசபுடமிடவும். இப்படி நெய்யில் 3 புடமும், கொள்ளுச்சாறு, எருக்கலம்பால், ஆலம்பால் இவற்றில் வகைக்கு ௩ புடமும் ஆக ௧௨ கெசபுடமும் ஆனபின்; காட்டுத்துளசி, நாயுருவி, எருக்கலம்பால், ஆலம்பால், செப்புநெருஞ்சி, முட்பலாசம்பட்டை, அரசம்பட்டை, ஆலம்பட்டை, அத்திப்பட்டை, இத்திப்பட்டை, பொன்னாங்காணி, தண்ணீர்விட்டான் கிழங்கு, கொட்டைக்கரந்தையிலை, நொச்

சியிலை, ஆடாதோடையிலை, நிலக்குமிழ், குமிசவேர், இயங்கம்வேர், கண்டங்கத்தரிசமூலம், பூவரசம்பட்டை, நெய்தற்கிழங்கு, எள்ளெண்ணெய், எள்ளுவேர், கற்றாழைமடல் முருங்கைவேர்ப்பட்டை, கீழ்காய்நெல்லிசமூலம், எருக்கலம்வேர், நொச்சிவேர் இவற்றின் சாற்றால் தனித்தனி ஒவ்வொருபுடமாக உஅ புடம்போட்டு பின் ஆலம்விழுதுக்கஷாயம், மேற்படி பட்டைச்சாறு, இஞ்சிச்சாறு, கோரைக்கிழங்குக்கஷாயம், எலுமிச்சம்புளி, சுண்டை இந்த ஆறுவகையிலும் வகைக்குப் பத்துப்புடமாக கூ௦ கெசபுடம் போட்டெடுக்கச் சிந்தூரமாம்.

## அப்பிரகசிந்தூரம் உ.

அப்பிரக நவநீதம் குழிக்கல்லிவிட்டு செவ்விளநீர்விட்டு நன்றாயரைத்து அடைதட்டி ஆலம்பழுத்தல் கீழும்மேலும் நன்றாங்கிலைவைத்து ஓட்டில்வைத்து மூடிச் சீலைமண்செய்து கெசபுடம்போடவும். இப்படி செவ்விளநீரில் க௦ கற்றாழஞ் சாற்றில் க௦ செருப்படிச்சாற்றில் ௬௦ சிறுகீரைச்சாற்றில் க௦ கீழ்காய் நெல்லிச்சாற்றில் க௦ தண்ணீர்விட்டான் கிழங்குச் சாற்றில் க௦ பொன்னாங்காணிச்சாற்றில் க௦ செப்பு நெருஞ்சிச்சாற்றில் க௦ நாயுருவியிலைச்சாற்றிற் க௦ நொச்சியிலைச் சாற்றில் க௦ ஆக க௦௦ கெசபுடமும் போட்டபின்; சாயவேர் க௦ பலமிடித்து பதக்குநீரிற்போட்டு மேற்படி சிந்தூரம் கடுத்தமான வெள்ளைப்பிடவையிற் கிளிகட்டி தோலாயந்திரமாகச் சுத்திசெய்யவும். பின் பொன்மெழுகு க௦ பலமிடித்து குறுணி தண்ணீரில் முன்போலச் சுத்திசெய்து சிந்தூரத்தை எடுத்து செம்பரத்தம்பூச்சாறு எலுமிச்சம்புளிவிட்டரைத்து சூரியபுடத்தில் வைத்தெடுக்க முருக்கம்பூப்போலிருக்கும்.

மேற்கூறிய சிந்தூரத்தையும் இவ்வாறே சுத்திபண்ணிக்கொள்ள நன்றாகும.

அனுபானமும், தீரும்நோயும் { இவை மேற்கூறிய இரண்டு சிந்தூரங்களுக்கும் ஆவனவாம். }

பிரமாணம்— மாவிடை. இஞ்சிச்சாற்றில் ௧௦ நாட்கொள்ளப் பயித்தியம்தீரும். சீனியும் தேனும் கலந்து ௩ நாட்கொள்ளவாத வாயுதீரும். கோழியவித்தநீரில் முசலகண்டன் தீரும். பொன்னாங்காணிச் சாற்றில் உட்டணரோகம்தீரும். சீந்திற்றண்டுநீரில் ௩ நாட்கொள்ளப் பிரமேகந்தீரும். கோரைக்கிழங்குச்சாற்றிற் கொள்ளத் தாதுவிருத்தியும் அழகும் உண்டாம். கீழ்காய் நெல்லிச்சாற்றில் வெள்ளைசாய்தல்தீரும். ஆவரைத்தயிலத்தில் ௨௦ நாட்கொள்ள நீரழிவு இருபதுவகையுந்தீரும். கும்மடிக்குழம்பில் ஒன்றைவிட்டொருநாட்கொள்ள வயிற்றில் வியாதி, மகோதரம், பெருவயிறு, காமாலை, விஷபாகந்தீரும். குறுந்தொட்டிச்சாற்றில் ௩ நாட்கொள்ளச் சுரந்தீரும். கர்ப்பூராதிச்சூரணத்தில் ௧௦ நாட்கொள்ள ஈழை, இருமல், காயாசிவாதம், சிவாதகாசம், மந்தாரகாசம், மேலிளைப்பு, உப்புசம் தீரும். ஏலாதிச்சூரணத்தில் ௪௦ நாட்கொள்ள பித்தம், உட்டணம் தீரும். ஆடாதோடை நெய்யிலாதல் திப்பிலாதிசூரணத்திலாதல் ௪௦ நாட்கொள்ள சிலேற்பனத்திலெழுந்த நோய் எல்லாந்தீரும்.

## அப்பிரகரசசிந்தூரம்.

அப்பிரக நவநீதம் பல ௪௦ சுத்திசெய்த இரசம், கெந்தகம் வகை பலம் ௪ செவ்வாம்பற்சாறுவிட்டு ௩ நாலுசாமம் அரைத்து அடைதட்டி உலர்த்தி ஒருசட்டியிலிட்டு, சட்டிநிரம்ப அரசஞ்சாம்பலிட்டு மறுசட்டிகொண்டு மூடிச் சீலை

மண் வலுவாய்ச்செய்து கெசபுடமிடவும். மறுபடியும் மருந்தைக் கல்வத்திலிட்டுக் கற்றாழஞ்சாறு விட்டரைத்து அடை தட்டிச் சட்டியிலிட்டு, சட்டிநிரம்பக் கற்றாழஞ்சோறுவிட்டு மூடிச் சீலைமண்செய்து முன்போற்புடமிடவும். சிந்தூரம் முருக்கம்பூப்போலிருக்கும்.

பிரமாணம் - பணவிடை. வாதத்துக்கு - திரிகடுகுப் பொடி தேன், ஈழை இருமல் காயாசிவாதம் முதலியவற்றிற்கு திப்பிலிப்பொடியும் தேனும். எலிகடிசிலேற்பனத்திற்கு-வேப்பெண்ணெய், கோசலம்; முருங்கைப்பட்டைச சாற்றில் ௧௦ நாட்கொள்ள பித்தகாசமும் மற்றும் பித்தத்திலெடுத்த ரோகம் எல்லாந் தீரும். தேனில் ௧௦ நாட்கொள்ளக் கடிவிஷந்தீரும்.

## இரசபற்பம்.

அடிகனத்த குண்டுச்சட்டியில் முக்காற்பாகம் கல்லுப்பிட்டு அதன்மேல் நாலுவிரற்கனம் செங்கற்பொடியிட்டு கையினால் நன்றாக அழுத்தி அதன்மேல் சிறு சிறு குழிகள் செய்து குழி ஒன்றுக்கு ஒருவிராகன்வீதம் சுத்திசெய்த இரசம்விட்டு, வேறொருசட்டியில் வெள்ளைச்சாரணையிலைச் சாறு தீற்றியுலர்த்தி அது கொண்டு மூடிச் சீலைமண்செய்து தீபாக்கினி, கமலாக்கினி காட்டாக்கினியாக ௧௨ சாமம் எரிக்கவும். எரிக்கும்போது மேற்சட்டியில் அக்கினிதாவாமல் அவதானமாகஇருக்கவேண்டும். எரித்தெடுக்க மேற்சட்டியில் இரசபற்பம் பதங்கித்திருக்கும்.

பிரமாணம்—நெல்லிடை. வெல்லத்திலிடக் கடிவிஷம் முதலிய சகலவியாதிகளும்போம்.

## இரசசிந்தூரம்.

சுத்திசெய்த இரசமும் கெந்தகமும் சமன்கூட்டி செருப்படிச்சாறுவிட்டு அசாமமரைத்து உருட்டி நிழலுலர்த்தி

எழுசிலைமண்செய்துலர்த்திய காசிக்குப்பியிலிட்டு மாக்கல்லா லடைத்துச் சிலைமண்செய்து அடிகனத்த குண்டிச்சட்டி யில் சிறுகத்துவாரமிட்டு, இரண்டுவிரற்கடை கல்லுப்பிட்டு அதன்மேற் குப்பியைவைத்துக் குப்பியைச்சூழ நாலுழிகல் லுப்பிட்டு அதன்மேலே நிறையமணலிட்டு, மடக்கினால் மூடிச் சிலைமண்செய்து அடுப்பேற்றி கமலாக்கினியாக கஉ சாமம் புகையாமல் எரித்து ஆறினபின் எடுக்கக் குப்பிவா யில் சிந்தூரம் பதங்கித்திருக்கும். குப்பியை நனைத்து உடைத்து மருந்தை எடுத்துக்கொள்ளவும்.

சிந்தூரத்துக்கு ஆறிலொன்று நாவியும் அவ்வளவு மிள கும் கூட்டி நன்குபொடிசெய்து குன்றியெடை அனுபான மறிந்துகொடுக்க அனேகநோய்கள் தீரும்.

## தங்கபற்பம்.

தங்கத்தகட்டுக்குச் செம்மண் பொதிந்து சிவக்கக் காய்ச்சியெடுக்கச் சுத்தியாகும். சுத்தியானதகட்டை மெல் லிதாயடித்து, பொன்னிமிளையை எலுமிச்சம்புளி விட்ட ரைத்துக் கவசம்செய்து அகலிலிட்டு மூடிச் சிலைமண்செய்து கெசபுடமிடப் பற்பமாம்.

## தங்கசிந்தூரம்.

பற்பமான தங்கத்துக்குச் சமன் சுத்திசெய்த சாதி லிங்கம்கூட்டி, எருக்கலம்பால், அரசம்பட்டைக்கஷாயம், பூனைக்கழற்சிவேர்க்கஷாயம், செருப்படிச்சாறு இவற்றில் தனித்தனி ஒருநாளரைத்து வில்லைசெய்து அகலிலிட்டு மூடிச் சிலைமண்செய்து கெசபுடமிடச் சிந்தூரமாம்.

## பூரணசந்திரோதயசிந்தூரம்.

தங்கம்-ரு இரசம்-கo கெந்தி-உo வீதம் கனுவத்தி விட்டு, நீர்முள்ளிச்சாற்றால் க-சாமம், செவ்விளநீரால் க-சாமம், மாதளையிலைச்சாற்றால் க-சாமம் அரைத்து உலர்த்திப் பொடிசெய்து ஏழுசீலை மண்செய்துலர்த்திய காசிக்குப்பியில் அரைக்குப்பிமட்டும்போட்டு, குப்பிவாயை வளப்பக் கல்லினால்மூடி, அடிகனத்தகுண்டுச்சட்டியில் நாலுவிரற்கடை மணவிட்டு அதன்மேற்குப்பிவைத்து, குப்பிவாய்வரைக்கும் மணல்கொட்டி அடுப்பேற்றி, தீபாக்கினி ஒருசாமம், கமலாக்கினி ஒருசாமம் எரித்தபின் காடாக்கினி கஉ-சாமம் எரித்து மூன்றுநாட்களுக்கு அப்படியே ஆறவிட்டு நாலாநாள் எடுக்க மாதளம்பூப்போலிருக்கும்.

பிரமாணம்-பணவிடை. திரிகடுகுவெதுப்பிப்பொடித்த தூள் வெருகடியும்தேனும்கலந்து இருவேளையும் நாற்பது நாட்கொள்ள ஈழை, இருமல், குன்மம், எலிகடி, வாயுக்கிரகணி முதலியன தீரும். சரீரம் வச்சிரமாகும். சாதிக்காய் சாதிபத்திரி, கராம்பு, அதிவிடயம், சமன்வெதுப்பிப் பொடித்ததூள் வெருகடியும் தேனும் கூட்டிக்கொள்ள கபாலசூலை, பீனிசம், நீராமை, நாசியாபீடம், கிரக அதிசாரந் தீரும்.

### பூரணசந்திரோதயசிந்தூரம் உ

தங்கம்-பலம்-க, இரசம்-பலம்-அ, கெந்தகம்-பலம்-கஅ, செம்பருத்திச் சாறுவிட்டு ஒருநாளும், கற்றாழஞ்சாறுவிட்டு ஒருநாளும் அரைத்து மணியாக்கி உலர்த்திக் குப்பியிலடைத்து முன்போல வாலுகாயந்திரத்தில் கஉ-சாமம் மந்தாக்கினியாய் எரித்தெடுக்கச் சிந்தூரம் மாந்துளிர்போலிருக்கும்.

சிந்தூரம் கண்டநிறைக்கு நாலிலொன்று பச்சைக்கர்ப்பூரமும், கராம்பு, சாதிக்காய், திப்பிலி, சமுத்திராச்சோகி விரை இவை நாலும் தனித்தனி பச்சைக்கர்ப்பூரமளவும், பச்சைக்கர்ப்பூரத்துக்கு நாலிலொன்று கஸ்தூரியும், கஸ்தூரி அளவு கோரோசனையும் ஆகக்கூட்டி நன்குபொடிசெய்து சிந்தூரத்துடன்கலந்து அரைத்துவைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்-இரண்டுபணவிடை. ஒருமாதம் கொள்ள மிருபுத்தியும் தாதுவிருத்தியுமுண்டாம். சகலநோயுந்தீரும் நித்தியம் கொள்ளக்காயசித்தியுண்டாம். அழகும் பெலமும் நிறமுமுண்டாம். அனுபானம் ஏற்றவாறுகொள்க. பத்தியம், உப்பு, புளிப்பு, கைப்பு, இவைநீக்கவேண்டியன. காலையில் உதயத்துக்குமுன் மருந்துகொள்ளவேண்டியது.

பூரணசந்திரோதயசிந்தூரம் ௬

தங்கம்-கழ-௧௦, இரசம்-கழ-௬௦, கெந்தி-கழ-௪௦, வெண்காரம், மனோசிலை வகை கழ-௧௦, அரிதாரம் கழ-௫, (௧௦-என்று வேறுபிரதியில்) வசநாவி கழ-௨௦ ஆகக்கூட்டி செம்பரத்தம்பூச்சாறு, குமரிவேர்ச்சாறு, முருக்கம்பூச்சாறு, கூத்தன் குதம்பைச்சாறு இவற்றால் வகைக்கு ஒருசாமமரைத்து உலர்த்திப் பொடிசெய்து முன்போலக் குப்பியிலடைத்து முறைப்படி தீபாக்கினி ௧-சாமம், கமலாக்கினி ௨-சாமம், கடாக்கினி ௨௫-சாமம், எரித்து மூன்றுநாள் அடுப்புடன் ஆறவிட்டு நாலாநாள் குப்பியை உடைத்துப்பார்க்க மாதளம்பூ நிறமாயிருக்கும்.

பிரமாணம்- பணவிடை. திரிகடுகு வெதுப்பிப் பொடித்ததூள் வெருகடியும் தேனும்கலந்து இருவேளையும் மண்டலம் கொள்ள வாயு, சூலை, குன்மம், விக்கல், காமாலை, கண்டமாலை, விற்புருதி, குட்டம், காணாக்கடி, வண்டுகடி, எலிகடி, செவ்வட்டைகடி, கபாலகுட்டம், சொறிசிரங்கு,

ஈழை, இருமல், சயம், உளைமாந்தை, சுரமாந்தை, சிலேற்பனகோபம், பித்தகோபம், குவளைவிற்புருதி, கூட்டுவிற்புருதி நெஞ்சுட்கழலை, காதிலுண்டாகும்நோய், பீனிசம், மூளைவரட்சி, இரத்தவரட்சி, கபாலவாயு, அரையாப்பு, அரைப்புற்று, தண்டுக்கிரந்தி, இலிங்கப்புற்று, அடிவயிற்றில்விக்கம், மூலவாயு, பெருவிரல் பவனம் இவற்றிலிருந்து உச்சியில்ஏறும்வாயு, கண்டம், மூக்கு, நா, பல்லு முதலியவற்றிலுண்டாகும் பலநோய்களும், செங்கதாளி, பிளவை முதலியனவுந்தீரும். சிந்தூரம் ஒருபணவிடையும், அமுதசர்க்கரை வெருகடியும், ஆவரையல்லி நிழலுலர்த்திய தூள் வெருகடியும், சாதிக்காய், சாதிபத்திரி, குருசாணியோமம் கல்மதம் சமமாய் வெதுப்பிப் பொடித்ததூள் வெருகடியும்கூட்டி ஆவரைத்தயிலமும் தேனும்விட்டுக் குழப்பியமருந்து இருவேளையாக நாற்பதுநாட்கொள்ள நீரழிவு உ௦-வகையும், மூத்திரக்கிரிச்சிரம் உ௦-வகையும், சோமரோகம் கஉ-ம் அள்ளூருக்கி, எலும்புருக்கி, பிரமேகம், கஅ வயிற்றிற் சீப்பின்னல், கெர்ப்பவிற்புருதி, கல்லடைப்பு, அதிசாரம், கிரகணி, வரட்சியிருமல், நீர்வாதம், யோனிப்புழு, பெரும்பாடு, இரத்தபித்தம், சிலந்திப்படுவன், விஷகடி மற்றும் பலவியாதிகள் தீரும். தாதுவிளையும். கள்ளிவேரும் மரமும், எருக்கலம்வேர், நானுங்கள்ளிசமூலம், புரசம்வித்து, பேய்க்குமட்டிக்காய், முருங்கைவேர், தயிர்வேளை, ஆயிற்பட்டை இவை உலர்த்திக் குழித்தயிலமிறக்கி, அந்தத்தயிலம் காசிடையும் சிந்தூரம் பணவிடையும் கலந்து மூன்றுநாட்கொருமுறை காலையில் சரீரபெலமறிந்து க௦ நாட்கொள்ள வியாதி வீழ்ந்தாலும், மருந்து உடலிற்றாக்கினாலும் இடையில் நிறுத்திவிடவேண்டியது. வயிறுகழியும், மோரும்சோறும் பத்தியம். இதற்கு கெர்ப்பவிற்புருதி, குடல்வாதம், அண்டவாதம், கழல்வாதம், வயிற்றுக்கிருமி, மலட்டுப்புழு, கெர்ப்

பவாயு, கிராச்சிறுபுழு, மகோதரம், பெருவயிறு முதலிய வயிற்றில் வியாதி, விஷபாகம், பெண்களுக்குண்டாகும் வயிற்றுவியாதி பலவும், சிலந்தியுண்டானதும் தீரும்.

## வெள்ளிப்பற்பம்.

வெள்ளி பழுபாகற் கிழங்குச்சாற்றில் எழுமுறை காய்ச்சித் தோய்க்கச் சுத்தியாகும்.

சுத்தியானவெள்ளியை மெல்லியதகடாகத்தட்டி, காக மாட்சியம் முலைப்பாலிலரைத்து தகட்டிற் பூசியுலர்த்திக் குகையிலிட்டுச் சீலைமண்செய்து கெசபுடமிடப்பற்பமாம். அல்லது; சுத்திசெய்த கெந்தகத்தை கருப்பஞ்சாறுவிட்டரைத்து வெள்ளித்தகட்டிற் பூசி உலர்த்தவும். இப்படி எழுமுறை பூசியுலர்த்திக் குகையிலிட்டு மூடிச் சீலைமண்செய்து கெசபுடம்போடவும். பின் அதை எடுத்து நாலிலொன்று கெந்தகம் முன்போலக் கவசித்துக் கெசபுடம்போடவும். பற்பமாகும்வரை இவ்வாறு புடமிட்டு எடுக்கவும். இதுபோலத் தங்கத்தையும் புடமிடப்பற்பமாகும்.

## வெள்ளிச்சிந்தூரம்.

வெள்ளிப் பற்பத்துக்குச் சமன்சுத்திசெய்த சாதிலிங்கம்கூட்டி கருவேலம்பட்டைக் கஷாயம், எருக்கலம்பால், செருப்படிச்சாறு, ஆலம்பால் வெள்வேலம்பட்டைக்கஷாயம், கருப்பஞ்சாறு, குமரிச்சாறு இவற்றில் தனித்தனியரைத்துக் குகையிலிட்டு மூடிச் சீலைமண்செய்து வகைக்கொருபுடமாக எழுகெசபுடம் போடச் சிந்தூரமாம். சயம், குன்மம் முதலியவற்றிற்கு ஏற்ற அநுபானங்களிலிடவும்.

## வெள்ளிச்சிந்தூரம் ௨.

வெள்ளி கழ-௨௦, உருக்கி வெள்ளரியிலைச்சாற்றிலாகுதல் தும்பையிலைச் சாற்றிலாகுதல். ௧௦-முறை சாய்த்துப் பின் குகையிலிட்டு உருக்கி அம்மான்பச்சரிசிச்சாறுபிழிந்து

ஊதப்பற்பமாகும், பற்பத்தைக் குகையிலிட்டுருக்கி, உருகா ததைச் சேமித்துவைத்துக்கொண்டு உருகியதைத் தகடாகத் தட்டி, சிறுதேட்கொடுக்கிலையரைத்துக் கவசித்து ஒட்டி விட்டு மூடிச் சீலைமண்செய்து வராகபுடமிடப் பற்பமாகும். அதனுடன் முன் சேமித்துவைத்த பற்பமுங்கூட்டி இரண் டுங்கண்ட அளவுக்குப் பவளபற்பங் கூட்டிக்கொள்ளவும்,

பவளபற்பம் வைக்கும்விதம்:-பவளத்தை ஒட்டிவிட்டு எலுமிச்சம்பழச்சாறு பிழிந்து, சிறுவழுதலைவேரையரைத் துக் கரைத்துச் சிறுநீரும் விட்டு வெயிலில் வைக்கப் பற்ப மாம். அதை முன் சொன்னபடி வெள்ளிப்பற்பத்துடன் கூட்டித் துளசியிலைச்சாற்றாலாட்டி, செங்கல்லுக்குடைந்து அதற்குள்வைத்து மறுசெங்கல்லால் மூடி வாய்குச் சீலை மண்செய்து கெசபுடமிட முருக்கம்பூப்போலிருக்கும்.

பிரமாணம்-பணவிடை.

மதுரம், கூகைநீறு சாதிக்காய், சாதிபத்திரி, குருசாணி மோதகம், பூமிசர்க்கரைக்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, நீர்முள்ளிவிரை, அமுக்கிராய்வேர், இவைசமன்நிழலுலர்த்தி வெதுப்பிப் பொடிசெய்து வெருகடி தூளில் சிந்தூரம் கூட்டித் தேனில் மண்டலங்கொள்ள, தாதுவிருத்தியுண்டா கும். பிரமேகம், மூத்திரக்கிரிச்சிரம், இந்திரகண்டி, சோம ரோகம், சூலை, கல்லடைப்பு தீரும் நவத்துவாரமும் சுத்தி யாகும். சரீரம் வச்சிரமாகும். தாமரைச்சாற்றில் ௧௦-நாட் கொள்ள வாதம் சுரம் தீரும். வாழைக்கிழங்குச்சாறு ஆம் பற்சாறு இவற்றிற் கொள்ளப் பித்தம் ௪௦-ம்தீரும். ஆடா தோடைச்சாற்றிற் சிலேற்பனம் ௯௬-ம்தீரும். கருவேலம் பூவுமிலையும் உலர்த்திப்பொடிசெய்து அதில் ௪௦-நாட்கொள் ளக் குட்டம் குறை நோய் கடிவிகாரங்கள்தீரும்.

## செம்புச்சுத்தி.

செம்பை ஈசலிறகுபோல அடித்துச் சிவக்கக்காய்ச்சி புளியிலைச்சாறு, கற்றாழஞ்சாறு, புளித்தமோர், பொன்னாங்காணிச்சாறு இவற்றில் ஒவ்வொன்றிலும் எழுமுறை தோய்க்கச்சுத்தியாகும். சாறுவகையும் மோரும் ஒவ்வொருமுறைக்கும் புதிதுபுதிதாக எடுத்துக்கொள்ளவேண்டும். கடைசியாகப் புளியம்பொருக்கு அல்லது கட்டைநெருப்பிற்காய்ச்சி நன்கு புளிப்பேறிய பனங்கள்ளிற் ௧௪முறை தோய்த்தெடுத்துக்கொள்ளவும்.

## செம்புப்பற்பம்.

செம்புக்குச்சமன் சுத்திசெய்த கெந்தகம் எருக்கலம் பால் விட்டரைத்துக் கவசம்செய்து அகலிலிட்டு மூடிச் சீலை மண்செய்துலர்த்திக் கெசபுடம்போடவும். புடமிட்ட பற்பத்தை, திரிபலைக்கஷாயத்தினாலரைத்து இலேசாகவில்லை தட்டி அகலிலிட்டு மூடிச் சீலைமண்செய்து கெசபுடம்போடவும், இப்படி திரிபலைக்கஷாயத்தில் புடம் ௧௦ பசுப்பாலிற்புடம் ௧௦ பசுநெய்யிற்புடம் ௧௦ கற்றாழஞ்சாற்றிற்புடம் ௪௦ ஆக நாற்பதுபுடம் போடப் பற்பமாகும் பற்பமாகாவிட்டால் மேற்படி சாறுவகைகளாலரைத்துப் பற்பமாகும்வரை முன்போலப் புடமிடவும்.

## செம்புச்சிந்தூரம்.

மேற்படி பற்பத்தை எருக்கலம் பாலாலாட்டி வில்லை செய்து முன்போலப்புடமிடவும். இப்படி செருப்படிச்சாறு ஆலம்பால், வரட்சுண்டிச்சாறு, வரட்சுண்டிவேர்க்கஷாயம், அரசம்பட்டைக்கஷாயம் கல்லித்திப்பட்டைக்கஷாயம் இவைகளிற் தனித்தனியரைத்து ஒவ்வொரு கெசபுடம்போடச்சிந்தூரமாம். அல்லது சிந்தூரமாகும்வரை பிடமிடவும்.

## அயசுத்தி.

இரும்புப்பொடியை நல்லெண்ணெயில் வேகவைத்துக் கழுவிப் பின் கருவேலம்பட்டைக்கஷாயத்தில் வேகவைத்து வெயிலில் உலர்த்தியெடுக்கச் சுத்தியாகும்.

### அயபற்பம்.

சுத்தியான அரபொடியை-நாவற்பட்டைச்சாறு, நெல்லிப்பருப்புக்கஷாயம், புளியிலைச்சாறு, முருங்கைப்பட்டைச்சாறு, கோமூத்திரம் இவைகளிற் தனித்தனி வேகவைத்து ஒவ்வொருபுடமாக ரு-கெசபுடம் போடப் பற்பமாகும்.

### அயசிந்தூரம்.

அயபற்பத்தை மேற்படி சாறுவகை, கஷாயம் கோமூத்திரம் இவற்றால் அரைத்து உஉபுடமும், ஆலம்பாலாலரைத்து ககபுடமும் எருக்கலம்பாலாலரைதது க௰புடமும் போடச் சிந்தூரமாகும் மேற்படி சாறுவகை பால்வகைகளாலரைத்துக் குகையிலிட்டுமூடிச் சீலைமண்செய்து புடத்துக் குப்பதில் உலைமுகத்தில்வைத்துக் குகைசிவக்க ஊதியெடுத்தாலும் சிந்தூரமாகும்.

### அயசிந்தூரம்-உ

சுத்திசெய்த அரபொடி பலம்-ரு கெந்தகம் பலம்-உஇ பொற்றலைக் கையாந்தகரைச்சாற்றால் நாலுசாமமரைத்து வில்லைதட்டியுலர்த்தி அகலிலிட்டுமூடிச் சீலைமண்செய்து ந௰ எருவிற்புடம்போடவும், இப்படிப்புடந்தோறும்கண்டநிறைக்குப் பாதி கெந்தகங் கூட்டி முன்போலரைத்து க௰ புடமிடச் சிந்தூரமாகும். பிரமாணம்-அரிசியிடை. அனுபானமறிந்து கொடுக்க நெஞ்சுத்துடிப்பு, பாண்டு முதலிய நோய்கள் தீரும்.

### காந்தசுத்தி.

காந்தம் பொடிசெய்து எலுமிச்சம்புளி, புளித்தமோர், புளியிலைச்சாறு இவற்றிலிட்டு உ-சாமம் வெயிலில்வைக்கச் சுத்தியாகும்.

### காந்தபற்பம்

சுத்தியான காந்தத்துக்கு நாலிலொன்று கெந்தகம் கூட்டி எருக்கலம்பால், சிறுகீரைவேர்க்கஷாயம், பலாசம்பட்

டைச்சாறு இவற்ருல் தனித்தனியரைத்து ஒவ்வொருபுடமாக ௩-கெசபுடமிடப் பற்பமாகும்.

## காந்தசிந்தூரம்

காந்தபற்பத்திற்குப்பாதி சாதிலிங்கம்கூட்டி வரட்சுண்டிவேர்க் கஷாயம்விட்டு மூன்றுநாளரைத்து உலர்த்தி, செம்மண்ணுற் குகையும் மூடியும் செய்து அதில்வைத்து மூடிச் சீலைமண்செய்து புடம்போடவும். இப்படி ௩-புடம் போடச் சிந்தூரமாகும்.

## அயகாந்தசிந்தூரம்

அரபொடி பலம்-கு நாவற்பட்டைச்சாறுவிட்டு இரண்டு நாளரைத்துப் பின் ஊசிக்காந்தம், கெந்தகம்-வகை-பலம்-உ கூட்டி முருக்கிலைச்சாற்றில் உ-நாளும் எலுமிச்சம்புளியில் க-சாமமும், மாதளைபிலைச்சாற்றில் க-சாமமுமரைத்து அடைபிடித்துஉலர்த்திச் சட்டியிலிட்டு சட்டிநிரம்ப நாவற்பட்டைதூவைத்து அழுத்தி மற்றொரு சட்டியால் மூடிச் சீலைமண்செய்து அடுப்பிலேற்றி மூன்றுநாளெரித்துப்பின் மருந்தை எடுத்துக் கற்ருழஞ்சாறுவிட்டு மூன்றுநாள் அரைத்து அடைபிடித்துலர்த்திச் சட்டியிலிட்டுச் சட்டி நிரம்பக் கற்ருழஞ்சோறிட்டு மூடிச் சீலைமண்செய்து கெசபுடமிடச் சிந்தூரமாகும். இதற்கு இரசம் க-பலமும் தங்கம் காற்பலமும சேர்த்துச்செய்ய விசேஷகுணமுண்டாகும்.

பிரமாணம்-பணவிடை. திரிகடுகுவெதுப்பிப் பொடித்த தூள் வெருகடியும் தேனுங் கூட்டி இருவேளையும் மண்டலங்கொள்ள ஈளை, இருமல், மந்தாரகாசம், காயாசுவாதம், சுவாதகாசம், சிலேற்பனத்திலெழுந்த நோய்கள், பித்தத்திலெழுந்தநோய்கள், குன்மம், கரப்பன், கிரந்தி, வாயு எலிகடி தீரும். கையாந்தகரைச்சாற்றில் உ-பணவிடை உ௦

நாட்கொள்ள காமாலை, பாண்டு, சோகை, வரட்காமாலை, விஷபாகம் தீரும். க-பணவிடை கொம்மடிக் குழம்பில் ஒன்றைவிட்டொருநாட் கொள்ளக் கவுசி, எருவை, நீராமை, நீர்க்கோவை, பெருவயிறு, மகோதரம், அட்டபீலிகை, குன்மம் முதலியன தீரும்.

ஈயசுத்தி

காடி, நல்லெண்ணெய், கோமூத்திரம், புளித்தமோர், கொள்ளுச்சாறு, எருக்கலம்பால், வெள்ளாட்டுப் பால் இவற்றில் ஒவ்வொன்றிலும் ஏழுமுறை உருக்கிச் சாய்க்கக் காரீயம் வெள்ளீயம் இரண்டும் சுத்தியாகும்.

காரீயபற்பம்

சுத்தியான காரீயத்தை உருக்கி ஆடாதோடைச் சாறு விட்டு அந்தக் கொம்பாலே வறுக்கப் பற்பமாகும்.

காரீயசிந்தூரம்.

காரீய பற்பத்தை ஆடாதோடைச் சாறு, ஓமக்கஷாயம், கொட்டைக்கரந்தைச் சாறு இவற்றில் தனித்தனி யரைத்து ஒவ்வொன்றுக்கு ஐந்து புடமாக கரு கெசபுடமும், வெற்றிலைச் சாற்றி லரைத்து கo புடமுமிடச் சிந்தூரமாகும்.

வெள்ளீயபற்பம்

சுத்தியான வெள்ளீயத்தை உருக்கி நாயுருவிச் சாம்ப விட்டு வறுக்கப் பற்பமாகும்.

வெள்ளீயசிந்தூரம்

வெள்ளீய பற்பத்தை எலுமிச்சம்பழச் சாறு விட்டரைத்து முன்போலப் புடமிடச் சிந்தூரமாகும்.

### வெள்ளீயபற்பம் (வேறு வகை)

அரிதாரத்தைப் பலாசம்பட்டைச்சாறு விட்டரைத்து வெள்ளீயத் தகட்டிற் பூசிக் குகையிலிட்டு மூடிச் சீலைமண் செய்து ஒரு கெசபுடம் போடப் பற்பமாகும்.

### வெள்ளீயசிந்தூரம்

வெள்ளீய பற்பத்தை முன் காரீய சிந்தூரத்துக்குச் சொல்லிய முறைப்படி அரைத்துப் புடம்போடச் சிந்தூர மாகும்.

### வெண்கலசுத்தி

புளியிலைச் சாற்றில் ௩ முறையும் கொள்ளுச் சாற்றில் ௩ முறையுங் காய்ச்சித் தோய்க்க வெண்கலம் சுத்தியாகும்.

### வெண்கலபற்பம்

சுத்திசெய்த வெண்கலத்தை அராவிப் பொடி செய்து அதற்குச் சமன் கெந்தகம் கூட்டி எருக்கலம் பால் விட்டு அரைத்து அப்படியே கல்வத்துடன் உலர வைக்கவும். உலர்ந்தபின் மறுபடியும் எருக்கலம் பால் விட்டு அரைத்து உலரவைக்கவும். இப்படி எழுமுறை அரைத்து அரைத்து உலர்த்திக் குகையிலிட்டுச் சில்லினால் மூடிச் சீலைமண் செய்து ஒரு கெசபுடம் போடப் பற்பமாகும்.

### வெண்கல சிந்தூரம்

வெண்கலபற்பம் கண்டஇடைக்குப் பாதி சுத்தி செய்த சாதிலிங்கம், சாதிலிங்கத்திற் பாதி சுத்தி செய்த கெந்தகம், கெந்தகத்திற் பாதி சுத்திசெய்த இரசம் இந்தப் படி கூட்டி ஆலம்பால் விட்டரைத்துக் கெசபுடம் போட வும். இப்படி ஆலம் பாலில் எழுபுடமும், செருப்படிச் சாற்றில் எழுபுடமும், அரசம்பட்டைக் கஷாயத்தில் எழு புடமும், கருவேலம் பட்டைக் கஷாயத்தில் எழுபுடமும்,

பலாசம் பட்டைக் கஷாயத்தில் எழுபுடமும், பூனைக்காலி வேர்க் கஷாயத்தில் எழுபுடமும், எலுமிச்சம் பழச் சாற்றில் எழுபுடமுமாக-சகூகெசபுடம் போடச் சிந்தூரமாகும். அல்லது மேற்கூறிய எழுவகையிலும் தனித்தனியரைத்து ஒவ்வொன்றிலும் எழுமுறை வீதம் குகையில் வைத்து ஊதச் சூரிய உதையம் போன்ற சிந்தூரமாகும்.

## முத்துச் சுத்தி

முத்தை ஊமத்தையிலைச் சாற்றிலாகுதல் புளியிலைச் சாற்றிலாகுதல் உ நாள் ஊறவைத்துக் கழுவியெடுக்கச் சுத்தியாகும்.

## முத்துப்பற்பம்

சுத்தியானமுத்தை வெள்ளை வழுதலைச்சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து எடுத்துக்குகையிலிட்டு மூடிச் சீலைமண் செய்து ஒரு கெசபுடம்போடப் பற்பமாகும்.

## பவளசுத்தி

பவளத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் ஒருநாள் ஊற விட்டு வெந்நீரிற்கழுவி எடுக்கச் சுத்தியாகும்

## பவளபற்பம்

சுத்தியானபவளத்தை எருக்கலம்பாலில் ரு நாள் ஊறப்போட்டு எடுத்து குகையிலிட்டு மூடிச் சீலைமண் செய்து கெசபுடம்போடப் பற்பமாகும்.

## மரகதசுத்தி

நிலக்குராய் வேரையரைத்து மொத்தையாகத்திரட்டி அதில் மரகதத்தைப் பொதிந்து குகையிலிட்டுமூடிச் சீலை மண்செய்து குக்குடபுடம்போடச் சுத்தியாகும்

## மரகதபற்பம்

சுத்தியான மரகதத்தைக் கண்டங்கத்தரிச் சாற்றிலும் மாமிசபேதி ரசத்திலுமரைத்து வில்லைசெய்து உலர்த்தி அகலிலிட்டு மூடிச் சீலைமண் செய்து கெசபுடமிடப் பற்பமாகும்.

## நீலசுத்தி

நீலத்தைக் கழுதைமூத்திரத்திலிட்டு ஒருநாள் வெய்யிலில் வைத்து எடுக்கச் சுத்தியாகும்.

## நீலபற்பம்

சுத்தியான நீலத்தைக் கொன்றையிலைச் சாற்றிலிட்டு மூன்றுசாமம் வெய்யிலில்வைத்துக் குகையிலிட்டுச் சீலைமண்செய்து உலைமுகத்தில்வைத்து ஊதப் பற்பமாகும்.

## கோமேதகசுத்தி

கோமேதகத்தைக் குதிரைமூத்திரத்தில் மூன்றுநாளூறவைத்துக் கழுவியெடுத்துப் பின் நிலக்குமிழ்ச்சாற்றில் ஒருநாள் ஊறவிட்டுக் கழுவியெடுக்கச் சுத்தியாகும்.

## கோமேதகபற்பம்

சுத்தியான கோமேதகத்தைக் கருவூமத்தைச்சாற்றில் ஒருநாள் ஊறவிட்டு மறுநாள் குகையிலிட்டு மூன்றுமுறைஊதப் பற்பமாகும்.

## புட்பராகசுத்தி

புட்பராகத்தை வெள்ளாட்டுக் கோமயத்திலிட்டு ஒருநாள் வெய்யிலில் வைத்தெடுக்கச் சுத்தியாகும்

## புட்பராக பற்பம்

சுத்தியான புட்பராகத்தைச் சிறுபூளைச் சாற்றிலிட்டு இரண்டுசாமம் வெய்யிலில் வைத்தெடுத்துக் குகையிலிட்டு ஊதப் பற்பமாகும்

மாணிக்கசுத்தி

மாணிக்கத்தைக் குதிரைமூத்திரத்திலிட்டு மூன்று நாள்வெயிலில் வைத்து எடுத்து வெந்நீரிற் கழுவச் சுத்தியாகும்.

மாணிக்க பற்பம்

சுத்தியான மாணிக்கத்தை எருக்கலம் பாலிலே மூன்றுநாளூறவிட்டு அகலிலிட்டு மூடிச் சீலைமண் செய்து மூன்று புடமிடப் பற்பமாகும்.

வச்சிர சுத்தி

வச்சிரத்தைக் கோமூத்திரத்தில் மூன்றுநாளூற விட்டுக் கழுவி யெடுக்கச் சுத்தியாகும்.

வச்சிர பற்பம்

சுத்தியான வச்சிரத்தைப் பிரண்டைச் சாற்றி விட்டு மூன்று நாள் வெய்யிலில் வைத்து எடுத்துக் குகையிலிட்டு மூடிச் சீலைமண் செய்து கெசபுடமிடப் பற்பமாகும்.

வயிடூரிய சுத்தி

வயிடூரியத்தைக் குதிரை மூத்திரத்தி விட்டு மூன்று நாள் வெய்யிலில் வைத்து எடுத்துப் பூசினிக்காய்ச் சாற்றில் ஒருநாள் ஊறவைத்துக் கழுவியெடுக்கச் சுத்தியாகும்.

வயிடூரிய பற்பம்

சுத்தியான வயிடூரியத்தைச் சிறு பூளைச்சாற்றில் ஊற விட்டு எடுத்துக் குகையிலிட்டு மூடிச் சீலைமண் செய்து கெசபுடம் போடப் பற்பமாம். அல்லது உலை முகத்தில் வைத்து ஊதினலும் பற்பமாகும்.

சலசரி சிந்தூரம்

இரசம் பலம்-க. கெந்தகம் பலம்-க. சாதிலிங்கம் பலம்-கஙு. மனோசிலை பலம்-ஙு. பொன்னிமிளை பலம்-க

காந்தம் பலம்-க. இவற்றைச் சுத்திசெய்து கல்வத்திட்டு, மிளகு அரைத்த விழுதுச்சாற்றில்' ஒருசாமமும், தான்றி யிலைச்சாற்றில் ஒருசாமமும், செம்பரத்தப்பூச் சாற்றில் ஒருசாமமும் அரைத்து வழித்து ஒருபணியாரச்சட்டியின் குழியிற்போட்டுச் சில்லோடுகொண்டு மூடி மண்கட்ட வும்.

மண்கட்டுவதற்கு: குழவிகட்டுமண், வெள்ளைக்கல், சுண்ணாம்புக்கல், குவளையில் உவர்மண், இந்துப்பு, புளியங் கொட்டைத்தோல், கோளிமுட்டையோடு,பொன்மெழுகு, கொசுவான்தேன்மெழுகு, கருங்குங்கிலியம், கடுக்காய், கரு வேலம்பிசின், நல்லவெல்லம், புழுங்கலரிசி பழங்கிட்டம் இவை சமன்கூட்டிப் பொடிபண்ணி அக்கினியில் வெதுப் பிச் சுத்தியல் கொண்டடித்து எடுக்கவும்.

அந்தமண்ணினால் மேற்கூறிய சில்லோட்டின் மேல் புதைய அழுத்தி மூங்கில் விறகுகொண்டு மூன்றுநாள் தீபாக்கினியாயெரித்து ஆறவிட்டு எடுக்க முருக்கம்பூப் போலிருக்கும்.

பிரமாணம் ஒருபணவிடை.

அனுபானமும் தீரும்நோயும்.

ஆவரைத் தைலத்தில்கொள்ள மேகம் உ0ம், கழிச் சலும் தீரும்.

தேனில் க0 நாட்கொள்ளப் புண்வகையும் சூலைக்கட்டு வகையும் தீரும்.

சிவதைச்சூரணத்துடன் க0 நாட்கொள்ள எலிகடி, மந்தாரகாசம் சுவாதகாசம் முதலியனதீரும்.

அட்டசூரணத்துடன் உ0 நாட்கொள்ள வாதம் அ0ம், குன்மம், அட்டிகை, பிலிகை, ஆமவலி சகலமும் தீரும்.

ஏலாதிச் சூரணத்துடன் ச0 நாட்கொள்ள பயித்தியசுரம் 1ம், நீரடைப்பு, கல்லடைப்பு, துன்மாங்கிஷவளர்ச்சி, எலும்புருக்கி, மேகம் உ0ம் முதலியனதீரும்.

ஆலம்பழம், பூமிசர்க்கரைக்கிழங்கு இவற்றைச் சூரணித்து அதில் வெருகடி கூட்டித்தேனில் உ0 நாட்கொள்ள வச்சிரகாயமாகும். தாதுவிர்த்தியும் அழகுமுண்டாகும்.

### வங்கசிந்தூரம்

காரீயம் பலம்-க. சோசலந்தில், உ0 தடவை உருக்கிச் சாய்த்து எடுத்துப் பின் புதுச்சட்டியிலிட்டு உருக்கி, கற்றாழைச்சாற்றில் வெடியுப்புக்கலந்து சிறுகிரைவேரைச் சிறுகச்சிறுக நறுக்கிப்போட்டுத் தெளித்து வறுக்கவும். இப்படி மூன்றுநாள் வறுக்கச் சிந்தூரமாகும்.

பிரமாணம் அரைப்பணவிடை.

தேனிற்கொள்ளப் பதினெட்டுக்குட்டம், செய்யான் கடி, வண்டுக்கடி சகலமும் தீரும்.

ஊமத்தையிலை-படி-க. சர்க்கரை-பலம்-க. பழஎள்ளுப்-பலம்-க. புலித்தோல்-பலம்-க. புளிபோல மசிய இடித்து அதில் ஒருபலமும், சிந்தூரம் அரைப்பணவிடையுங்கொடுத்து ௫0 நாழிகைஇருந்து ௫0 குடங் தண்ணீர் தலையிற் சொரியவும். பேய் நாய்கடி தீரும்.

### வங்காரசஞ்சீவி அக்கினிகுமாரன்

இரும்புப்பொடி, உருக்குப்பொடி, பித்தளைப்பொடி, வெண்கலப்பொடி, செப்புப்பொடி, ஊசிக்காந்தம், இரசம், வெண்காரம், மனோசிலை, அரிதாரம், திப்பிலி வகை பலம்-க. கெந்தகம்-பலம்-கூ. இந்தப் பன்னிரண்டு வகையையும் கற்றாழஞ்சாறுவிட்டு மூன்றுநாளரைத்து ஒரு

வில்லையாகத்தட்டிச் சட்டியிலிட்டு மறுசட்டியால்மூடி ஏழுசீலைமண் வலுவாய்ச்செய்து அடுப்பில் வைத்து மூன்றுநாள் காடாக்கினியாயெரித்து ஆறவிட்டெடுக்கச் சிந்தூரமாகும்.

நாவிபலம் க. கோசலத்தி லூறப்போட்டு மறுநாளெடுத்து திப்பிலி-பலம்-க. திப்பிலிமூலம்-பலம்-க. உள்ளித்தைல மிறக்கிவிட்டரைத்துப் பின் சிந்தூரம் ஒக்கப் போட்டு மேற்படி தைலம் விட்டரைத்து ஒருபணவிடை குளிகைகட்டி நிழலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

மாவிலங்கஞ் சாற்றில் க0 நாட்கொள்ள அ0 வாதங்களும், கஅ சூலைகளும், உ௬ வாயுக்களும், கஅ குட்டங்களும், குறைநோய், செவ்வட்டைகடி, வண்டுகடி, விஷம், காணுக்கடி, கபாலகுட்டம், கபாலக்கடி, விடசிரங்கு, சொறி, படர்தாமரை, வெண்குட்டம், கருங்குட்டம், விஷகுட்டம், கரப்பன், மேகப்புள்ளி இவை தீரும்.

கும்மடிக்காய்ச் சாற்றில் ஒன்றுவிட்டொருநாளாய் ச0 நாட்கொள்ள வயிற்றில்வியாதி, காசம், வாயுத்திரட்சி, குன்மம், சூலை, விற்புருதி, கெர்ப்பவிற்புருதி, பெருவயிறு, மகோதரம், அட்டவிகை, பிலிகை, வயிற்றில் வீக்கம் சகலமுந்தீரும். மேலும், குணங்கண்டு அனுபானங் கூட்டுக.

### ஏகாதச அக்கினிகுமாரம்

இருப்பு, செம்பு, பித்தளை, சாதிலிங்கம், மனோசிலை, நெல்லிக்காய்க்கெந்தகம், வெண்காரம், வச்சநாபி, ஊசிக்காந்தம், அரிதாரம், இரசம் வகை-பலம்-க. இந்தப் பதினொன்றும் கற்றாழஞ் சாறுவிட்டு ௩ நாளரைத்து அடைதட்டி ஒருசட்டியில்வைத்து, கற்றாழஞ்சாறும் நீர்மேல்

நெருப்பும் கொடுவேலிவேரும் அரைத்துச் சட்டிநிரம்ப வைத்து மறுசட்டிகொண்டுமூடிச் சீலமண்செய்து ௩ நாட்காடாக்கினியாயெரித்து ஆறவிட்டெடுக்கச் சிந்தூரமாயிருக்கும்.

பிரமாணம் பணவிடை.

வெண்காயத் தைலத்தில் ௩ நாட்கொள்ள சன்னிகஅம் சிலேற்பனம் ௬௬ம் தீரும்.

திரிகடுகு வெதுப்பிப் பொடித்த சூரணமும் தேனும் இஞ்சிச்சாறும் கூட்டி ச௦ நாட்கொள்ளச் சத்திகுன்மம், வலிகுன்மம், எரிகுன்மம், பயித்தியகுன்மம், வாய்வுரோகம், வாதம் அ௦, பித்தம், சிலேற்பனம், ஈழை, எலிகடி, இளைப்பு, தூரப்பு, காசம், காமாலை, பாண்டு, சோகை, வரட்காமாலை, விஷபாகம், கெர்ப்பசூலைக்கடுப்பு, கரப்பன், கிரந்தியெல்லாம் தீரும். மற்றும் நோய்கட்கு ஏற்ற அனுபானம் கூட்டிக் கொள்ளவும்.

சடாட்சர அக்கினிகுமாரன்.

அரபொடி-பலம்-௧௨. காந்தம்-பலம்-௫. நெல்லிக்காய்க்கெந்தகம்-பலம்-௬. வெண்காரம்-பலம்-அ. இரசம் பலம்-௫. இந்துப்பு-பலம்-ச. இந்த ஆறுவகையும் கல்வத்திட்டுக் கற்றுழஞ் சாற்றில் ௬௦ நாழிகை அரைத்து அடைபிடித்துச் சட்டியில் வைத்து சட்டிநிரம்பக் கற்றுழஞ் சோறுவிட்டு மூடிச் சீலமண்செய்து காடாக்கினி ச நாள் எரித்து ஆற்றியெடுக்க நல்ல சிவப்பாயிருக்கும். பிரமாணம் அனுபானம் முதலியன முன்போலவே.

## சதுர்முக அக்கினிகுமாரன்.

அரபொடி, காந்தம், சாதிலிங்கம் -வகை-பலம்-க0. நெல்லிக்காய்க்கெந்தகம்-பலம்-ரூ. இவற்றைக் கற்றாழஞ் சாற்றால் நாலுசாமம் நன்றாயரைத்துப் பொடித்துக் கலயத்தில் வைத்துச் செப்புக்கிண்ணியால் மூடி வெயிலில் வைக்க புகையெழும்பி வேகும். இப்படியே மறுநாளும் அரைத்து வைத்து எடுக்கவும்.

பிரமாணம் பணவிடை

திரிகடுகுப்பொடி வெருகடியும் தேனும்கூட்டி ச நாட் கொள்ள சன்னிவாதம், வாயு, பித்தம், உட்டணம், குன் மம், வலி, மூர்ச்சை, முயலகண்டன் முதலியன தீரும்.

## இரச அப்பிரகசிந்தூரம்.

இரசம், கெந்தகம்-வகை-பலம்-ச. அப்பிரகநவநீதம் பலம்-க0. செவ்வாம்பற் சாறுவிட்டு அரைத்து அடை பிடித்து ஒரு சட்டியிலிட்டு சட்டி நிரம்ப அரசஞ்சாம்ப விட்டு மறுசட்டிகொண்டு மூடி ஏழு சீலைமண்செய்து கெச புடமிட்டு மறுபடி கற்றாழஞ்சாறு விட்டு அரைத்து அடை பிடித்துச் சட்டியிலிட்டு, சட்டி நிரம்பக் கற்றாழஞ்சோறு விட்டு மூடிச் சீலைமண்செய்து முன்போற் புடமிடவும்.

பிரமாணம் பணவிடை.

வாதத்திற்கு: திரிகடுகு வெதுப்பி யிடித்த தூளும் தேனும்.

ஈளை, இருமல், காயாசுவாதம் முதலியவற்றிற்கு: திப் பிலி வறுத்திடித்த தூளும், தேனும்.

சிலேற்பனம் கூரு, எலிகடி முதலியவற்றிற்கு: வேப் பெண்ணெய் அல்லது எருமைமூத்திரம்.

பித்தகாசம், பித்தத்திலெடுத்தரோகம், அடங்கலுக்கும் முருங்கைப்பட்டைச்சாற்றில் ௪0 நாட்கொள்ளவும்.

கடிவிஷத்திற்கு: தேனில் ௪0 நாட்கொள்ளவும்.

### மதனகாமேசுர சிந்தூரம்

வாலைரசம், இரசசிந்தூரம், கெந்தகம், காந்தசிந்தூரம் வகை-கழஞ்சு-௫. மாணிக்கம், பச்சை, முத்து, பவளம், வெள்ளி, தங்கம் வகை-கழஞ்சு-௧. சமுத்திராசோகி கழஞ்சு-௧0. முருங்கைப்பூச் சாறுவிட்டு ஒருநாளரைத்துப் பின் சாதிலிங்கம்-கழஞ்சு-௧0 கூட்டி, கோழிமுட்டை மஞ்சட்கருவிட்டு ஒருசாமமும், கஞ்சாச்சாறுவிட்டு ஒருசாமமுமரைத்துக் குப்பியிலிட்டுத் தீபாக்கினி ௬-சாமமும், காடாக்கினி ௮-சாமமும் எரித்தெடுக்கவும்.

பிரமாணம் பணவிடை.

மதனகாமேசுரசூரணம் வெருகடியும், தேனும் கூட்டி ௧0-நாட்கொள்ளத் தாதுவளரும். சலக்கழிச்சல், பிரமேகம், உட்டணம் இவைதீரும். வச்சிரகாயமாகும். இன்னுங் குணங்கண்டு அனுபானங் கூட்டிக்கொள்ளப் பல நோய்களுந் தீர்ந்து உடல் வலுக்கும்.

---

## மாத்திரைவிதி

### அனவரததாண்டவ அக்கினிகுமாரன்

உலோகசிந்தூரம், காந்தசிந்தூரம், இரசசிந்தூரம், வங்கசிந்தூரம், வகை-கழஞ்சு-௧0. தாம்பிரபற்பம், சாதிலிங்கம், இரசம், கருநாவி, அரிதாரம், வகை-கழஞ்சு-௫. கற்றாழஞ்சாறுவிட்டு ௪-சாமமரைத்து கடலையளவுருட்டி நிழலுலர்த்திவைக்கவும்.

உள்ளித்தைலத்தில் ரு நாள் அந்திசந்தி கொள்ளச் சன்னி-கஅ தீரும்.

முருங்கையிலைச்சாற்றில் க0-நாட்கொள்ள வாதம் அ0-ம் தீரும்.

நற்சீரகப்பொடியும், இராசபுரிச்சர்க்கரையும், கலந்து வெருகடியில் உ0-நாட்கொள்ள பித்தம் கஉஅ-ம், உட்டண ரோகம்-௬உ-ம் தீரும்.

கண்டங்கத்தரிச்சாற்றில் உ0-நாட்கொள்ள சிலேற்பனம், பித்தம் இவற்றிலுண்டானவியாதியெல்லாம் தீரும். இன்னுங் குணங்கண்டு அனுபானங்கூட்டிக்கொள்ளுக.

## நவலோக அக்கினிகுமாரன்

சுவர்ணபற்பம், இரசபற்பம், தாம்பிரபற்பம், உலோகம், காந்தம், காரீயம், வெள்ளீயம், வெண்கலம், இரசம் இந்த கூ-வகையும் சமன்கூட்டி, எருக்கலம்வேர்க்கஷாயத்தில் ௹-நாளரைத்துக் குப்பியிலிட்டு ஏழு சீலைமண்செய்து வாலுகாயந்திரத்தில் கஉ-சாமம் படிந்த அக்கினியாயெரித்து ஆறினபின் எடுத்துப் பொடிசெய்து குன்றிமணியளவு அனுபான விசேடங்களிலே கொடுக்கச் சன்னி, வாதம், சுரம் யாவுந் தீரும்.

## நவரத்தின அக்கினிகுமாரன்

இரசம், பஞ்சலவணம், நவரத்தினம் இந்த கடு வகையும் சமன்கூட்டி மாவிலங்கஞ்சாற்றில் ஒருநாளும், கொடுவேலிவேர்க் கஷாயத்தில் ஒருநாளும் அரைத்துக் குப்பியிலிட்டு மந்தாக்கினியாக கூ-சாமமெரித்து குன்றியெடை அனுபானவிசேடங்களிலே கொடுக்கச் சகலநோய்களுந் தீரும்.

## சிந்தாக்கினிகுமாரன்.

இரசம், கெந்தகம், நாவி, வெண்காரம் இவைநான்கும் சமன் கூட்டி எருக்கிலைச் சாற்றினுல் ஒரு சாமம் அரைத்து உண்டை பண்ணிக் குகையிலடைத்து மூடி ஏழு சீலைமண் செய்து, ஒரு கலசத்தில் பாதிக்கு மணல்நிரப்பி மேலே குகைபதித்து, கலசம் நிரம்ப மணலிட்டு மூடி மண்செய்து ஒரு கெசபுடமிடவும். ஆறினபின் பொடிசெய்து குன்றி மணியளவு அனுபான விசேஷங்களிலிடச் சன்னி, சுரம் சகலமும் தீரும்.

## இலகு அக்கினிகுமாரன்.

இரசம், கெந்தகம், அரிதாரம், மனோசிலை இவை நான்கும் சமன்கூட்டிச் செருப்படிச் சாற்ருல் ஒரு நாளரைத்துக் குப்பியிலிட்டு மூடிச் சீலைமண்செய்து, வாலுகாயந்திரத்தில் மந்தாக்கினியாக ஆறு சாமமெரித்து எடுக்கவும். குன்றி யிடை அனுபான விசேஷங்களிலிட முன்சொன்ன நோய்கள் தீரும்.

## மகா அக்கினிகுமாரன்.

இரசம், கெந்தகம், அரிதாரம், சாதிலிங்கம், எலிப் பாஷாணம், நாவி, தாம்பிரபற்பம், அப்பிரகபற்பம் இவை எட்டும் சமன்கூட்டிக் கையான்றகரைச் சாற்ருல் ஒரு நாள் அரைத்து உண்டைசெய்து உலர்த்திக் குப்பியிலடைத்து குப்பிவாய் மணலரைத்து மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி அடிகனத்த குண்டுச்சட்டியிலே சல்லடைபோலத் துவாரமிட்டு அதில் அரைப்படி கல்லுப்பிட்டு அதன் மேலே குப்பி வைத்துக் குப்பியைச் சுற்றிலும் இரண்டு படி கல்லுப்பிட்டு மேலே மணல் நிரம்பவிட்டு மடக்குக் கொண்டு மூடிச் சீலைமண் செய்து அடுப்பில் வைத்து இவ்

வரையாக வாலுகாயந்திரத்தில் தீபாக்கினி கமலாக்கினி காடாக்கினி யாக எரியிட்டு ஆறினபின் பொடி பண்ணிச் சணல்விரையளவு அனுபானங்களிலிடச் சன்னி கஅம் சுரம் சுசம் தீரும்.

### பிரதாப அக்கினிகுமாரன்

இரசம், தாம்பிரபற்பம், நாவி, எவச்சாரம், சத்தி சாரம், சுக்கு, மிளகு, பஞ்சலவணம் இந்தப் பன்னிரண் டும் சமன் கூட்டி இஞ்சிச் சாற்றில் ஒருநாளரைத்துக் குப் பியிலிட்டு எழு சீலைமண் செய்து உலர்த்தி வாலுகாயந்தி ரத்தில் மந்தாக்கினியாக ஒருநாளெரித்து ஆறினபின் பத்தி லொன்று நாவி கூட்டியரைத்துக் குன்றியிடை இஞ்சிச் சாற்றிலும் மற்றுமனுபானங்களிலு மிடச் சகலரோகமுந் தீரும்.

### பிராண அக்கினிகுமாரன்

இரசம், கெந்தகம், நாவி, அப்பிரகம், இவை நான்கும் சமன் கூட்டிப் பற்படாகச் சாற்றால் நாலுசாம மரைத்து வச்சிரக்குகையிலிட்டு மூடிச் சீலைமண் செய்து ஒருகுழி வெட்டிப் பாதிமட்டும் மணல் நிரப்பி மணலின்மேற் குகை வைத்து அதன் மேற்குழிநிறைய மணலிட்டு மேலே காட் டெருமுட்டை யடுக்கிப் புடமிட்டு எடுக்கவும். குன்றி யளவு அனுபானங் கூட்டிக் கொள்ளச் சகல நோயுந் தீரும்.

### திவ்விய அக்கினிகுமாரன்

இரசம், நாவி இரண்டும் சமன்கூட்டிக் கொடுவே லிக் கஷாயத்திலரைத்து உருட்டி வச்சிரக்குகையிலிட்டு மூடிச் சீலைமண்செய்து முன்போற் குழிப்புடம் மணல் மறைவிலிட்டு எடுத்துத் திரிகடுகுத் தைலத்தாலரைத்து நாலிலொன்று நாவிகூட்டிச் சின்னியிலைச்சாற்றி லொருசா

மமும், புன்னையிலைச்சாற்றி லொருசாமமும் அரைத்துக் குன்றியளவு குளிகையுருட்டவும்.

## உத்தம அக்கினிகுமாரன்

இரசம், காந்தபற்பம், லோகபற்பம், அப்பிரகபற்பம், தாம்பிரபற்பம் இவை ஐந்தும் சமன் கூட்டிச் செருப்படிச்சாற்றால் ஒருநாளரைத்துக் குப்பியிலடைத்து வாலுகாயந்திரத்தில் ௬-சாம மெரித்து எடுத்துப் பொடிபண்ணவும். உழுந்தளவு.

## மகாஉத்தம அக்கினிகுமாரன்

இரசம், நவலோகம், தாம்பிரபற்பம், அப்பிரகபற்பம், கெந்தகம், அரிதாரம், மனோசிலை, நாவி, நேர்வாளம், நவச்சாரம், எவச்சாரம், சத்திசாரம், பஞ்சலவணம், திரிகடுகு, வசம்பு, ஓமம், கராம்பு, சாதிக்காய், நெல்லியரிசி, குடசப்பாலையரிசி, ஒட்டடை, காகமாட்சியம் இந்த முப்பத்தாறுவகையும் சமன்கூட்டி வெள்ளிலோத்தித்தைலம், கொடுவேலிவேர்க்கஷாயம், முருங்கைவேர்ச்சாறு, ஆடாதோடையிலைச்சாறு, எருக்கலைவேர்க்கஷாயம் இந்த ஐந்துவகையிலும் வகைக்கு ௧-சாமமரைத்துக் குப்பியிலடைத்து மூடி எழு சீலைமண் வலுவாய்ச்செய்துலர்த்தி வாலுகாயந்திரத்தில் குப்பி தலைகீழாக வைத்துத் தீபாக்கினி கமலாக்கினி காடாக்கினியாக மூன்றுநாளெரித்து ஒருநாள் ஆறவிட்டு எடுத்துப் பொடிசெய்யவும். 3-பலம் பொடிக்கு அரைவிராகனிடை நாவியும் ஒருவராகனிடை மிளகும் பொடிசெய்து கலந்து குன்றியிடைப் பிரமாணம் தெசமூலக் கஷாயத்திலிடச் சன்னிவகை, சுவாசகாசம், குன்மம், சூலை சகலமும் தீரும். வெற்றிலைச்சாற்றில் திப்பிலியும் கராம்பும் பொடிசெய்து கலந்து கொடுக்கக் குன்மம் சூலை

வாய்வுகள் தீரும். இஞ்சிச்சாற்றில்,சகலசுரங்களும் பெரும் பூசினிக்காய்ச்சாற்றில் தாபசுரமுந் தீரும்.

### பூத வயிரவன்

இரசம் கெந்தகம், தாம்பிரபற்பம் இவை மூன்றும் சமன் கூட்டிக் கொடுவேலி வேர்க்கஷாயத்தா லரைத்துக் குகையிலிட்டு மூடிச்சீலைமண் செய்து வாலுகாயந்திரத்தில் ஒருநாளெரித்து எடுத்துப் பூனைப்பித்தில் இரண்டுநாள ரைத்துக் குன்றியிடை குளிகை செய்து அனுபானங்களி லிடச் சன்னிவகை தீரும்.

### மத்த வயிரவன்

இரசம், நாவி அப்பிரகபற்பம், காரீயபற்பம் இவை நான்கும் சமன் கூட்டித் திரிகடுகுக் கஷாயத்தில் இரண்டு சாமமரைத்துக் குகையிலிட்டு மூடிச் சீலைமண் செய்து வாலுகா யந்திரத்தில் இரண்டு சாமம் எரித்து ஆறினபின் நாய்ப்பித்தி லரைத்துச் சணல் விரைபளவு உருட்டவும். இளநீர் காய்ச்சி அதில் உரைத்திட அந்தக சன்னி திரும்.

### ஆனந்த வயிரவன்

இரசம், கெந்தகம்,மனோசிலை, தாம்பிரபற்பம் இவை நான்கும் சமன் கூட்டிக் கண்டங்கத்தரிப் பழச்சாறும் சிறு வழுதலைப் பழச்சாறும் விட்டரைத்து உண்டைசெய்து குகையிலிட்டு மூடிச் சீலைமண் செய்து கலசத்திலே வாலு காயந்திரமாக வைத்துக் குழிவெட்டிச் சிறுகப்புடமிட்டு ஆறினபின் பசுமாட்டுப் பித்திலரைத்துச் சணல்விரைப் பிரமாணம் குளிகைபண்ணி இளநீர்காய்ச்சியாவது திரிகடு குக் கஷாயத்திலாவது உரைத்திடச் சித்தவிப்பிரமசன்னி பாதந் தீரும்.

### அற்புத வயிரவன்

இரசம், கெந்தகம், சாதிலிங்கம், அரிதாரம், வெண்காரம், லோகபற்பம், தாம்பிரபற்பம், வங்கபற்பம்; காரீய பற்பம் இந்தஒன்பதுவகையும் சமன்கூட்டித்திரிபலைக்கஷாயத்தில் ஒருநாளரைத்துப் பற்படாகக் கஷாயத்திஞலே தோலாயந்திரமாக ஒருநாள்எரித்து நல்லபாம்புப் பித்திலே அரைத்து குன்றிமணிப்பிரமாணம் குளிகை செய்து அனுபான விசேஷத்திலிடச் சிதாங்கசன்னி தீரும்,

### மனோகர வயிரவன்

இரசம், தாம்பிரபற்பம், எவச்சாரம், சத்திசாரம், படிகாரம்; பஞ்சலவணம் இந்தப் பத்து வகையும் சமன்கூட்டி எருக்கலம்வேர்க்கஷாயத்தில் ௩ நாளரைத்து வச்சிரக்குகையிலிட்டு மூடிச் சீலைமண்செய்து வாலுகாயந்திரத்தில் ஒருநாளெரித்து ஆறினவாறே எடுத்துக் கழுதைப் பித்தில் ஒருநாள் அரைத்துக் குன்றிமணியளவு குளிகைசெய்து தேனிவிடத் தாந்திரிக சன்னி தீரும்.

### கலைஞான வயிரவன்

இரசம், கெந்தகம், நாவி, வெண்காரம் வங்கபற்பம், இந்த ஐந்து வகையும் சமன்கூட்டித் திரிபலைக்கஷாயத்தில் உ-நாளரைத்து அந்தக் கஷாயத்திலே ஒருசாமம் தோலாயந்திரமாக எரித்து ஆறினவாறே எடுத்துப் பன்றிப் பித்தில் அரைத்துக் குன்றியளவு குளிகை செய்து இஞ்சிச்சாற்றிலிடக் கண்டகுப்ச சன்னி தீரும்.

### விதாரண வயிரவன்

இரசம், கெந்தகம்,வெள்ளைப்பாஷாணம் நாவி வங்கம் திப்பிலி இந்த ஆறு வகையும் சமன் கூட்டிக் கொடுவேலிக்

கஷாயத்தில் க-நாள் அரைத்து உண்டை பண்ணிக் குகை யிலிட்டு மூடிச் சீலைமண் செய்து வாலுகாயந்திரத்தில் ஒரு நாள் எரித்து ஆறினவாறேகெண்டைமீன் பித்தில் அரைத் துச் சணல் விரையளவு குளிகை செய்து அனுபான விசே டங்களிலிடக் காசசன்னிபாதம் திரும். பத்தியம் பாலும் சோறும். சர்க்கரை கரும்புஇளநீர் இவையும் கூட்டுக.

சொர்க்கானந்த வயிரவன்

இரசம், வங்கபற்பம், தாம்பிரபற்பம் மூன்றும் சமன் கூட்டி எருக்கலம்பாலில் ஒருநாள் அரைத்து அந்தப் பாலி லேதானே தோலாயந்திரமாக ஒருசாமம் எரித்துக் கலைமான் பித்தில் அரைத்துக் குன்றியளவு குளிகை செய்து திரிகடு குக் கஷாயத்திலிடப் புக்கநேத்திரசன்னி தீரும்.

சன்னிபாத வயிரவன்

இரசம், கெந்தகம்,நாவி,அப்பிரகபற்பம்,வெண்காரம், காரீயபற்பம் இந்தஆறுவகையும் சமன்கூட்டி. ஆலம்பாலில் ஒருநாள் அரைத்து அந்தப்பாலிலே தானே தோலாயந்திர மாகக் கட்டி ஒருசாமம்எரித்துக் கெண்டைமீன், கிடா, மயில், இந்த மூன்றுவகைப் பித்திலும் வகைக்கு ஒரு நாள் அரைத்துத் துவரைப் பிரமாணம் குளிகை செய்து திப் பிலிக் கஷாயத்திலிட இரத்திட்டிசன்னி தீரும்.

காருணிய வயிரவன்.

இரசம்,அப்பிரகபற்பம் சமன்கூட்டிக் கையாந்தகரைச் சாற்றில் ஒரு நாளரைத்துக் குகையிலிட்டு மூடிச் சீலைமண் செய்து வாலுகாயந்திரத்தில் ஒருசாமம் எரித்துக் காட்டுப் பன்றி, மயில் இவற்றின் பித்தில் இரண்டு நாள் அரைத்து உழுந்துப் பிரமாணம் குளிகைசெய்து அனுபான விசேடங் களிலிடப் பிரலாபசன்னி தீரும்.

## சித்தவயிரவன்.

இரசம், அரிதாரம் சமன் கூட்டிக் கற்றாழஞ்சாற்றில் அரைத்து அந்தச் சாற்றிலேதானே தோலாயந்திரமாகக் கட்டி ஒருசாமம் எரித்து மீன்பித்தில் அரைத்துத் துவரைப் பிரமாணம் குளிகைசெய்து தேனும் திப்பிலியும் கூட்டியிடச் சிங்குவாதசன்னி தீரும்; வாதம் முதலியவும் தீரும்.

## காலவயிரவன்.

இரசம், கெந்தகம், பெருங்காயம், எவச்சாரம், சத்திசாரம், திரிகடுகு, பஞ்சலவணம் இந்தப் பதின்மூன்று வகையும் சமன்கூட்டிக் கொடுவேலிவேர்க் கஷாயத்திலும் எருக்கலம்வேர்க்கஷாயத்திலும் ஒவ்வொருநாள் அரைத்துக் குகையிலிட்டு மூடிச் சீலைமண்செய்து வாலுகாயந்திரத்தில் இரண்டு சாமம் எரித்து நாய்ப்பித்தில் அரைத்துக் குன்றியிடை குளிகைசெய்து இளநீர் காய்ச்சி அதிலிட அபிநியாசசன்னியும் சுரம் சுசம் தீரும். பத்தியம்: தயிரும் சோறும்

## புராந்தகரசம்.

இரசம், கெந்தகம், சாதிலிங்கம், நாவி, நேர்வாளம் இவை சமன்கூட்டிக் கொடுவேலிவேர்க் கஷாயத்திலரைத்து அதிலே தோலாயந்திரமாகக் கட்டி ஒருநாள் எரித்துக் கெண்டைமீன் பித்தில் ஒரு நாளும் கள்ளிப்பாலில் ஒரு நாளும் அரைத்து உழுந்தளவு குளிகைசெய்து இஞ்சிச் சாற்றிலிடச் சுரம் எல்லாம் தீரும். எருக்கலம்வேர்க் கஷாயத்திலிட வாதமெல்லாம் தீரும். பத்தியம்; தயிரும் சோறும்.

## திரிபுராந்தகரசம்.

இரசம், கெந்தகம், அப்பிரகபற்பம் இவை சமன் கையாந்தகரைச்சாற்றிலரைத்து உலர்த்திப்பின் கெண்டைமீன் பித்திலரைத்து உண்டைசெய்து குகையிலிட்டு மூடிச்

சீலமண்செய்து குக்குடபுடமிட்டு எடுத்துக் கெண்டை மீன்பித்து, கறுப்பாட்டுப்பித்து, காட்டுப்பன்றிப்பித்து இவற்றில் வகைக்கு ஒருசாமம் அரைத்துக் குன்றியளவு குளிகைசெய்து இஞ்சிச் சாற்றிலிட வாதபித்த சிலேற்பன சுரங்கள் தீரும். பத்தியம்: மோராம்.

காளகண்டரசம்.

இரசம், கெந்தகம், மனோசிலை, நாவி, வெண்காரம், ஊமத்தைவிரை, திப்பிலி இவை சமன்கூட்டிச் செருப்படிச் சாற்றில் ஒரு நாளரைத்து அகலிலிட்டு மூடிச் சீலமண் செய்து குக்குடபுடமிட்டுக் கள்ளிப்பாலில் ஒரு சாமமும் மீன்பித்தில் ஒருசாமமும் அரைத்துக் குன்றியளவு குளிகை செய்து அனுபான விசேடங்களிலிடச் சன்னிவகையும் சுர வகையும் தீரும். பத்தியம்: பருப்புச்சோறும் கரும்புமாம்.

பத்திரகாளி ரசம்

இரசம், கெந்தகம், கெவுரிபாஷாணம், நேர்வாளம், வெண்காரம், சுக்கு, கடுக்காய் ஆமணக்கம்விரை இவை சமன் எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்றுநா ளரைத்து அகலிலிட்டு மூடிச் சீலமண் செய்து காட்டெரு முட்டை யிட்டுக் குக்குட புடமிட்டு எடுத்துப் பத்திலொன்று மிளகு பொடியும் மிளகளவு நாவியுங்கூட்டி ஆமணக் கெண்ணெயில் அரைத்துக் குன்றியளவு குளிகை செய்து அனுபான விசேடங்களிலிடச் சகல வியாதியுந் தீரும். பத்தியம் தயிரும் சோறும்.

புவனேஸ்வர ரசம்

இரசம், கெந்தகம், நாவி, அப்பிரகபற்பம், வெண்காரம், திரிகடுகு, ஊமத்தைவிரை சமன் பொடிசெய்து வச்சிரக்குகையிலிட்டு மூடிச் சீலமண் செய்து வாலுகா யந்தி

ரத்தில் மந்தாக்கினியாய் உ-சாமமெரித்து மீன்பித்தில் அரைத்து உழுந்தளவு குளிகைசெய்து அனுபான விதங்களிலிடச் சர்வரோகமும் சன்னி சுரங்களும் தீரும்.

## உமாமகேஸ்வர ரசம்

இரசம், நாவி, கெவுரிபாஷாணம், மனோசிலை, நேர்வாளம், அப்பிரகபற்பம் சமன் ம்நிபாகவிலைச் சாற்றில் ௲ நாளரைத்து அகலிலிட்டு மூடிச் சீலைமண் செய்து குக்குடபுடமிட்டு இஞ்சிச் சாற்றில் உ-சாமமரைத்துக் குன்றியளவு குளிகைசெய்து இஞ்சிச்சாற்றில் கடுக்காய்க் கஷாயத்திலிட சகலசுரமுந் தீரும்.

## நரசிங்கரசம்

இரசம், அப்பிரக பற்பம் சமன் கூட்டி எலுமிச்சம் பழச்சாற்றில் ஒருநாளரைத்து அதிலேயே தோலாயந்திரமாய் உ-சாமமெரித்து மயில் கோழி இவற்றின் பித்தில் ஒவ்வொருசாம மரைத்து உழுந்தளவு குளிகை செய்து இஞ்சிச் சாற்றிலிடச் சகல சுரமுந் தீரும்.

## கமலாசன ரசம்

இரசம், கெந்தகம், நாவி, நேர்வாளம் சமன் எருக்கலம்வேர்க் கஷாயத்தில் மூன்றுசாமமரைத்து அந்தக் கஷாயத்திலே தோலாயந்திரமாக ஒருசாமம் எரித்துக் குன்றியளவு அனுபான விசேடங்களிலே இடச் சுரங்களெல்லாம் தீரும்.

## வயிரவரசம்

இரசம், கெந்தகம், சாதிலிங்கம், நாவி, அப்பிரகம், திரிகடுகு, திப்பிலிமூலம், இந்துப்பு, கராம்பு சமன் செருப்படிச்சாற்றில் ஒருநாளரைத்து அகலிலிட்டு மூடிச் சீலைமண்

செய்து குக்குட புடமிட்டு உழுந்தளவு அனுபான விசே டங்களிலே இடச் சுரங்களெல்லாம் தீரும்.

### பாஷா ரசம்

இரசம், கெந்தகம், நேர்வாளம் சமன் அரசம்பட் டைச் சாற்றில் ஒருசாமம் அரைத்து அந்தச் சாற்றிலே தோலாயந்திரமாக ஒருசாமம் எரித்துக் குன்றியளவு அனு பான விசேடங்களிலே இடச் சர்வசுரமுந் தீரும்.

### நாராயண ரசம்

கெந்தகம், அப்பிரகம், திரிகடுகு, கடுகுரோகணி இவைசமன் கூட்டிப் பஞ்சகோலக்கஷாயத்தில் இரண்டுசாம மரைத்து வச்சிரக் குகையிலிட்டு மூடிச் சீலைமண் செய்து புடமிட்டு நரிப்பித்தில் இரண்டுநாள் அரைத்துக் குன்றி மணியளவுருட்டிவெற்றிலைச் சாற்றிலிடத் தோஷசுரம் விஷ சுரம் சன்னியுந் தீரும்,

### கமலலோசனரசம்

இரசம், அப்பிரகம், கெந்தகம், லோகபற்பம், தாம்பிர பற்பம் இவைசமன் கூட்டி வேப்பிலைச்சாற்றில் ஒருநாள் அரைத்து மணியாக்கி ஆறவைத்துக் குப்பியிலிட்டு மூடிச் சீலைமண் செய்து வாலுகா யந்திரத்தில் மந்தாக்கினியாக ஆறுசாமம் எரித்து ஆறினவுடன் நெல்லளவு அனுபான விசேடங்களிலிடச் சன்னிபாதந் தீரும்.

### பீதாம்பரரசம்

நாவி, சாதிலிங்கம், கடுகுரோகணி, தாம்பிரபற்பம், லோகபற்பம், கிட்டபற்பம் இவை ஆறும் சமன்கூட்டி எருக்கலம் வேர்க் கஷாயத்தில் ஒருசாமம் அரைத்து மணி யாக்கிஆறவைத்துக்குப்பியி விட்டு மூடிச் சீலைமண்செய்து

வாலுகாயந்திரத்தில் மூன்றுசாமம் மந்தாக்கினியாக எரித்து ஆறினவுடன் பொடிசெய்து குன்றிவிரைப் பிரமாணம் அனுபான விசேடங்களில் இடச் சன்னிகளெல்லாம் தீரும்.

### பராக்கிரமரசம்.

இரசம், கெந்தகம், அப்பிரகபற்பம், நாவி, வசம்பு இவைஐந்தும் சமன்கூட்டிக் கொட்டைக்கரந்தைச்சாற்றில் ஒருநாள் அரைத்துக் குகையிலிட்டுமூடிச் சீலைமண்செய்து புடமிட்டு ஆறினவுடன் ஊர்க்குருவிப் பித்தில் ஒருநாளரைத்து குன்றியளவு குளிகைபண்ணி அனுபானவிசேடங்களிலிடத் திரிதோஷசுரங்கள் எல்லாம் தீரும்.

### ராசராச ரசம்.

அரிதாரம், கெந்தகம், சங்குசுட்டநீறு, இரசம், கெந்தகம், சாதிலிங்கம், மனோசிலை, நாவி, துத்தம் இவை சமன் கூட்டி வேப்பிர்க்குக் கஷாயத்திலரைத்துக் குகையிலிட்டு மூடிச் சீலைமண்செய்து குக்குடபுடமிட்டு எடுத்துக் கருப்பாட்டிற் பித்திலும் கிடாப்பித்திலும் அரைத்துக் குன்றி அளவு குளிகைசெய்து திரிகடுகுக் கஷாயத்திலாவது மற்றும் ஏற்ற அனுபான விசேடங்களிலாவது இடச் சன்னி தீரும்.

### மகாவயிரவரசம்.

இரசபற்பம், காந்தபற்பம், லோகபற்பம், தாம்பிர பற்பம், அப்பிரகபற்பம் சமன்கூட்டிச் செருப்படிச்சாற்றில் அரைத்துக்குகையிலிட்டுமூடிச் சீலைமண்செய்து வாலுகாயந்திரத்தில்மந்தாக்கினியாக ஒருநாள் எரித்து எடுத்துப் பன்றிப்பித்தில் ஒருநாளரைத்துக் குன்றிவிரைப் பிரமாணம் குளிகைசெய்து அனுபானவிசேடங்களிலிடச் சன்னி சுரம் தீரும்.

### சிங்காரவயிரவ ரசம்.

சாதிலிங்கம், நாவி, மிளகு, திப்பிலி, வெண்காரம் சமன் எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து அந்தச் சாற்றில் தோலாயந்திரமாக ஒருசாமம் எரித்து ஆறியவாறே பொடி செய்து உழுந்துப் பிரமாணம் இஞ்சிச்சாற்றிலிட அதிசார சன்னிபாதம் தீரும்.

### காலவயிரவ ரசம்.

அப்பிரகபற்பம்,கெந்தகம்,அரிதாரம், மனேசிலை,துத்தம், துரிசு, நாவி, நேர்வாளம், வெண்காரம், சிவந்த உப்பு, இந்துப்பு, கல்லுப்பு இவை சமன்கூட்டி இலுப்பை நெய்யில் மூன்று நாளரைத்து அந்த நெய்யில் தோலாயந்திரமாக ஒருசாமம் எரித்து மீன்பித்தில் இரண்டுநாள் அரைத்து குன்றியளவு குளிகை செய்து ஒரு குளிகை எலுமிச்சம் பழச்சாற்றில் இளக்கி தலைபிற் குமேடாரி ஆடி மந்திக்கச் சயித்தியம், நடுக்கல், வலிப்பு, விக்கல், சுவாதகாசம், ஊமைச்சன்னிபாதம் இவை தீரும்.

### மனோகர வயிரவரசம்

அரிதாரம், கெந்தகம், அப்பிரகம், இரசம், எவச்சாரம்; சத்திசாரம்; படிகாரம்; வெண்காரம், இந்துப்பு மிளகு இவை சமன்கூட்டிப் பொடிபண்ணித் திரிகடுகுக் கஷாயத்தில் தோலாயந்திரமாக ஒருநாள் எரித்து மீன் பன்றி கிடா ஆடு இவற்றின் பித்தில் வகைக்கு ஒருநாள் அரைத்து உழுந்தளவு உருட்டி இஞ்சிச்சாற்றுல் மற்றும் அநுபான விசேடங்களிலிடச் சன்னி தீரும்.

### சூசிகாரசம்

சுவர்ணபற்பம், ரசபற்பம், தாம்பிரபற்பம் லோகபற்பம், காந்தபற்பம், காரீயபற்பம், வெள்ளீயபற்பம், அப்பிரகபற்பம், இரசம்; நாவி, கெந்தகம் இவை சமன்கூட்டிக்

கொடுவேலிவேர் எருக்கல்ம்வேர் சாரணைவேர் பொன்முசுட்டைவேர் சிந்தில்வேர் இந்த ஐந்து வகையும் தனித்தனி கஷாயஞ் செய்து வகைக்கு ஒரு சாமமும் கையாந்தகரைச்சாறு, கொட்டைக்கரந்தைச்சாறு நொச்சிச்சாறு ஆடாதோடைச்சாறு ஊமத்தைச்சாறு கற்ருழைச்சாறு எலுமிச்சம்பழச்சாறு இவற்றில் ஒவ்வொருசாமமுமாகப் பன்னிரண்டு சாமமரைத்து உலர்த்திப் பின் ஒருசாமமரைத்துப் பொடிசெய்து காசிக்குப்பியிலிட்டு வாய்மூடிச் சீலைமண் செய்து வாலுகாயந்திரத்தில் மந்தாக்கினியாகஎரித்து கிடா குதிரை காட்டுப்பன்றி ஆடு மயில் கோழி கரும்பாம்பு மீன் தவளை இந்தப் பத்துவகைப்பித்திலும் தனித்தனியே அரைத்துப் பரணியில் அடைத்து ஊசி முனையில் எடுத்து அனுபான விசேடங்களில் இட அசாத்திய சன்னிபாதம், க்ஷயம், பிலிகை, வெப்புப்பாவை, நீராமை, குன்மம் முதலாயின தீரும்.

### இராவணேஸ்வரரசம்

அரிதாரம், அப்பிரகபற்பம், கெந்தகம் வகை பலம் மூன்று. சிரகம் பலம் மூன்று. நிலப்பனைக் கிழங்குக் கஷாயத்தில் இரண்டுநாளரைத்துக் குகையிலிட்டுமூடிச் சீலைமண் செய்து வாலுகாயந்திரத்தில் மந்தாக்கினியாக ஒருநாள் எரித்து ஆறினவாறே எடுத்து ஊமத்தையிலைத் தயிலம், திரிபலைக் கஷாயம், பேய்ப்புடோற் கஷாயம், சிந்தில் தண்டுச்சாறு, பிரண்டைத் தண்டுச்சாறு, பழுபாகற் கிழங்குச் சாறு, கையாந்தகரைச் சாறு இந்த எட்டுவகையிலும் வகைக்கு ஒருசாமம் அரைத்து, மீன் கிடா மயில் ஆடு காட்டுப்பன்றி இந்த ஐந்துவகைப் பித்திலும் ஐந்துசாமம்

அரைத்து உழுந்தளவு உருட்டி அனுபான விசேடங்களில் இடச் சன்னிபாதம் தீரும்.

## மிருதசய ரசம்.

தாம்பிரபற்பம், இரசபற்பம், அரிதாரம், அப்பிரகபற்பம், கடல்நுரை சமன்கூட்டிச் சேவுகனூர்கிழங்குச் சாற்றில் அரைத்து உண்டைசெய்து குகையிலிட்டுமூடிச் சீலைமண் செய்து ஒரு கெசபுடம்போட்டு எடுத்து, மயில், ஆடு, மீன், பன்றி இவற்றின் பித்தில் வகைக்கு ஒரு சாமமரைத்துத் துவரையளவுருட்டி அனுபான விசேடங்களிலே கொடுக்கச் சகல வியாதியும் தீரும்.

## மிருதசஞ்சீவி ரசம்.

இரசம், கெந்தகம், சாதிலிங்கம், அரிதாரம், மனோசிலை, தொட்டி, கெவுரி, வெள்ளை, அப்பிரகபற்பம், நாவி, தாம்பிரபற்பம், எவச்சாரம், சத்திசாரம், படிகாரம், வெண்காரம், பஞ்சலவணம், வசம்பு, செங்கழுநீர்க்கோட்டம் இந்த இருபத்திரண்டும் சமன்கூட்டித் திரிகடுகுத் தைலத்தில் அரைத்துக் குப்பியிலிட்டு மூடிச் சீலைமண்செய்து வாலுகாயந்திரத்தில் மந்தாக்கினியாக இரண்டு சாமமெரித்து எடுத்து நேர்வாளத் தைலம், வெள்ளுள்ளித் தைலம், கொடுவேலிவேர்க்கஷாயம் இவற்றில் வகைக்கு ஒருநாளரைத்துப் பின் பாம்பு, மயில், கிடா, ஆடு இந்த நாலுவகைப்பித்திலும் வகைக்கு ஒருநாள் அரைத்துக் குன்றியளவுருட்டிக் கர்ப்பூரம் பஞ்சதாரைத் தண்ணீர் கூட்டி உரைத்திட அசாத்திய சன்னிபாதந் தீரும். வயிற்றிலெழுந்த நோய்களுந் தீரும்

## போகேந்திர ரசம்.

இரசம், அப்பிரகம், வெள்ளைப்பாஷாணம், கண்டகம், மனோசிலை, நாவி, நேர்வாளம், நல்லபாம்பு விஷம், நவலோ

சபற்பம், நவரத்தினபற்பம், பஞ்சலவணம், திரிகடுகு, எவச்சாரம், சத்திசாரம், படிகாரம், வெண்காரம், கருஞ் சீரகம், ஏலம், கராம்பு, இலவங்கபத்திரி, செங்கழுநீர்க் கோட்டம், கற்கடகசிங்கி, சடாமாஞ்சி, தேவதாரு, கிரந்தி தகரம், நிமிளை, கோமூத்திரசலாசத்து, அழிஞ்சிவிரை, எட்டிவிரை, கொடிவேலிவேர், மாவிலங்கைவேர், முருங்கை வேர், மருட்கிழங்கு இவையெல்லாம் சமன்;

ஊமத்தை, வேலிப்பருத்தி, குன்றி, மணித்தக்காளி, கருணை, கழற்கொடி, பாகல், கத்தரி, பேய்ப்புடோல், ஆடாதோடை, நொச்சி, பாவட்டை, தழுதாழை, பருத்தி, நாயுருவி, கஞ்சா, பிரமதண்டு, பிரமி, கொட்டைக்கரந்தை, கையாந்தகரை, ஆமணக்கு, வேம்பு, மூங்கில், செப்பு நெருஞ்சி, கீழ்காய்நெல்லி, விட்டுணுகிராந்தி, வெள்ளறுகு, அறைக்கீரை, முள்ளங்கி, பசளி, கொத்தமல்லி, பூசினி இவை யெல்லாம் இலை; பூசினிக்காய், சர்க்கரைவள்ளி, நாரத்தங் காய், எலுமிச்சம்பழம், முந்திரிகைப்பழம், பிரண்டைத் தண்டு, கோவைத்தண்டு, சீந்தில்த்தண்டு, கற்றாழைமடல், இவையெல்லாம்சாறு, இளநீர். இந்த நாற்பத்திரண்டுவகை யிலும் தனித்தனி அரைத்துக்கொள்வது. பின்,

மிளகரணை, செங்கத்தாரி, குடசப்பாலை, இலந்தை, வாகை, மா, பாலை, காட்டாத்தி, முள்ளிலவு, முட்பலாசம் இவையெல்லாம் பட்டை; தூதுவளை, கண்டங்கத்தரி, சிறு காஞ்சோன்றி, நெரிஞ்சி, மல்லிகை, வெள்ளைக்காக்குறட் டான், சிறுவழுதலை, தும்மட்டி இவையெல்லாம் வேர்; கார்த்திகை, மருட்கருணை, காட்டுக்கருணை, அமுக்கிரா, நிலப்பனை, தண்ணீர்விட்டான், கோரை, பெருங்கோரை, சேம்பு, செங்கழுநீர், நெய்தல், அல்லி, தாமரை, வாழை

இவையெல்லாம் கிழங்கு; கடலை, கொள்ளு, உழுந்து இந்த முப்பத்தைந்து வகைக் கஷாயத்திலும் தனித்தனி அரைத்துப் பின்,

கொடுவேலி, எருக்கு, முருங்கை, பவளமுருங்கை, காரை, நிலக்குமிழ், சத்தி, மஞ்சாடி, குருக்கத்தி, மகிழ், புன்னை, பாதிரி, கொன்றை, எட்டி ,கருங்காலி, புளி, தான்றிக்காய், கடுக்காய் ,நெல்லிமுள்ளி இந்தப் பத்தொன்பது வகையிலும் வேர்கள், விரைவகை, கிழங்குவகை உள்ளன கொண்டு தனித்தனி தைலமிறக்கி வெவ்வேறாக அரைத்துக்கொள்வது.

இங்ஙனம், சாறு கஷாயம் தைலம் என்னும் மூன்றிலும், கூடிய நூறுவகையிலும் தனித்தனியரைத்துக் குப்பியிலிட்டுமூடிச் சீலைமண்செய்து வாலுகாயந்திரத்தில் மந்தாக்கினியாக இரண்டுநாளெரித்து ஆறினவாறே மருந்தையெடுத்துப் பின்,

கிடா, எருது, குரங்கு, முயல், பாம்பு, எலி, தவளை, கொட்டான், கழுகு, காக்கை, ஊர்க்குருவி, மணிப்புறா, மாடப்புறா, வலியான், கருடன், கொக்கு, கோழி, மயில், கிளி, சகோரம் இந்த இருபதுவகைப்பித்திலும் தனித்தனியரைத்துச் சிறுபயறளவு குளிகையுருட்டவும். தேனில் கர்ப்பூரத்திலுடச் சகலநோயும் தீரும். சுகந்தமுதற் சகலமும் கூட்டலாம் பத்தியமில்லை. இம்மருந்தினால் நரைதிரையும் அகாலமரணமுமுண்டாகாது.

### பாசுபதரசம்

வெள்ளைப்பாஷாணம், கெந்தகம், மனோசிலை, அரிதாரம், துத்தம், துரிசு, நாவி, நேர்வாளம், இவை சமன்;

எல்லாம் கண்டளவு இரசம்கூட்டி எருக்கலைப்பால் வார்த்தரைத்து அந்தப்பாலிலே தோலாயந்திரமாக ஏழுசாமம் எரித்துப் பாம்புப்பித்தில் ஒருநாளரைத்துக் குன்றியளவுருட்டி எலுமிச்சம்பழச்சாற்றில் இளக்கித் தலையிலே சற்றுவைத்துக் குடோரியாடி விரலாலே மத்திக்கப் பதின்மூன்றுசன்னியுந்திரும்.

## விஷபராக்கிரமரசம்

இரசம், கெந்தகம், நாவி, வெண்காரம், சத்திசாரம், எவச்சாரம், சீனக்காரம், இவைசமன்கூட்டி ஊமத்தையிலைச்சாற்றில் ஒருநாளரைத்து உண்டைசெய்து குகையிலிட்டுமூடிச் சீலைமண்செய்து குக்குடபுடமிட்டு மீன், பன்றி இந்தஇரண்டுபித்திலும் இரண்டுநாளரைத்து உழுந்தளவுருட்டி மோர் குளிர்ந்தநீர் இவற்றிலிட வாதமனைத்துந்தீரும்.

## பிரளாயகலரசம்

இரசம், சாதிலிங்கம், நாவி, வெண்காரம், எவச்சாரம், சத்திசாரம், படிகாரம் திப்பிலி, கருஞ்சீரகம், ஓமம், லோகபற்பம், தாம்பிரபற்பம் இவை சமன்கூட்டித் திரிகடுகுக் கஷாயத்திலரைத்துக் குப்பியிலிட்டுச் சீலைமண் செய்து வாலுகாயந்திரத்தில் மந்தாக்கினியாக ஆறுசாமமெரித்துப் பாம்புப்பித்திலரைத்துக் குன்றியளவுருட்டி அனுபானவிசேடங்களிலேயிடச் சன்னிபாதந் தீரும்.

## உரோக விதாரணரசம்

இரசம், கெந்தகம், அரிதாரம், அப்பிரகபற்பம், நாவி, பொன்னிமிளை, வெள்ளை, கெவுரி, தொட்டி, வெண்காரம், இந்துப்பு, திப்பிலி சமன் கையாந்தகரைச் சாற்றிலரைத்து அந்தச்சாற்றிலே தோலாயந்திரமாக ஒருநாளே

ரித்து, திகடுகுத்தைலம், எருக்கலம்பால், எருக்கலம் வேர்த்தைலம் இவற்றில் வகைக்கு ஒருநாளரைத்துக் குன்றியளவுருட்டி அனுபானவிசேடங்களிலிடச் சகலசன்னியுந்தீரும். பத்தியம் தயிரும் சோறும்

### வீரப்பிரதாபரசம்

இரசம், நாவி, சொர்ணம், தாம்பிரபற்பம், முத்து, பவளம், எவச்சாரம், சத்திசாரம், படிகாரம், பெருங்காயம், திரிகடுகு சமன் திரிபலைக்கஷாயத்தில் மூன்றுநாளரைத்துக் குகையிலிட்டுமூடிச் சீலைமண்செய்து ஒரு கெசபுடம்போட்டு மீன், கிடா, மயில், ஆடு, காட்டுப்பன்றி இவற்றின் பித்தில் வகைக்கு ஒருநாளாக ஐந்துநாளரைத்துக் குன்றியளவுருட்டி அனுபானவிசேடங்களி விடச் சன்னிபாதம் சகலமும் தீரும்.

### பரஞ்சோதிரசம்

இரசம், கெந்தகம், பொன், வெள்ளி, முத்து, பவளம், அரிதாரம், வங்கபற்பம், அப்பிரகபற்பம் சமன் கஞ்சாவிலைச்சாற்றுலரைத்துக் குகையிலிட்டுமூடிச் சீலைமண்செய்து வாலுகாயந்திரத்தில் மந்தாக்கினியாக ஒருநாளெரித்து ஆறினவாறே எடுத்துப் பொடிசெய்து குன்றிவிரைப் பிரமாணம் வெந்நீரிலிடச் சன்னிபாதந் தீரும். பத்தியம் தயிரும் சோறும்

### கண்டபேரண்டரசம்

இரசம், கெந்தகம், நாவி, சாதிலிங்கம், கடுகுரோகணி சமன் கையாந் தகரைச்சாற்றில் மூன்றுநாளரைத்துக் குன்றியளவுருட்டி இஞ்சிச்சாற்றிலிடச் சன்னிபாதந் தீரும்.

### மும்மூர்த்திரசம்

துத்தம், துரிசு, வெள்ளைப்பாஷாணம் சமன் தேனிலே போட்டுத் தீபாக்கினியாக ஒருசாமமெரித்து எடுத்துப் பாகலிலைச்சாற்றிலரைத்து உண்டைசெய்து அந்தச்சாற்றிலே தோலாயந்திரமாக ஒருசாமமெரித்து எடுத்து ஊமத்தையிலைச்சாற்றி லரைத்துக் குன்றியள வுருட்டிப் பசுவின் பாலிலிடச் சீதசுரம் தீரும். பத்தியம் பயற்றுக்கஞ்சி

### சந்திரசேகரரசம்

இரசம், கெந்தகம், மிளகு, வெண்காரம் சமன் கூட்டி அதற்குச்சமன் மனோசிலைகூட்டி மீன்பித்தில் மூன்றுநா ளரைத்துக் குன்றியளவுருட்டி இஞ்சிச்சாறும் சர்க்கரை யும் கலந்திட வாதபித்தசுரம் மாறற்சுரம் தீரும். பத்தியம் மோரும் சோறும்.

### வீரபத்திரசம்

இரசம், கெந்தகம், நாவி, அப்பிரகபற்பம் சமன் கூட்டி இஞ்சிச்சாற்றி லொருநாளரைத்து உழுந்தள வுருட்டி இஞ்சிச்சாற்றில் மூன்றுநாளிடச் சன்னி பதின் மூன்றும் தீரும். பத்தியம் ஆட்டுப்பாலும் சோறும்

### சண்டேஸ்வரரசம்

இரசம், கெந்தகம், நாவி, சாதிலிங்கம் நேர்வாளம், திரிகடுகு, நற்சீரகம், கொடுவேலிவேர் இவைசமன்கூட்டிக் கையாந்தகரைச்சாற்றில் மூன்றுநாளரைத்துக் குன்றி யளவுருட்டவும். சீதசுரத்துக்கு: இஞ்சிச்சாறும் சர்க்கரை யும்; சயத்துக்கு:இஞ்சி; மந்தத்துக்கு: மிளகுப்பொடி; பித்தத்துக்கு: நெல்லிக்காய்ச்சாறு; சூலைக்கு: கடுக்காய்

## கனகசுந்தரரசம்

இரசம், சாதிலிங்கம், நாவி, வெண்காரம், நிமிளை, அப்பிரகபற்பம், தாம்பிரபற்பம், ஈயபற்பம், வங்கபற்பம், எஃகுபற்பம், காந்தபற்பம், பொன் வெள்ளி சமன் எல்லாம் கண்டளவு கெந்தகம்கூட்டிக் கொடுவேலிக் கஷாயத்தில் இரண்டுசாமமரைத்து வச்சிரக்குகையிலிட்டுமூடிச் சீலமண்செய்து குக்குடமுடமிட்டு ஆறினவாறே பொடி செய்து சமன் திரிகடுகுப்பொடிகலந்து குன்றியளவு அனுபான விசேடங்களிலிடச் சன்னி, சுரம், வாதம், மாந்தை, சயம் முதலியன தீரும்.

## ஆனந்த வயிரவரசம்

கெந்தகம், சாதிலிங்கம், வெண்காரம், மிளகு, திப்பிலி ஊமத்தைவிரை சமன் கஞ்சாவிலைக்சாற்றில் ஒரு நாளரைத்துக் கடலையளவுருட்டி அனுபானவிசேடங்களிலிடக் கிரகணி அக்கினிமந்தசுரம் தீரும்.

## சிங்காரவயிரவரசம்

நாவி, கெந்தகம், சாதிலிங்கம், வெண்காரம், திரிகடுகு சமன்கூட்டி எலுமிச்சம்பழச்சாற்றில் மூன்றுநாளரைத்துக் குன்றியளவுருட்டி அனுப்பானவிசேடங்களி லிடச் சுவாதகாசம் அதிசாரம் அசிரணம் அக்கினிமாந்தம் இவையெல்லாந் தீரும்.

## வித்தியாதரரசம்

இரசம், கெந்தகம், அரிதாரம், மனோசிலை, துத்தம் தாம்பிரபற்பம் சமன் துளசிச்சாற்றிலும் நொச்சிச்சாற்றிலும் வகைக்கு ஒருநாளரைத்துக் கடலையளவுருட்டித் தேனும் திப்பிலியும் கூட்டியிடச் சீதசுரம்முதலியன தீரும்.

## இராசப்பிரதாப மார்த்தாண்ட ரசம்.

நாவி, வெண்காரம், நேர்வாளம் மூன்றும் சமன்கூட்டி அதற்குச்சமன் சாதிலிங்கம் கூட்டி இரண்டுசாமம் அரைத்துப் பொடிசெய்து உழுந்தளவு சர்க்கரை கலந்திடச் சீதசுரந் தீரும்.

## மகா சுராங்குசம்.

இரசம், கெந்தகம், நாவி, ஊமத்தைவிரை சமன் எலுமிச்சம்பழச் சாற்றில் ஒருநாளும் இஞ்சிச் சாற்றில் ஒருநாளும் அரைத்து முத்துக்கொட்டை அளவுருட்டி இஞ்சி, சுக்கு, வெற்றிலை இவற்றிலிடச் சீதசுரம், மாறற்சுரம், திரிதோஷசுரந் தீரும்.

## பதாதி வடகம்.

இரசம், கெந்தகம், நாவி, நேர்வாளம், தாம்பிரபற்பம், லோகபற்பம், திரிபலை, திரிகடுகு, திப்பிலிமூலம், வாய்விளங்கம், ஏலம், இலவங்கபத்திரி, நாகேசுரம், அரேணுகம், முத்தக்காசு, சித்திரமூலம் இவை சமன்கூட்டிச் சித்திரமூலக்கஷாயத்தில் ஒருநாள் அரைத்து உலர்த்திப் பொடிசெய்து பொடிக்கு இரட்டி பழவெல்லம் கூட்டியிடித்துப் புளியவிரைப் பிரமாணம் உண்டைசெய்து உலர்த்தி வைத்துக்கொள்ளவும். சுவாதகாசத்துக்கு திப்பிலியும் தேனும் கூட்டிக் கொடுக்கவும். சன்னிக்கு இஞ்சிச்சாறு; பித்தசன்னிக்கு சர்க்கரை; பாண்டுவுக்கு வெல்லம்; பாண்டுக்கிரகணிக்கு எருமைத்தயிர்; மகோதரத்துக்கு கொள்ளுச்சாறு, சீதசுரத்துக்கு வெற்றிலைச்சாறு; மற்றும் நோய்களுக்கு அநுபான மறிந்து கொடுக்கப் பலநோய்களுந் தீரும்.

### அரித்திரா வடகம்

மொளிமஞ்சள், மரமஞ்சள், மிளகு, திப்பிலி, வாய் விளங்கம், வேப்பிலை, பெருங்கோரை, முத்தக்காசு இவை சமன்கூட்டி வெள்ளாட்டு மூத்திரத்திலே ஒருநாள் ஊறப் போட்டு மற்றநாள் அரைத்துக் குன்றியளவு குளிகை செய்து நிழலுலர்த்தி திரிதோஷங்களுக்கும் வெல்லத்தி லிடவும்; பாண்டுவுக்கு கோமூத்திரத்திலிடவும்; இரத்த அதிசாரத்துக்கு ஏலம், இலவங்கம்; அதிசாரம், கிரகணிக்கு மோர்; கண்சிவப்பு, நீர்ப்படர்த்தி, திமிர், புழுவெட்டு முத லிய கண்வியாதிகளுக்கு கோமூத்திரத்தில் வெந்நீரிலிடவும்; பாம்பு விஷத்துக்கு எட்டுண்டை அனுபானங்களிலிட்டுக் கடிவாய்க்கு மோரிலிழைத்துப் பற்றிடவும்; தேள் கடிக்கு கடிவாயில் எருக்கலம்பாலிலிடவும்: இப்படிக் குணங்கண்டு அனுபானங் கூட்டிக்கொள்க.

### மண்டூர வடகம்.

நாற்பதுவருடஞ்சென்ற தஞ்சாவூர்க்கிட்டத்தைப் பசு மூத்திரத்தில் ஏழுவிசை காய்ச்சித் தோய்த்து இடித்துத் தூள்செய்து திரிபலைக்கஷாயம் விட்டரைத்து மண்சட்டியி லாவது இரும்புச் சட்டியிலாவது இட்டு மேற்படி கஷாயம் விட்டு அதுசுவற வேகவைத்து, இப்படி ஏழுமுறை அரைத் தரைத்துக் கலக்கி வேகவைக்கவும். இதுபோலவே சீந் திற்கஷாயம், சாரணை, பிரண்டை, தண்ணீர்விட்டான் கிழங்கு, நொச்சி, கைபாந்தகரை, கற்றாழை இவை ஒவ் வொன்றிலும் தனித்தனி ஏழுமுறை அரைத்தரைத்துக் கலக்கி வேகவைத்து நன்குபொடிபண்ணி வைத்துக்கொள் ளவும். இது மண்டூரபற்பம். திரிபலையும் திரிகடுகும் சமன் கூட்டிப் பொடித்து மண்டூரபற்பம் சமனிடை கூட்டிக் கலந்து தேனிலாகுதல் நெய்யிலாகுதல் குழைத்து இலந்

தைக்காயளவு கொள்ளக் காமாலை, சோகை, விஷவாத பாண்டு,மகோதரம்,கிரகணி,பெரும்பாடு முதலியன தீரும்.

### லோகவடகம்.

லோகம் பொடிசெய்து திரிபலைக் கஷாயத்தில் அரைத்து மண்சட்டியிலாயினும் இரும்புச்சட்டியிலாயினும் இட்டுச் சட்டிநிரம்ப மேற்படி கஷாயம் விட்டு அதுசுவற வேகவைத்து இப்படி எழுமுறை செய்யவும். இதுபோலவே மஞ்சள், நொச்சியிலை, கையாந்தகரை, இஞ்சி இவற்றின் சாறுகளில் வகைக்கு எழுமுறை அரைத்தரைத்து வேகவைத்து எடுக்கவும். திரிகடுகு, திரிபலை இவற்றின் சூரணம் சமன்கலந்து அரைத்து முன்போல உண்ண முன் சொல்லிய வியாதிகள் தீரும். மண்டூரபற்பம், லோகபற்பம் இரண்டும் சமன்கலந்து அரைத்து தேன், நெய், இஞ்சிச் சாறு, சுக்குநீர் முதலிய அனுபானங்களில் உண்ணப் பல நோய்களுந் தீரும். பத்தியமாய் இருக்கவும்; பால், நெய் கூட்டலாம்.

### மண்டூரபற்ப மாத்திரை.

நாற்பது வருடஞ்சென்ற பழங்கிட்டத்தைச் சட்டியில் விட்டுச் சட்டிநிரம்ப வெள்ளாட்டு மூத்திரம் விட்டு மூடிச் சீலைமண்செய்து கெசபுடம் போடவும். இப்படி மூன்று முறை புடமிட்டு எடுத்து வெள்ளைச்சாரணை, கையாந்தகரை, காட்டுமுந்திரிகை, வட்டத்திருப்பி, சிறுகுறிஞ்சி, தலைசுருளி, மருளுமத்தை, சித்திரமூலம், எருக்கலை, பேயத்தியிலை, வேப்பிலை, கண்டங்கத்தரி, ஆடாதோடை, கற்றாழை இந்தப் பதினாலுவகைச் சாற்றிலும் தனித்தனியரைத்துப் பதினாலு கெசபுடம்போட மண்டூரம்பற்பமாம். இந்தப்பற்பம்-பலம்-ஒன்றரை, திரிபலை, திரிகடுகு, செவியம், வாய்

விளங்கம், முத்தக்காசு வகை-பலம்-ஒன்று கூட்டிக் கையாந் தகரைச் சாறுவிட்டு அரைத்துப் பாக்களவு உண்டைபண்ணித் தேனிற்கொள்ளப் பாண்டு, காமாலை, சுரம், சயம், கிரகணி முதலியன தீரும்.

---

## சூரணவிதி.

### அமுதவல்லிச் சூரணம் 1.

ஏலம், இலவங்கபத்திரி, அதிமதுரம், கோட்டம், கராம்பு, சீரகம், கர்ப்பூரம், கூகைநீறு, நெல்லிமுள்ளி, ஆண்மாவைக் கிழங்கு, அமுக்கிரா, தண்ணீர்விட்டான் கிழங்கு, கோரைக்கிழங்கு, நிலக்குமிழ்வேர், பொன்னுங், காணிவேர், நெருஞ்சிவேர், நீர்முள்ளிவிரை, இலவம்பிசின் சீந்திற்கிழங்கு இவை சமன்கூட்டிச் சூரணித்து அதற்கு இரட்டி சீந்திற்சர்க்கரை கலந்து வைத்துக்கொள்ளவும். பிரமாணம்-வெருகடி-உதயத்தில் பசுப்பால், தேனும் சாயங்காலத்தில் வெந்நீரும் அனுபானமாகக் கூட்டியுட் கொள்ள யோனிதோஷம், லிங்கதோஷம், தாதுநட்டம், சயம் முதலியன தீரும்.

### அமுதவல்லிச் சூரணம் 2.

ஏலம், கராம்பு ,செங்கழுநீர்க்கோட்டம், சிறுநாகம்பூ, குங்குமப்பூ, தாளிசபத்திரி, முந்திரிகைப்பழம், நற்சந்தனம், கர்ப்பூரம், செஞ்சந்தனம், தேவதாரம், நல்லமஞ்சள், வால்மிளகு, சீரகம், வெட்டிவேர், நெருஞ்சிவேர், அமுக்கிராவேர், நரிப்பயறுவேர், இலவம்பிசின், நெற்பொரி இவை சமன்கூட்டிச் சூரணித்துச் சீந்திற்சர்க்கரை சமன் கலந்து தேனில் நெய்யில் வெருகடிப்பிரமாணம் கொள்ள மேகம்-20ம் தீரும். பத்தியம்

## ஏலாதிச் சூரணம்

ஏலம்-பலம்-1. இலவங்கம்-பலம்-2. தாளிசபத்திரி-பலம்-4. திப்பிலி-பலம்-8. முந்திரிகை, பேரீஞ்சு, மதுரம், சர்க்கரை-வகை-பலம்-ஒன்றரை வெல்லம்-பலம்-1. இந்தப் படிகூட்டிச் சூரணித்து வெருகடி காலை மாலை தேனிற் கொள்ளச் சயம், பித்தம், நீர்ச்சுவாதம், அரோசிகம், சத்தி, மூர்ச்சை, வாய்வு சகலமுந் தீரும்.

## அசுவகந்திச் சூரணம்

கராம்பு-1. சிறுநாகம்பூ-2. ஏலம்-4. மிளகு-8. திப்பிலி-16. சுக்கு-32. அமுக்கிரா-64. சூரணித்துச் சமன் சர்க்கரை கலந்து வெருகடி கொள்ளச் சுவாதகாசம், சிரரோகம், பீனிசம், மந்தாக்கினி, கிரகணி, குன்மம், அசீரணம், பயித்தியசுரம் தீரும்.

## திராட்சாதிச் சூரணம்

முந்திரிகை, பேரீஞ்சு, குங்குமப்பூ, ஏலம், கோட்டம் மதுரம், நற்சீரகம், மல்லி, கஸ்தூரிமஞ்சள், மரமஞ்சள், அடவிகச்சோலம், திரிபலை, திரிகடுகு, கூகைநீறு; நெல்லுப் பொரி, சீந்திற்சர்க்கரை, சந்தனம், மூத்தக்காசு, நெருஞ்சிவேர், நிலக்குமிழ்வேர், சிற்றமட்டிவேர், பேரமட்டிவேர், இலாமிச்சம்வேர், தாமரைவளையம், நெய்தற்கிழங்கு இவை சமன் சூரணம்பண்ணி அதற்குச் சமன் சர்க்கரை கலந்து தான்றிக்காய்ப் பிரமாணம் தேனிலாகுதல் நெய்யிலாகுதல் தினம் இருவேளையும் கொள்ள மேகம், பயித்தியம், அதிசாரம், சயரோகம், சீரோகம், சுரரோகம் சகலமும் தீரும். பத்தியமாகச் சாப்பிடவும்.

## தாளிசபத்திரிச் சூரணம்.

ஏலம், இலவங்கம் வகை-பலம்-உஇ. தாளிசபத்திரி, திரிகடுகு வகை-பல-ரு. கூகைநீறு-பல-க0. சூரணித்துச்

சமன் சர்க்கரை கலந்து பாக்களவு தினம் இருவேளையும் நெய்யில் தேனில் பத்தியமாய்க் கொள்ள அதிசாரம், அரோசிகம், இருமல், குடல்வாதம் தீரும்.

### பறங்கிப்பட்டைச் சூரணம்.

பறங்கிப்பட்டை-பலம்-க0. சாதிப்பூ, இலவங்கப்பூ, இலவங்கபத்திரி, சாதிக்காய், தேவதாரு, தாளிசபத்திரி, வாய்விளங்கம், கோட்டம், அரத்தை, சிறுதேக்கு வகை-பலம்-க. கூட்டிச் சூரணித்து வெருகடி சர்க்கரை சமன் கலந்து கொள்ளச் சூலை, பிரமேகம், மூத்திரக்கிரிச்சிரம், கல்லடைப்பு முதலியன தீரும்.

### குக்கிற்பட்டைச் சூரணம்

பறங்கிப்பட்டை-பலம்-10. மிளகு, திப்பிலி, மல்லி, வாய்விளங்கம் வகை-பலம்-உ. பறங்கிப்பட்டையைச் சிறுக நறுக்கி மற்றச் சரக்குகளோடு விரவிக்கொள்ளவும். சதுரக்கள்ளி, வாதமடக்கி இரண்டும் சிறுகநறுக்கிப் பானையிலிட்டுத் தூணிநீர் விட்டு வேடுகட்டி அந்தவேட்டின்மேல் மேற்கூறிய சரக்குகளை வைத்து மூடிச் சீலைமண்செய்து இரண்டு சாமமெரித்து இடித்துச் சூரணம்பண்ணிக் கொள்ளவும்.

குக்கில் பலம்-இரண்டு. இதனைக் கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், முள்ளி, வேப்பம்பட்டை இவைகளின் கஷாயம், கோசலம் பால் இவைகளில் வகைக்கு ஒரு சாமம் தோலாயந்திரமாக எரித்துப் பின் பசுநெய் தெளித்து வறுத்திடித்துச் சூரணம்பண்ணி மேற்கூறிய சூரணத்துடன் கலந்து வெருகடி காலைமாலை வெந்நீரில் மண்டலம் உட்கொள்ளவும். நாலுநாட்களுக்கொருமுறை எண்ணெய்தேய்த்து முழுகவேண்டியது. சூலை, மேகம், வாதம், குன்மவாயு, கிரகணிவகையெல்லாந் தீரும்.

## உரோகாரிச்சூரணம்

திரிகடுகு, இருசீரகம், ஓமம், உள்ளி, வசம்பு, பெருங்காயம், அத்தித்திப்பிலி, திப்பிலிமூலம், மல்லி, சதகுப்பை, செவியம் நேர்வாளம், சத்திசாரம், எவச்சாரம், நவச்சாரம் வெண்காரம், பஞ்சலவணம் இவை சமன்கூட்டிச் செய்த சூரணம் பலம் ஒன்று. கொடிவேலிவேர், தலைச்சுருளிவேர், பேய்முசுட்டைவேர், பேய்த்தும்மட்டிவேர், அமுக்கிராய்வேர், வேளைவேர், காட்டுமல்லிகைவேர், முருங்கைவேர், மருட்கிழங்கு, கறிக்கருணைக்கிழங்கு, காட்டுக்கருணைக்கிழங்கு, வெருகங்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, நிலவேம்புசமூலம், சிறுநெருஞ்சிசமூலம், கையாந்தகரை சமூலம் இவை சமன்கூட்டிச் செய்தசூரணம் பலம் ஒன்று. பாவிலவித்துச் சுத்திசெய்த சிவதைவேர்ச்சூரணம் பலம் ஒன்று. இந்த மூவகைச்சூரணமும் கலந்து அரைத்துத் தினம் வெருகடி வெந்நீர், நெய், தேன் இவற்றிலொன்றை அனுபானமாகக்கூட்டி யுட்கொள்ள வாதம் எண்பதும், காமாலை, சோகை, பாண்டு, விஷபாகம், கவிசை, பெருவயிறு, வெப்புப்பாவை, நீர்க்கோவை, வீக்கம், ஈரல் வளர்ச்சி, மூலவியாதி, நெஞ்சுலர்ந்துபோதல், அசீரணம் அக்கினிமந்தம் சகலமும் தீரும். உப்புப் புளி கைப்பு நீக்கவும்.

## யோகசூரணம்

திரிகடுகு, திப்பிலிமூலம், செவியம், இருசீரகம், சிற்றரத்தை, சிறுமூலம், ஓமம், மல்லி, சதகுப்பை, பெருங்காயம், வெள்ளுள்ளி, வசம்பு, நேர்வாளம், எவச்சாரம், சத்திசாரம், நவச்சாரம், பஞ்சலவணம், வெண்காரம், நிலவேம்பு, அத்தித்திப்பிலி, பேய்த்தும்மட்டிவேர், பேய்முசுட்டைவேர், தலைச்சுருளிவேர், காட்டுமல்லிகைவேர், வெள்

ஊச்சாரணைவேர், முட்காவிளாய்வேர், புங்கம்வேர், மருட் கிழங்கு, வெருகங்கிழங்கு, கருணைக்கிழங்கு, மூங்கில், கையாந்தகரை, காட்டுமுருங்கை, சிறுநெருஞ்சிக்காய் இந்த நாற்பதும் சமன்கூட்டிச்செய்த சூரணம்-பலம்-௨. சிவதை வேர்ச்சூரணம்-பலம்-க. கலந்து வெருகடி தேனில் நெய் யில் வெந்நீரில் மண்டலம் இருவேளையுங்கொள்ள வெப்புப் பாவை, கெண்டை, கவுசி, குன்மம், மலக்கட்டு, அக்கினி மந்தம், வீக்கம், காமாலை, விக்கல் முதலியன தீரும்.

## சம்பாதிச் சூரணம்

நாவற்பட்டை-பலம்-அ. அத்திப்பட்டை-பலம்-ச. காசுக்கட்டி-பலம்-௨. தென்னம்பாளையரிசி-பலம்-க. கருவா ழைக்கிழங்கு-பலம்-க. அரக்கு-பலம்-க. அபின்-பலம்-வ. இவற்றைச் சூரணித்து ஒருவேளைக்கு-ச விராகனிடை வீதம் காலையில் பசுப்பால் பசுநெய்புடனும், மாலையில் தேனுடனும் கூட்டி யுட்கொள்ள; யோனிரோகம், கெர்ப் பக்கரைவு, புழுக்கடி, எலும்புருக்கி, பெரும்பாடு தீரும்.

## அட்டசூரணம்

சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம், நற்சீரம், ஓமம், பெருங்காயம், இந்துப்பு இந்தஎட்டும் சமன்கூட்டிச் சூரணஞ்செய்து வெருகடி வெந்நீரில், தேனில், நெய் யில் மற்றும் ஏற்ற அனுபானங்களிலிட அசீரணம், அரோ சிகம், அக்கினிமந்தம், வாய்வு, சத்தி முதலியன தீரும். இச்சூரணத்துக்குச் சமன் வெல்லம் சாறுவகை பால் முத லியவற்றிற் பாகுகாய்ச்சிச் சூரணத்தைத்தூவிப் பிசைந்து ஆமணக்கெண்ணெயாயினும் நெய் தேன் இவையாயினும் விட்டு லேகியபதமாகக் காய்ச்சி உண்ணினும் நன்றாகும்.

சூரணத்தைச் சோற்றில் தூவி நெய் எண்ணெய் காய்ச்சி விட்டுப்பிசைந்து சாப்பிட வாய்வுஅனைத்தும் சாந்தமாகும்.

## தீபாக்கினி சூரணம்

இந்துப்பு,சிவந்தஉப்பு, கல்லுப்பு, சவர்க்காரம், எவச்சாரம், திரிகடுகு, திப்பிலிமூலம், ஆனைத்திப்பிலி, கடுக்காய் வாய்விளங்கம், ஓமம், பெருங்காயம், கொடுவேலிவேர் சமன்கூட்டிச் சூரணஞ் செய்து வெருகடி எடுத்துச் சோற்றில் தூவிப் பசுநெய் உருக்கிவிட்டு ஐந்துபிடி சாப்பிட்டுப் பின்பத்தியமாய்க்கொள்ளவும். வாதம், சுரோணிதவாதம், பிரமேகவாதம், வாய்வு, அதிசாரம், உவாந்தி, வயிற்றுவலி, புளித்தேப்பம் முதலியன தீரும்.

## சாரணைக்கற்பம்.

வெள்ளைச்சாரணைவேர் சிறுகநறுக்கிப் பலம்-௨௫. பசுப்பால் இரண்டு மரக்காலிற் போட்டுத் தீயாமல் பால்சுண்டவேகவைத்து நிழலுலர்த்தி இடித்துப் பொடிசெய்து அதற்குச்சமன் திரிகடுகு, திரிபலை, எலம், கராம்பு, சாதிக்காய் சாதிபத்திரி, சீரகம், சிற்றமட்டிவேர், நெருஞ்சிவேர் இவை பதின்மூன்றும் சமன் கூட்டி இடித்துச்செய்த சூரணம் கலந்து வெருகடி தேனிற்கொள்ள வாதம் ௮௰, சிலேற்பனம் ௨௰, கவுசி, சூலை, மந்தாக்கினி, வாய்வு முதலியன தீரும்.

## மூலவாய்வுச் சூரணம்.

நிலப்பனைக்கிழங்கு, பழுபாகற்கிழங்கு, மருட்கிழங்கு பிரண்டை, காட்டுக்கருணைக் கிழங்கு, புளிநரளை, கொடுவேலி சமன்கூட்டிச் சூரணஞ்செய்து மோரில் வெல்லம், சர்க்கரை இவை தூவிக்கலந்து குடிக்க மூலவியாதி, கிரகணி தீரும்.

## உள்மூலத்துக்குச் சூரணம்.

கல்லுப்பு, முள்ளிவிரை, பிரண்டைவேர், புளிப்பிரண்டைக்கிழங்கு, வெருகங்கிழங்கு, சேம்புக்கிழங்கு சமன் கூட்டி முள்ளிப்பழச்சாறு விட்டு உலர்த்திப் பின் பிரண்டைச்சாறு விட்டு உலர்த்திச் சூரணம்பண்ணி மேற்கூறிய இரண்டு சாறும் சமன் கலந்து விட்டரைத்து உண்டை செய்க. அல்லது நிழலுலர்த்திச் சூரணம்செய்க. தேனில் வெள்ளாட்டு நெய்யிற் குழைத்து உட்கொள்ள உள்மூலந் தீரும்.

## மகாஏலாதிச்சூரணம் 1.

ஏலம், இலவங்கம், கோட்டம், மதுரம், கராம்பு, சாதிக்காய், குங்குமப்பூ, சிறுநாகம்பூ, கல்லுப்பு செண்பகப்பூ, தாளிசபத்திரி, இலவங்கபத்திரி, சமுத்திராப்பச்சை முந்திரிகை, பேரீஞ்சு, குருசாணி, சதகுப்பை, மல்லி, இருசீரகம், கார்புகாஅரிசி, தற்கோலம், கற்கடகசிங்கி, சடாமாஞ்சில், கொடித்தகரம், கூகைநீறு, மரமஞ்சள், மஞ்சள், கஸ்தூரிமஞ்சள், கோரோசனை, செஞ்சந்தனம், நற்சந்தனம், தேவதாரு, அகில், கர்ப்பூரம், திரிகடுகு, திரிபலை, திப்பிலிமூலம், தெசாபுரம், சிறுதேக்கு, செவியம், செங்கழுநீர்க்கிழங்கு, நெய்தற்கிழங்கு, பூமிசர்க்கரைக் கிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, கோரைக்கிழங்கு, அமுக்கிராக்கிழங்கு, சிற்றமட்டிவேர், பொன்முசுட்டைவேர், நெரிஞ்சிவேர், நன்னாரிவேர், வெள்ளைச்சாரணைவேர், இலாமிச்சைவேர், வெட்டிவேர் இவையெல்லாம் சமன்கூட்டிச் சூரணஞ்செய்து புதிக்கலசத்திலிட்டு வைத்துக்கொள்ளவும். வெருகடி சர்க்கரை சமன்கூட்டி, மண்டலம் இருவேளையுங் கொள்ள ஈழை, உளைமாந்தை, சயம், பித்தபாண்டு, கிரகணி, அதிசாரம், பிரமேகம், எலும்

புருக்கி, திரிதோஷங்களினல் வந்தசுரம் முதலியனதீரும். கைப்புப் புளிப்புத் தவிரவும். பழ அரிசி, முள்ளுக்கீரை, பருப்பு, நெய், பால், மிளகு, கத்தரிப்பிஞ்சு கூட்டலாம். வெந்நீர் பரிமாற்றம்.

மகாஏலாதிச் சூரணம் 2.

ஏலம், இலவங்கம, சிறுநாகம்பூ, சடாமாஞ்சில், திரிகடுகு, மல்லி, மரமஞ்சள், தாளிசபத்திரி, சாதிக்காய், கராம்பு, பச்சைக்கர்ப்பூரம், தேவதாரம், மதுரம், முந்திரிகை, பேரீஞ்சு, கூகைநீறு, அத்தித்திப்பிலி, கடுகுரோகணி, இருசீரகம், மஞ்சள், நெல்லிக்காய், முள்ளிலகம் பிசின், காசுக்கட்டி தற்கோலம், நிலவேம்பு, சிறுதேக்கு, அரேணுகம், அமுக்கிரா, நன்னரி, சீந்தில், நிலப்பனை, நெருஞ்சில்வேர், செங்கழுநீர்க்கிழங்கு, முத்தக்காசு, தாமரைத்தாது, குங்குமப்பூ, கோரோசனை, சமன் சூரணஞ்செய்து சீனி, தேன், நெய், பால் இவற்றிற்கொள்ளப் பழஞ்சுரம், மேகம், சயம், இருமல், சலரோகம் முதலியனதீரும்.

மகா தாளிசபத்திரிச் சூரணம்

தாளிசபத்திரி இலவங்கபத்திரி குங்குமப்பூ சாதிக்காய் சாதிப்பூ முந்திரிகை பேரீஞ்சு ஏலம் இலவங்கம் மதுரம் கோட்டம் குருசாணியோமம் மல்லி சதகுப்பை வாய்விளங்கம் சிறுநாகம்பூ நாவற்பூ செண்பகப்பூ செவியம் சிற்றரத்தை சிறுதேக்கு தற்கோலம் இருசீரகம் கார்புகாஅரிசி அதிவிடயம் கடுகுரோகணி அத்தித்திப்பிலி திப்பிலிமூலம் வால்மிளகு கற்கடகசிங்கி கூகைநீறு காட்டுக்கோரோசனை தெசாபுரம் திரிபலை திரிகடுகு இலாமிச்சைவேர் விளாம்பிசின் மாதளையோடு சிற்றமட்டி முத்

தக்காசு நெரிஞ்சிவேர் வெட்டிவேர் இவை சமன் சூரணம்பண்ணி இரண்டு வெருகடிப்பிரமாணம் தேனில் சர்க்கரையில் மண்டலம் இருவேளையும் கொள்ள இரத்தபித்தம் உளைமாந்தை சயம் அதிசாரம் மாறற்சுரம் விக்கல் சூலை சுவாதகாசம் பாண்டு வீக்கம் பயித்தியம் முதலியனதீரும். கைப்பு புளிப்பு நீக்கிப் பால் நெய்கொள்ளவும். மிளகு வறுத்துக்கூட்டவும்.

### தேற்றுங்காய்ச் சூரணம்

தேற்றுங்காய் அரைமுற்றற் பருவத்திற் பிடுங்கி ஒன்று நாலாய் வெட்டி உலர்த்தியிடித்தசூரணம் பலம்-ச திரிபலை திரிகடுகு இருசீரகம் ஓமம் மல்லி வாய்விளங்கம் சதகுப்பை வால்மிளகு கானமிளகு கஸ்தூரிமஞ்சள் செவியம் அரத்தை சிறுதேக்கு திப்பிலிமூலம் கண்டதிப்பிலி அத்தித்திப்பிலி அதிவிடயம் தக்கோலம் கற்கடக சிங்கி ஏலம் கராம்பு சாதிக்காய் சாதிப்பூ தாளிசபத்திரி சிறுநாகம்பூ செண்பகப்பூ வெட்டிவேர் இலாமிச்சம்வேர் சிறுவழுதலை கண்டங்கத்தரி பிரண்டைவேர் அமுக்கிரா முத்தக்காசு இவை சமன்கூட்டிச் செய்தசூரணம் பலம்-ச. கலந்து தேற்றுங்காயளவுகொண்டு இளவெந்நீர் வெள்ளாட்டுப்பால் பசுப்பால் வெண்ணெய் நெய் தேன் இவற்றில் உடலினியல்பறிந்து ஏற்ற அனுபானத்திற் கொடுக்கச் சயரோகம் பயித்தியரோகம் நீர்க்கட்டு வாதசன்னி முதலியன தீரும். பத்தியம்.

### கெந்தகச் சூரணம்

வெள்ளாட்டுப்பாலில் சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் கழஞ்சு-உ. பறங்கிப்பட்டை திரிபலை திரிகடுகு திப்பிலிமூலம் செவியம் அரத்தை சிறு

தேக்கு இருசீரகம் ஓமம் வாய்விளங்கம் ஏலம் கராம்பு சாதிக்காய் சாதிப்பூ தாளிசபத்திரி சிறுநாகம்பூ வகை கழஞ்சு-௪. மஞ்சணுணப்பட்டை செங்கத்தாரிப்பட்டை இயங்கம்பட்டை சங்கங்குப்பிப்பட்டை வேளைவேர் சிவ ஞர்வேம்புவேர் வெள்ளறுகு சித்திரமூலம் வெள்ளைச் சாரணைவேர் கையாந்தகரை வகை கழஞ்சு-க சூரணம்பண் ணவும். வெருகடிப்பிரமாணம் ஏற்ற அனுபானத்திற் கொள்ளப் பலநோய்களுந்தீரும். உப்புப்புளிநீக்கி மிளகு வறுத்துக்கூட்டவும்.

## தாமரைப்பூச்சூரணம்

இருசீரகம் மதுரம் சதகுப்பை சீந்திற்கிழங்கு தாமரைப்பூ சன்னலவங்கம் வகை பலம்-க. சீனப்பாகு நிலப்பனை கூகைநீறு இயங்கு மல்லி வகை பலம்-௪. நன்னரி நிலபாகல் ஆவரைப்பஞ்சாங்கம் கற் கண்டு சீனிவகைபலம்-௬. சூரணித்து, வெருகடி சீனி யில் கற்கண்டிற் கொள்ள உட்டணவாய்வு எல்லாந்தீரும் தாதுபெலக்கும் உடல்வலுக்கும் மேகச்சூடு மேகநீர் சொறிகரப்பன் கட்டு புண் சிரங்கு கடிவிஷம் உட்டண வாதம் பிடிப்பு உளைவுகுத்து தெண்டல் பித்தம் பித்த வாயு சூடு செமியாமை புளிப்பு எரிப்பு வயிறூதல் உடல் வரட்சி இருமல் கயம் மூளைச்சூடு பலவுந்தீரும்.

## வசுவாசிச்சூரணம்

வசுவாசி கழஞ்சு-உ௪. சாதிக்காய் கழஞ்சு-கஉ. கராம்பு கழஞ்சுசூ. திப்பிலி கழஞ்சு-௩. ஏலம் கழஞ்சு-௩ இலவங்கம் கழஞ்சு-௪. சிறுநாகம்பூ கழஞ்சு-௪. அபின் கழஞ்சு-உ. பச்சை உள்ளி சுக்கு வால்மிளகு செவ்வள்ளி

மதுரம் மனோசிலைகாந்தம் லிங்கம் கோட்டம் குருசாணி செண்பகப்பூ கோரோசனை குங்குமப்பூ மதனப்பூ மிளகு கருஞ்சீரகம் இந்துப்பு அமுக்கிரா கஞ்சா வகை கழஞ்சு-க. சூரணித்து எழுபுடமிடவும் பிரமாணம் பேன்பிடி. சுவாதகாசத்துக்கு-வெந்நீர் நாவரட்சிக்கு-நெய் குத்துக்கு-உள்ளி, சுக்கு படுவனுக்கு-உள்ளி அல்லது மிளகு சன்னிக்கு-அவுரியிலைச்சாறு அல்லது பெருங்காயம் குத்துச்சுவாதத்துக்கு சீனி, கல்லக்காரம் செமியாமைக்கு-வெந்நீர் அல்லது மிளகு உட்டணத்துக்கு-சீனி அண்டவாயுவுக்கு-ஆமணக்கெண்ணெய் ஒங்காளத்துக்கு-தேன் மந்தத்துக்கு-இஞ்சி பெருத்தஇருமலுக்கு சீனி, கல்லக்காரம்.

---

## கிருதவிதி

### பஞ்சகவ்வியக்கிருதம் 1

பசுப்பால் தயிர் நெய் கோசலம் கோமயம் வகை பலம்-கூ. திப்பிலி கடுகுரோகணி திரிபலை வாய்விளங்கம் வசம்பு மரமஞ்சள் மஞ்சிட்டி ஏலம் மதுரம் முந்திரிகைப் பழம் முத்தக்காசு வட்டத்திருப்பிவேர் கொடுவேலிவேர் வகை பலம்-ச. ஆடாதோடைச்சாறுவிட்டரைத்துப் பஞ்சகவ்வியத்துடன் கூட்டிக் கலந்து எரித்துப் பதத்தில் வடித்துக்கொள்ளவும்.

கும்பகலசத்தில் முப்புரிநூல்சுத்தி வஸ்திரஞ்சுத்திப் பூமுதலியவற்றால் அலங்காரஞ்செய்து தானியமண்டபத்தில்வைத்துச் சோடசோபசாரங்களாற் பூசித்துப் பெரியோர்களிடத்து ஆசீர்வாதம்பெற்று அன்னதானம் சுவர்ணதானம் செய்து வைத்தியபாகமீந்து பின் மருந்

துண்ணத் தொடங்கவேண்டும். உண்ணுங்கால் அருணோ தயத்துக்குமுன் எழுந்து சரீரசுத்திசெய்து திருவெண் ணீறுதரித்து விநாயகக்கடவுளை மெய்யன்போடு தொழுது பொய்சொல்லுதல் முதலிய குற்றங்களையொழித்துச் சுத் தமானமனத்தோடு சந்தோஷமாயிருந்து கழஞ்சுநெய் கொள்ளவும். மண்டலம்கொள்ளச் சகலநோய்களுந்தீரும். மலடுநீங்கிப் புத்திரசந்தானமுண்டாகும் ஞானமும் புத்தி யும் வளரும் முகத்திலே தேஜஸ்விளங்கும் ,பிரமகத்தி தோஷந்தீரும் எப்படிப்பட்டபசாசும் போய்விடும்.

பஞ்சகவ்வியக்கிருதம் 2

பஞ்சகௌவியம் தனித்தனி பலம்-ரு. திரிகடுகு, கடுக்காய், அதிவிடயம், நேர்வாளம், சிறுதேக்கு பெருங் குரும்பை, துவரம்பருப்பு, ஆயிற்பட்டை, மாகாளிக் கிழங்கு, கஞ்சாவிலை, வட்டத்திருப்பிவேர், சிவதைவேர், நன்னாரிவேர், வெள்ளைக்காக்குறட்டான்வேர், கொடுவேலி வேர், வகை பலம்-ந. அரைத்துப் பதத்தில் வடித்துத் தினம் ந விராகனிடை நெய்கொள்ளக் குமரகண்டன், உன்மாதம், விஷபாகம், பாண்டு, மகோதரம், வீக்கம், குன்மம், மூலம், கிரகணி முதலியனதீரும். கிரகதோ ஷங்களும் நீங்கும்

பஞ்சகவ்வியக்கிருதம் 3

பஞ்சகவ்வியம் வகை பலம்-உக. திரிபலை, நேர்வாளம், சிவதைவேர், வெள்ளைக்காக்குறட்டான்வேர் வேரிரண்டை யும் பாலிலவித்துச் சுத்திசெய்யவும். இவை வகைபலம்-ந அரைத்துக்கரைத்துப் பதத்தில் வடித்துத் தினம் மூன்று காசிடையுண்டு மேலும்பூச விஷபாகம் வீக்கம், மகோ தரந்தீரும்.

### வல்லாரைக்கிருதம்

வல்லாரற்சாறு பாலைச்சாறு சிதேவியார்செங்கழு நீர்ச்சாறு வகை படி-உ. செவ்விளநீர் பசுப்பால் நெய் வகை படி-க. மதுரம், சந்தனம் கோரோசனை, செங்கழு நீர்க்கிழங்கு அவுரிவேர் பவளக்குன்றிமணிவேர் வகை பலம்-க. அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்துத் தினம் மூன்றுகழஞ்சு நெய்கொள்ளச் சர்வாங்கமுமெரி தல், உடநடு நெஞ்சு காய்ந்துபோதல், மருத்தீடு பீனிச மிவைதீரும்.

### குக்கிற் கிருதம்

வேப்பம்பட்டை சிந்திற்றண்டு ஆடாதோடையிலை கண்டங்கத்தரிவேர் வகை-பலம்-க0. இடித்து எட்டொன் றாக வற்றவைத்துப் பிழிந்து அதனுடன் பசுநெய் படி-க. குக்கில் பலம்-ரு. திரிகடுகு திப்பிலிமூலம் அத்தித்திப்பிலி ஓமம் அதிவிடயம் கடுகுரோகணி வாய்விளங்கம் மல்லி சதகுப்பை செவியம் செங்கழுநீர்க்கோட்டம் வசம்பு வாலு ளுவை மஞ்சிட்டி வெட்பாலை சேங்கொட்டை செம்பு ளிச்சை பங்கம்பாளை கொடுவேலி சீனக்காரம் எவச்சாரம் வகைக்கு மூன்றுவிராகனிடைகூட்டிப் பதத்தில் வடித்துத் தினம் காசிடை நெய்கொள்ள மூலவியாதி குட்டம் சிலந்தி உளைமாந்தை நரம்புச்சிலந்தி புண் முதலானவையும் கண் வியாதியுந் தீரும், உப்பு புளிப்பு கைப்புத் தவிரவும். பால் நெய் ஆகும்.

### மகா கண்டங்கத்தரிக்கிருதம்

கண்டங்கத்தரிவேர் பலம்-க00. ஆடாதோடைவேர் பலம் ரு0. கீழ்காய்நெல்லிவேர் பலம்-உரு. தூதுவளைவேர் பலம்-கஉஇ. நெருஞ்சிவேர் பலம்-கூவ. சிறுதேக்கு பலம்

௩. கொடுவேலி வட்டத்திருப்பி நாயுருவி வேளை தேவதாரு திப்பிலிமூலம் வகை பலம்-டு. செவியம் பலம்-உடு. இவையெல்லாங்கூட்டியிடித்துக் கண்டதுக்கு நாலுமடங்கு தண்ணீர்விட்டு நாலொன்ருய் வற்றவைத்துப் பிழிந்து, அதில் நாலிலொன்று பசுநெய்கூட்டி சங்கிலைச்சாறு, நெரிஞ்சியிலைச்சாறு, பெரும்பாலைச்சாறு, கையாந்தகரைச் சாறு இவைசமன் கூட்டி நெய்க்கு இருமடங்குவிட்டு; கண்டங்கத்தரிவிரை, தூதுவளைவிரை, பொரும்பிவிரை, சிற்றவரைவிரை, கற்கடகசிங்கி, வசவாதிகணம், கோட்டம் இவை நாழி நெய்க்கு முக்காற்கழஞ்சுவீதம் அரைத்துக்கரைத்து வடித்துத்தினம் காற்கழஞ்சு கொள்ளச் சயம்முதல் சுவாத காசமும் சகல வியாதியும் தீரும்.

## நாரிகேளகிருதம்

இளநீர்,பெரும்பூசினிக்காய்ச்சாறு,நெல்லிக்காய்ச்சாறு, ஆடாதோடைச்சாறு,பொன்னுங்காணிச்சாறு,சீந்திற்சாறு, பூமிசர்க்கரைச்சாறு,தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு வகை படி-க. கலந்து, அதில், கற்கண்டு, சர்க்கரை, வெல்லம்-வகை பல-௩- கூட்டிக் கரைத்துப் பாகுகாய்ச்சி, நெய்-படி-உ.விட்டுக் குழம்பு செய்து, அதிலே சிறுகீரைவேர்ப்பொடி தாமரைத்தாது, கோதும்பைமா-வகை-பல-உ, ஏலம், இலவங்கம், மதுரம், கோட்டம், சராம்பு, சிறுநாகம்பூ,தாளிசபத்திரி, நற்சந்தனம், சீரகம், திரிகடுகு-வகை-பல-க. பொடித்துத்தூவிக்கிளறிக் குழம்புப்பருவத்தில் எடுக்கவும். தினம் வெருகடிகொள்ள மூத்திரக்கிரிச்சரம், வெகுமூத்திரம் ஒழுக்குமூத்திரம், மேகம் தீரும்

## மகாகதலிகந்த கிருதம்.

வாழைக்கிழங்கு, தாமரைக்கிழங்கு, செங்கழுநீர்க் கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, கோரைக்கிழங்கு, அமுக்கிராக்கிழங்கு, வாழைப்பூ, இலுப்பைப்பூ, அரசம்பட்டை, ஆலம்பட்டை, அத்திப்பட்டை, ஒதியம்பட்டை, நாவற்பட்டை, இலந்தைப்பட்டை, கருவேலம்பட்டை, வெள்வேலம்பட்டை, மருதம்பட்டை, வட்டத்திருப்பி, சிறுகாஞ்சோன்றி, நெருஞ்சி, சிற்றமட்டி, பேரமட்டி, கண்டங்கத்தரி, கருவேலம்பிசின், வெள்வேலம்பிசின், இலவம்பிசின், வில்வம்பிசின், விளாம்பிசின், சீந்திற்றண்டு, ஓரிதழ்த்தாமரை, பேய்ப்புடோல் கருங்காலிவயிரம், இவையெல்லாம் வகை-பலம்-ந இடித்து நாலுமடங்கு தண்ணீர்விட்டு எட்டொன்றாய் வற்றவைத்துப் பிழிந்து அத்துடன் பெரும்பூசினிக்காய்ச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, கருப்பஞ்சாறு, இளநீர், பால், நெய் வகை-படி-உ கலந்து பஞ்சகவ்வியம், திரிகடுகு, திரிபலை, சிறுநாகம்பூ, சீரகம், முந்திரிகை, பேரீஞ்சு, சமுத்திராப்பச்சை, மஞ்சள், மரமஞ்சள், சந்தனம், மல்லி, வாய்விளங்கம், சதகுப்பை, வசம்பு, மஞ்சிட்டி, வெட்பாலை, இந்துப்பு, காவிக்கல், அஞ்சனக்கல், கல்நார், பொன்மெழுகு, கற்கடகசிங்கி, பெருமரப்பட்டை, தேவதாரு, கோட்டம், வெட்டிவேர், இலாமிச்சம்வேர் வகைக்கு விராகன்-ச கூட்டியரைத்துக் கரைத்து வடித்துத் தினம் கழஞ்சுநெய் கொள்ள மேகம்-உக. பித்தசம்பந்தமான ரோகங்கள், எலும்புருக்கி, பெரும்பாடு முதலியன தீரும். கைப்பு புளிப்பு நீக்கி, உப்பு மிளகு வறுத்துக் கூட்டவும். பழஅரிசி துவரம்பருப்பு பயறு கூட்டலாம், வெந்நீர் பாவிப்பு.

## பேய்த்தும்மட்டிக் கிருதம்

பேய்த்தும்மட்டிவேர் பலம்-கக. கடுக்காய்வேர் தான்றிவேர் நெல்லிவேர் நிலக்குமிழ்வேர் நிலவாகைவேர் சிற்றமட்டி பேரமட்டி சிறுகாஞ்சோன்றி வில்வம் மாதளை நன்னாரி சடாமாஞ்சில் வெட்டிவேர் இலாமிச்சு தாமரைவளையம் செங்கழுநீர்க்கிழங்கு நெய்தற்கிழங்கு அல்லிக்கிழங்கு வகை-பலம்-ரு பொடிசெய்து அளந்துகண்டதுக்கு மூன்றுபங்கு தண்ணீர்விட்டு நாலொன்ருக வற்றவைத்துப் பிழிந்து அதிலே ஏலம் இலவங்கம் மதுரம் கோட்டம் கராம்பு சாதிக்காய் சாதிபத்திரி நற்சீரகம் சதகுப்பை மஞ்சள் மரமஞ்சள் சந்தனம் தேவதாரு முத்தக்காசு நெருஞ்சிக்காய் கல்நார் சாத்திரபேதி வகை-பலம்-இ. மிளகு பலம் -கூ. பனைவெல்லம் பலம்-கூ. கூட்டி செவ்விளநீர் பசுப்பால் நெய் வகை-படி-ச. கூடவிட்டு மெழுகுபதத்தில் வடித்துத் தானியபுடத்தில் மூன்றுநாள் வைத்தெடுத்துத் தினம் ஐந்துவிராகன் நெய்யும் அதன்கடுகு வெருகடியும் தின்னவும். இந்தப்படி மண்டலங்கொள்ள உன்மத்தம் நடுக்கல் பேச்சுத்தடுமாற்றம் சுவாதகாசம் சயம் மூத்திரக்கிரிச்சிரம் கல்லடைப்பு மேகம் உ0. பெரும்பாடு மாறற்சுரம் முதலியன தீரும். பெண்கள் மூன்று முழுக்கு உட்கொள்ளப் புத்திரசந்தானம் உண்டாகும். உப்பு புளி கசப்பு நீக்கிப் பால் வறுத்தஉப்பு வறுத்தமிளகு கூட்டவும்.

## அமுக்கிராநெய்

அமுக்கிராக்கிழங்கு சிற்றமல்லிவேர் பேரமல்லிவேர் பாலைவேர் பொன்னுங்காணி நெருஞ்சிவேர் வகை பலம்-க. பொடிசெய்து பதக்குநீர் எட்டொன்ருயிறுத்து அதில் கருப்பஞ்சாறு பசுநெய் நாழி ஒவ்வொன்றுகூட்டி ஏலம்

சுக்கு அதிவிடயம் கற்கடகசிங்கி முந்திரிகை சிறுதேக்கு தேவதாரு திப்பிலி மதூரம் செங்கழுநீர்க்கோட்டம் மஞ்சிட்டி மேதை மகாமேதை சந்தனம் தாமரைவளையம் தாமரைத்தாது செங்கழுநீர்கிழங்கு சிறுகாஞ்சோன்றிவேர் ஆடாதோடைவேர் பங்கம்பாளைவேர் சாரணைவேர் இலாமிச்சம்வேர் இவை வகை கழஞ்சு-க. அரைத்துக் கரைத்துப் பதத்தில்வடித்து ஒருகழஞ்சுவீதம் எட்டு நாட்கொள்ள இரத்தபித்தம் காசசுவாதம் கிரந்தி விஷபாகம் சுரதாகம் பீனிசம் சரீரவரட்சி பிரமேகந்தீரும்.

### திப்பிலிநெய்

பசுப்பால் நெய் வகை நாழி-க. திரிபலை திரிகடுகு தேவதாரம் செவியம் மரமஞ்சள் சிறுதேக்கு சிறுநாகம்பூ ஓமம் நற்சீரகம் அத்தித்திப்பிலி இந்துப்பு வகைகழஞ்சு-க. பொடித்துக் கூட்டிப் பதத்தில்வடித்து உட்கொள்ள வெதுப்பு காமாலை விஷபாகந்தீரும்.

### மஞ்சிட்டிநெய்

தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு பசுப்பால் நெய் வகைக்கு நாழி-உ. மஞ்சிட்டி கோட்டம் தகரம் திரிபலை மஞ்சள் மரமஞ்சள் வசம்பு மதுரம் கடுகுரோகணி பெருங்காயம் ஓமம் அமுக்கிராவேர் நற்பாலைவேர் இலுப்பைப்பூ ஓதியம்பட்டை வகை கழஞ்சு-க. பொடித்துக்கூட்டி வடித்து உட்கொள்ள யோனிரோகம் நாதவரட்சி மாந்தம் தீரும்; மாதவிடை வரும்; புத்திரசந்தானமுண்டாகும்; சகலதோஷமுந் தீரும்.

### புனமுருங்கைநெய்

புனமுருங்கைவேர் பலம்-ரு0. பதக்குநீர் நாலொன்றாய் வற்றவைத்துப்பிழிந்து பசுநெய் ஒருபடிகூட்டி அதில்

திரிகடுகு ஓமம் வசம்பு பெருங்காயம் இந்துப்பு வெள்ளைச் சாரணைவேர் வெள்ளைக்காக்குறட்டான்வேர் நாகதந்திவேர் மூக்கிரட்டைவேர் விழிவேர் கொவேவிவேர் நீர்ச்சேம்புக் கிழங்கு குடசப்பாலைப்பட்டை சதுரக்கள்ளிப்பால் வகை கழஞ்சு முக்கால் அரைத்துக்கரைத்து வெள்ளாட்டுப்பால் படியொன்றுகூட்டி வடித்து உட்கொள்ளப் பேதியாகும் மகோதரம் பெருவயிறு நீராமை நீர்க்கோவை பிலிகை வெப்புப்பாவை கவுசி சகலமுந்தீரும். உப்புப்புளி தவிரவும்.

## சங்கங்குப்பிநெய்

சங்கங்குப்பி வேலிப்பருத்தி கையாந்தகரை குப்பைமேனி கீழ்காய்நெல்லி சீதுளாய் இவை காடிவிட்டுத் துவைத்துப் பிழிந்தசாறு வகைக்கு நாழி-க. பசுநெய் நாழி-க. கார்புகாஅரிசி கஸ்தூரிமஞ்சள் வகை-உழக்கு. வெளுத்தற்பிசின் விராகனிடை-உ. கொடுவேலிவேர் வட்டத்திருப்பிவேர் பாதாளமூலி முன்னை சிற்றவரை சீந்திற்கிழங்கு வகைபிடி-க. அரைத்துக்கரைத்துப் பதத்தில்வடித்து உட்கொள்ள மருத்தீடு ஈழை இருமல் கிரந்தி வாதகரப்பன் எழுஞாயிறு படுஞாயிறு பித்தகுன்மம் முதலியவியாதிகள் தீரும்.

## பெரும்பூசினிக்காய்க்கடுகு

பெரும்பூசினிக்காய்-மேலோடு குடல் விரை போக்கி அரிந்துலர்த்தி இடித்த பொடி படி-க. நெய் படி-உ. கூட்டிக் கிளறிக் காய்ச்சி மெழுகுபதத்தில் திரிகடுகு திரிபலை மதுரம் சீரகம் இவை வகை பலம்-வ. பொடித்துத் தூவி வைத்துக்கொண்டு வெருகடியுட்கொள்ள எரிகுன்மம்

எலும்புருக்கி உள்ளுருக்கி மூத்திரக்கிரிச்சிரம் விஷமேகம் முதலியன தீரும்.

---

## இரசாயனவிதி

### வில்வாதிரசாயனம்-1

வில்வம்வேர் மேற்றோல் போக்கினது-பலம்-௩0 பொடியாக்கித் தூணிதண்ணீர்விட்டு எட்டொன்றாய் வற்றவைத்திறுத்து அதிலே சர்க்கரை-பலம்-௩0 கரைத்துப்பாகுகாய்ச்சி திரிகடுகு, திப்பிலிமூலம், செவியம், சிறுநாகம்பூ, தாளிசபத்திரி-வகை-கழ-கஉ. சித்திரமூலம்-பலம்-க. பொடிசெய்துபாகிற்றூவிக்கிளறி நடுச்சட்டிதெரியப் பதத்திலிறக்கி அதிலே தேன்கலந்து வைத்துக்கொண்டு தான்றிக்காயளவு இருவேளையும் மண்டலங்கொள்ள அக்கினிமந்தம், பித்தவாய்வு வரட்சி குன்மம் பாண்டு முதலியனதீரும். கைப்பு புளிப்பு நீக்கி உப்புவறுத்துக்கூட்டவும்.

### வில்வாதிரசாயனம்-2

வில்வம்வேர் மேற்றோல்போக்கினது - பலம் - ௩0. பொடிசெய்து தூணிநீர்விட்டு எட்டொன்றாக்கிப் பிழிந்து அதில் நல்லவெல்லம்-பலம்-உ0, பாகுகாய்ச்சி, சுக்கு-பலம்-௩. திப்பிலி, பலம்-உ. திப்பிலிமூலம் பல-உ. சீரகம் பல-உ. செவியம் பல-க. சிறுநாகம்பூ பல-க. சித்திரமூலம், இந்துப்பு, ஏலம் கராம்பு இலவங்கப்பட்டை இலவங்கபத்திரி தாளிசபத்திரி சாதிக்காய் வகை-பல-இ. பொடிசெய்து பாகிலே தூவிக்கிளறிப் பதத்திலிறக்கிச் செல்லுமளவுதேன்விட்டுப் பிசைந்துவைத்துக்கொண்டு வெருகடியளவு 'இருவேளையும் கொள்ள வாயால் இரத்தம்விழுதல், புகைச்சல் கோழை, சிலேற்பனரோகங்கள் தீரும்.

### அர்க்காதிலேகியம்

எருக்கு சதுரக்கள்ளி பிரண்டை முருங்கைப்பட்டை வெண் ணொச்சியிலை வெள்ளைச்சாரணை குப்பைமேனி பொடுதலை, கையாந்தகரை நீர்மேல்நெருப்பு இவை தனித்தனிஇடித்துப் பிழிந்தசாறு, மோர் காடி வகை-படி-க. மலைக்கடுக்காய்சுக்கு கல்லுப்பு இவற்றின் தூள் வகை-படி-இ. கொள்ளுப்பருப்பு பல-உ. அரைத்துக் கரைத்துக் காய்ச்சிக் குழம்புப்பருவத் தில் பசுநெய் நல்லெண்ணெய் தேன் வகை-படி-க. கூட்டிக் கிளறி கருவேப்பிலை உப்பு சித்திரமூலம் திரிகடுகு கருஞ்சீர கம் ஓமம் வகை பல-உ. பெருங்காயம் பல-ந- பொடிசெய்து தூவிக்காய்ச்சி இளகினமெழுகுபதத்திலிறக்கிப் பழகின கலயத்திலேவைத்துத் தினம்கொட்டைப்பாக்களவுதின்ன மூலவியாதி பாண்டு விஷபாகம் வீக்கம் வாய்வு பெருவயிறு குன்மந்தீரும்- உப்புப்புளிதவிரவும்-

### வலிகுன்மத்துக்கு

தேங்காய்நெய் படி-க. பாசிப்பருப்பு வெள்ளுள்ளிப்பருப்பு வகை படி-க. இவைமூன்றுங்கூட்டி வேகவைத்து இந்துப்பு பெருங்காயம் வகை பல-இ. கூட்டிப் பதத்தில்காய்ச்சித் தினம் வெருகடிகொள்ள வலிகுன்மந்தீரும். கைப்புப்புளிப் புத்தவிரவும்.

---

## கற்பவிதி

### வச்சிரவல்லிக்கற்பம்

பிரண்டைசமூலம் உலர்த்தியிடித்துத் தூள்செய்து சமன்சர்க்கரை கலந்து வெருகடி நெய்யிற் கொள்ள மூலம் தீரும்.

### கொட்டைக்கரந்தைக் கற்பம்.

கொட்டைக்கரந்தைசமூலம் பிரமிசமூலம் சுக்கு திப்பிலி வசம்பு இவைசமன் பொடிசெய்து வெருகடி தேனிற் கொள்ள சரீரசுகமுண்டாகும்.

### கையாந்தகரைக் கற்பம்.

கையாந்தகரைப்பொடி திரிபலை சுத்திசெய்தகெந்தகம் சமன்கலந்து கையாந்தகரைச்சாறு விட்டரைத்துத் தேற்றுவிரையளவு உருட்டித் தினம் ஒரு உண்டையாக மூன்று வருஷம் உட்கொள்ள நரை திரை மாறும். பன்னிரண்டு வருஷம்கொள்ள வச்சிரசரீரமாகும் உப்புப்புளி ஆகாது. பசுநெய் மிளகு நெல்லிப்பருப்புக்கூட்டலாம்.

### சரீரசோஷணம்

பழச்சாற்றிலே சற்றுத்தேன்விட்டு ஒருமாதமுண்ணத் தூலித்தசரீரம் இளைக்கும் பெலமும் அழகும் இந்திரியமும் குறையாது

### சரீரபோஷணம்

அமுக்கிராவேர் அரைத்துப் பசுப்பாலிலாவது நெய்யிலாவது வெண்ணெயிலாவதுஉண்ணச் சரீரம் தூலிக்கும் அழகும் வீரியமும் குறையாது.

### மதனகாமேஸ்வரம்

பூனைக்காலிவிரை பலம்-ச. சமுத்திராசோகிவிரை பலம்-க. நீர்முள்ளிவிரை பலம்-க. ஏலம் இலவங்கம் மதுரம் கராம்பு சாதிக்காய் சாதிப்பூ குருசாணியோமம் வகைக்கு விராகனிடை-கஉ. இவையெல்லாம் உலர்த்தியிடித் வஸ்திரகாயம்பண்ணிப்பழுத்ததேங்காய் கண்திறந்து இளநீரை ஊற்றிவிட்டு அதுநிறைய அந்தச் சூரணத்தை

யிட்டு வாய்க்குத் தேங்காய்க்குடுமிகொண்டடைத்துப் பசுவின்பால் படி-உ. தண்ணீர்- படி-உ. கலந்து அதில் தேங்காயைத் தோலாயந்திரமாக அவித்துப் பால்சுவறினபின் எடுத்துச் சூரணித்துக் கண்டளவு சர்க்கரைகலந்தரைத்துத் தான்றிக்காயளவு உண்டைசெய்து உலர்த்திவைத்துக்கொண்டு சாயங்காலம் ஒரு தேங்காய்க்கீறுதின்று ஓர் உண்டை காய்ச்சினபாலிலே கரைத்துக்குடித்துச் சுகாசனமாக மூன்றுநாழிகையிருந்து கைப்புப் புளிப்புக்கூட்டாது இராப்போசனம் முக்கால்வயிறு உண்ணவும். இப்படி மண்டலம்கொள்ள வீரியவிர்த்தியும் தம்பனமு முண்டாகும்.

## அனுவிதிவாதபற்பம்

கொடுவேலி பிரண்டை வெள்ளைச்சாரணை இவற்றின் வேர், மருட்கிழங்கு காட்டுக்கருணைக்கிழங்கு கறிக்கருணைக்கிழங்கு வெருகங்கிழங்கு பஞ்சலவணம் திரிகடுகு எவச்சாரம் சத்திசாரம் சீனக்காரம் வெண்காரம் உள்ளி கடுகு வசம்பு இருசீரகம் ஓமம் இவைசமன் கூட்டிக் கள்ளிப்பால் வார்த்தரைத்து ஒருகலசத்திலிட்டுச் சட்டிகொண்டுமூடிச் சீலைமண்செய்து அடுப்பில்வைத்தெரித்துச் சாம்பலானவாறே யெடுத்து ஒருவிராகனிடை பற்பம் வெந்நீரிற்கொடுக்க வாதம் எண்பது சூலை நீராமை மகோதரம் குன்மம் பிலிகை முதலிய பலவியாதிகள் தீரும்.

## கடுக்காய்ப்பாவனை 1

மலைக்கடுக்காய்-க00 காடிவிட்டு மூன்றுநாள் வெயிலில்வைத்து நாலாநாள் உதயத்தில் அந்தக்காயை

இறுத்து வேறுகாடிவிட்டு மூன்றுநாள்வைத்து இப்படி மூன்றுமுறைசெய் தெடுத்துப் பத்தாநாள்காடியை இறுத்துவிட்டுக் கடுக்காயை ஒன்றிரண்டாய்ப்பிளந்து விரை நீக்கி உலர்த்திக் கண்டஅளவுக்கு நாலிலொன்று கல்லுப் புக்கூட்டி புளித்த பசுமோருற்றி மோர்சுவறக்காய்ச்சியிறக்கி அதில் திப்பிலி திப்பிலிமூலம் செவியம் சித்திர மூலம் மிளகு வகை பலம்-ச. இந்துப்பு ஓமம் சுக்கு வகை பலம்-அ. பொடித்துத்தூவி எலுமிச்சம் பழச்சாற்றிலூற விட்டு உலர்த்திவைத்துக்கொண்டு உதயத்தில் ஒருகிறு உச்சியில் ஒருகிறு சாயங்காலம் ஒருகிறு இப்படி உட்கொண்டுவரப் பஞ்சகுன்மம் அக்கினிமந்தம் அன்னத்துவேஷம் உவாந்தி அமிலபித்தம் சூலே சன்னி பிலிகை பாண்டு சுவாதகாசம் பீனிசம் தீரும்.

## கடுக்காய்ப்பாவனை 2.

மலேக்கடுக்காய் க00. காடி எருமைமோர் பசுவின் மோர் வெள்ளாட்டுமோர் எருமை பசு வெள்ளாடு இவற்றின் மூத்திரம் பால் என்னும் பத்துவகைகளிலும் ஊற வைத்துப் பிளந்து விரைபோக்கி இயங்கு சங்கங்குப்பி வெண்ணொச்சி நாயுருவி கண்டங்கத்தரி தூதுவளே பொடுதலே கரந்தை கையாந்தகரை குப்பைமேனி இப்பத்துவகைச்சாற்றிலும் பத்துநாளூறவைத்து எடுத்துத் திரிகடுகு திப்பிலிமூலம் அரத்தை கற்கடகசிங்கி சிறுதேக்கு பஞ்சலவணம் வகை பலம்-க. பொடித்துத்தூவி நாரத்தம் பழச்சாறு எலுமிச்சம்பழச்சாறு இஞ்சிச்சாறு இவற்றில் ஊறவிட்டு உலர்த்தித் தேன்விட்டுப் பிசறி வைத்துக் கொண்டு காலே உச்சி மாலேகளில் ஒவ்வோர் கிறுதின்னப் பித்தகாசம் வாதகாசம் இரத்தகாசம் சுவாதகாசம் வாய்வு பீனிசவகை தீரும். கைப்புப் புளிப்புத் தவிரவும்

## ஆக்கிராணபேதி

இரசம்-க. கெந்தகம்-உ. நேர்வாளம்-ங. பெருவாகைப் பருப்பு-ச. வெண்காரம்-ரு. ஆமணக்கம்முத்து-சூ. காட்டா மணக்கம்பருப்பு-எ. கொன்றைப்பழவிரை-அ. கடுக்காய்த் தோல்-கூ. சிவதைவேர்-க0. பலாசம்விரை-கக. இவை பொடிசெய்து முற்றினதேங்காயைக் கண்திறந்து இளநீரை ஊற்றிவிட்டுத் தேங்காய்க்குள் பொடியைநிரப்பி வாயைத் தேங்காய்க்குடுமியால் அடைத்துப் பாதாள யந்திரமாக வைத்து மேலேஎரியிடத் தைலமிறங்கும். அத்தைலத்தை எடுத்து நெல்லிடை நாக்கில் நாசியில் நாபியில் தடவ மட்டாய்ப் பேதியாகும்

## பேதிசிமாதிரசம்

இரசம்-உ. கெந்தகம்-ச. நேர்வாளம்-ரு. காட்டா மணக்குப்பருப்பு-உ. சிற்றுமணக்குப்பருப்பு-ங. இவற்றை அரைத்து ஒருகலத்திலேதப்பி வெய்யிலில் சாய்த்து வைக்கத் தைலம் விழும் அதை எலுமிச்சம் பழச்சாற்றில் தடவி மணக்கப் பேதியாகும். மாற்று மோரும் சோறும்.

## இரசபேதிமாத்திரை

இரசம்-ரு. கெந்தகம்-ச. வெண்காரம்-ச. நேர்வாளம்-அ. புளியம்பழம்பிசைந்து இறுத்தநீரிலரைத்துக் குன்றியளவுருட்டிப் புளியம்பழத்திலாவது வெல்லம் வெண்ணெய் இவற்றிலாவது உரைத்திடப் பேதியாகும்

## கிரகணிமாத்திரை

இரசம் கெந்தகம் சாதிக்காய் திரிகடுகு சமன் மாவிலைச்சாறுவிட்டு நாலுசாமமரைத்துக் குன்றியளவுருட்டி வைக்கவும். பகலுக்குத் தேன்காய்ச்சி அதிலிடவும் இர

வுக்கு மரவிலையில் இரண்டுபடிநீர்விட்டு எட்டொன்ருய்க் காய்ச்சியிறுத்து அதிலிடவும். கிரகணிதீரும். பத்தியம் தயிரும் சோறும்.

## கபாடமாத்திரை

வெண்காரம்-க. அபின்-ச. எஃகுபற்பம்-அ. ஊமத்தையிலைச்சாற்றில் ஒருசாமமும் கஞ்சாவிலைச்சாற்றில் ஒருசாமமுமரைத்துக் குன்றியளவுருட்டவும். நாவற்பட்டையை துவைத்துப் புட்டவியலாயவித்துப் பிழிந்தசாற்றிலுரைத்திடக் கிரகணிதீரும்.

## அடைகுளிகை

சாதிக்காய்' சுக்கு திப்பிலி இந்துப்பு சாதிலிங்கம் நாவி அபின் ஊமத்தைவிரை சமன்கூட்டிக் கஞ்சாவிலைச் சாற்றில் நாலுசாமமரைத்து நாவற்பட்டைக் கஷாயத்திலிடக் கிரகணிதீரும்.

## பலகறைமாத்திரை

பலகறைநீறு சங்கபற்பம் முத்துப்பற்பம் அப்பிரகபற்பம் காந்தபற்பம் இரசம் கெந்தகம் நாவி வெண்காரம் அதிவிடயம் அபின் ஊமத்தைவிரை சமன்கூட்டி எலுமிச்சம்பழச்சாறு கஞ்சாவிலைச்சாறு இஞ்சிச்சாறு இவற்ருல் வகைக்கு ஒருநாளரைத்து உழுந்தளவுருட்டித் தேன் காய்ச்சியாவது நெய்யும் மிளகும் கலந்தாவது ஒருகுளிகையுரைத்திடக் கிரகணி அதிசாரம் தீரும்.

## வன்னிகற்பஉண்டை

திரிகடுகு ஏலம் கராம்பு இலவங்கபத்திரி குடசப்பாலைப்பட்டை சாதிலிங்கம் இவை சமன் பொடிசெய்து

அதற்கு இரட்டி சுத்திசெய்த கஞ்சாப்பொடிகலந்து எல்லாங்கண்ட அளவுக்கு இரட்டி சர்க்கரைப்பாகுகாய்ச்சி அதிலே மேற்கூறிய பொடியையிட்டுப்பிசைந்து தான்றிக்காயளவுண்டைசெய்து காலைமாலை இருவேளையும் அசனத்தின்பின் உண்ணக் கிரகணி அதிசாரம் தீரும்.

## வெல்லஉண்டை

சுக்கு திப்பிலி மாதளம்பழஓடு கடுக்காய் சமன் பொடிசெய்து பொடிக்குச்சமன் வெல்லங்கூட்டி யரைத்துத் தான்றிக்காயளவுண்டைசெய்து இருவேளையுமுண்ண நன்று

## அடைகுளிகை

சுக்கு ஓமம் அதிவிடயம் முத்தக்காசு பெருமரப்பட்டை குடசப்பாலைப்பட்டை சமன் தண்ணீர்வார்த்தரைத்து இரண்டுபாக்களவு தயிரிற்கொடுக்கப் பஞ்ச அதிசாரமும் கிரகணியுந்தீரும்.

## காந்தபூபதிச்சூரணம்

காந்தம் அபின் கஞ்சா அதிவிடயம் இலவம்பிஞ்சு இலவம்பிசின் திரிகடுகு தகரம் கோட்டம் மாம்பித்து இருசீரகம் ஓமம் பெருங்காயம் கடல்நுரை உள்ளி கருவேப்பந்தண்டு சுண்டைக்காய்வற்றல் சிறுமூலம் லகரி-டு. அரிசி-கூ. இவை சமன் சூரணித்து நவபுடமாயரைத்து வெருகடி மண்டலம் கொள்ள அதிசாரம் கிரகணி பெரும்பாடு வெள்ளை வெட்டை இந்திரியநட்டம் தீரும்.

## சாதிலிங்கப்புகை

சாதிலிங்கம் பொன்னரிதாரம் கெந்தகம் மிருதாரு சிங்கி வகை கழஞ்சு-க. சித்திரமூலம் ஓமம் வகை கழஞ்சு

உ. எலுமிச்சம்பழச்சாற்ருல் ஒருசாமமரைத்து சாண் அகலம் சாண் நீளமுள்ள மெல்லிய வெள்ளைச்சீலையைக் கள்ளிப்பாலிற் ருேய்த்து ஒருவெள்ளைச்சீலையின்மேல் விரித்து அரைத்தமருந்திற் பாதியை அதிற்பூசி மேலும் கள்ளிப்பாலூட்டி அதன்மேல் மற்றப்பாதி மருந்தைப் பூசிக் கள்ளிப்பாலிற்ருேய்த்த மற்ருெருசீலையால்மூடித் திரியாகஉருட்டி உலர்த்திவைத்துக்கொள்ளவும். திரியிற் கொஞ்சம் நறுக்கி மூன்றுநாள் இருவேளையும் புகைகுடித் துக் கடும்பத்தியமாயிருக்கக் கிரந்தி சகலமும் புண்வகை யும் தீரும். வெந்நீரும் சோறுமன்றி மற்ருென்றுமா காது. நாலுநாட்கழித்து விளக்கெண்ணெய்தேய்த்து முழு கவும். கடுகு பூசினிக்காய் ஆறுமாதங்களுக்கு விலக்கவும்.

இரசம் முறிய

எலுமிச்சம்பழவிரை-காற்படி சாந்துபோல அரை த்து எருமைத்தயிரிற்குழப்பி மூன்றுநாளைக்குக்கொடுக்க இரசவேகந்தணியும் எரிவுமுதலியனவும் தீரும்.

இம்மருந்தில் அடங்காது இரசம் மட்டுக்குமீறி வேகங்கொண்டால் உருத்திராட்சம் கலங்கொம்பு சிறு கீரை சந்தனம் பொன்னுங்காணிவேர் இவைசமன்கூட்டி முலைப்பாலிலாயினும் பசுப்பாலிலாயினும் அரைத்து எலு மிச்சம்பழமளவு பாலிற்கலந்துகொடுக்கவும் மூன்றுநாளைக் குப் பேயன்வாழைப்பழத்தில், சர்க்கரை தேன் திப்பிலிப் பொடிசேர்த்துப் பிசைந்து கொடுக்கவும்.

நற்சீரகம் ஏலம் நல்லவெல்லம் ஆவாரம்பூ பிஞ்சு முகை உள்ளிதழ் இவை சமன் கூட்டியரைத்து எலுமிச் சம்பழமளவு அரைப்படி பசுப்பாலிற்கலக்கிக் கொடுக்க வும். இப்படி மூன்றுநாட்குடிக்க இரசவெக்கைதீரும்.

இலவங்கப்பட்டை மதுரம் செங்கழுநீர்க்கோட்டம் செண்பகப்பூ சாதிக்காய் மல்லி நெல்லிப்பருப்பு திப்பிலி கருஞ்சீரகம் சாத்திரவேதி கல்நார் நவச்சாரம் இவை சமன் சூரணித்து திரிகடிவீதம் பத்துநாளைக்குக் கொள்ளவும்.

பொன்னாங்காணிவேர் ஒருபிடி நற்சீரகம் ஏலம் வகை ஒருவிராகனிடை அரைத்து நல்லவெல்லம் பலம் ஒன்று கூட்டி அரைப்படி பசுவின்பாலிற்கலந்து கொடுக்கவும்.

இரசம் முறிந்தது மேற்கூறிய மருந்துகளுக்கு வசப்படாமல் உவாந்திமேலிட்டால் வில்வவேரின் வயிரம் குளவிக்கூட்டுமண் பாசிப்பயறு மூன்றும் சமன்கூட்டி நாலு நாழி தண்ணீர்விட்டு நாலொன்றாய்க்காய்ச்சி இறுத்துக் கொடுக்க உவாந்திதீரும்

நெல்லுப்பொரிபொடிசெய்து தேன்விட்டுக்குழைத்து உட்கொள்ளவும்.

---

## கண்மருந்துகள்.

### நேத்திரசந்திரோதயம்.

கடுக்காய் பலம்-ச. மிளகு திப்பிலி வசம்பு மரமஞ்சள் கோட்டம் சங்குப்பொடி மனோசிலை சமன் பொடிசெய்து பலம்-ச. இரண்டுங்கூட்டி வெள்ளாட்டுப்பால் விட்டரைத்துக் கயிறுசெய்து உலர்த்தி முலைப்பாலிலுரைத்துக் கண்ணிலிடக் காசம் படலம் திமிரம் தினவு துன்மாங்கிஷ வளர்ச்சி முதலிய கண்வியாதிகள் தீரும்; நாட்பட்ட பூவும் ஒரு மாதத்திற்றீரும்.

### திரிபலை மாத்திரை.

கடுக்காயரிசி பல-௩. தான்றுக்காய் பல-௩. நெல்லிக்காய் பல-௧. திரிபலைக்கஷாயம் விட்டரைத்து மாத்திரை செய்து தண்ணீரிலுரைத்துக் கண்ணிலிடக் கண்சிவப்பு முதலியன தீரும்.

### வெள்ளெழுத்துக்கு

திப்பிலி மிளகு கடுக்காய் சமன்கூட்டி நெல்லிக்காய்ச் சாற்றிலரைத்துக் கயிறுசெய்து உலர்த்திக் கண்ணிலிட வெள்ளெழுத்து மாறும்.

### கர்ப்பூரமாத்திரை

இந்துப்பு கர்ப்பூரம் திப்பிலி புளியம்பழம் இவை சமன்கூட்டிப் புங்கம்வேர்ச் சாறுவிட்டரைத்துக் கயிறு செய்து புங்கம்வேர்ப்பாலிலுரைத்திடக் கண்ணோய் சக்லமும் தீரும்.

### இரத்தினாதி

தங்கம் வெள்ளி பவளம் படிகக்கல் சங்குப்பொடி துத்தம் இந்துப்பு நெல்லியரிசி சீரகம் நாவி இவை சமன் கூட்டி வெந்நீர்விட்டரைத்துக் கயிறுபண்ணி முலைப்பாலி லுரைத்துக் கண்ணிலிடக் காசம் படலம் புகைச்சல் முதலியன தீரும்.

### படிகமாத்திரை

படிகக்கல் சங்குப்பொடி கடல்நுரை பலகறை பச்சைக்கர்ப்பூரம் துத்தம் பசுவின்பல் பசுவின்கொம்பு பசு வெண்ணெய் குதிரைக்குளம்பு ஆமையோடு அதிமதுரம் முத்தக்காசு இவை சமன்கூட்டிக் கோசலம் விட்டரைத்துக் கயிறுபண்ணி உலர்த்தி எள்ளுப்பிரமாணம்

கோசலத்திலுரைத்துக் கண்ணிலிட இரணசுக்கிரன் பூகாசம் முதலியன தீரும்.

## தாம்பிரமாத்திரை

செம்பரைபொடி சங்குப்பொடி படிகக்கல் பசுவின் பல் மனேசிலை மஞ்சள் மிளகு சமன் கூட்டித் தண்ணீர் விட்டரைத்து உண்டைசெய்து தண்ணீரில் உரைத்துக் கண்ணிலிடச் சகலகண்வியாதியுந்தீரும்

## எள்ளுமாத்திரை

எள்ளரிசி-கூ0. சாதிப்பூ-ரு0. மிளகு-கக கூட்டி முலைப் பாலிலரைத்து உண்டைபண்ணி முலைப்பாலிலுரைத்துக் கண்ணிலிடக் கண்வியாதிகள் தீரும்

## பற்பனுகுளிகை

திரிகடுகு இந்துப்பு கடல்நுரை சீனி கற்கண்டு சூடன்கர்ப்பூரம் துத்தம் துரிசு செம்பஞ்சு பொன்மெழுகு வெண்கலப்பொடி செம்புப்பொடி தலையோட்டுப்பொடி கோழிமுட்டையோடு நாகரவண்டு வெள்ளைக்காக்குறட்டான்வேர் வெள்ளைச்சாரணைவேர் செங்கழுநீர்க்கிழங்கு இவை சமன்கூட்டிக் கையாந்தகரைச்சாறுவிட்டு ஒருசாமமரைத்துக் கயிறுசெய்து முலைப்பால் எலுமிச்சம்பழச் சாறு முருங்கைப்பூச்சாறு அவுரியிலைச்சாறு புளியமிலைச் சாறு இவற்றிலுரைத்துக் கண்ணிலிடத் திமிர்காசம் நீலகாசம் வர்ணகாசம் முதலிய கண்ணோய்களெல்லாந்தீரும்.

## குங்குமாதிகுளிகை

குங்குமப்பூ கோரோசனை துத்தம் துரிசு வகை கழஞ்சு-க. நல்லமஞ்சள் கழஞ்சு-ச. கர்ப்பூரம் பீதரோகணி வகை கழஞ்சு-இ. வெள்ளைச்சாரணைவேர் வெள்ளைக் குன்றிவேர் வெள்ளைக்காக்குறட்டான்வேர் நந்தியாவர்த்

தம்வேர் இவை பசவின்பாலில் தனித்தனியவித்து நிழலு லர்த்தாயுலர்த்தி வகை-கழஞ்சு-க. இவையெல்லாம் கல்வத் திட்டு எலுமிச்சம்பழச்சாற்ருல் ஒருசாமமரைத்து உழுந் தளவுருட்டி நிழலுலர்த்தி முலைப்பாலிலுரைத்துக் கண் ணிலிடக் கண்வியாதிகளெல்லாந்தீரும். கைப்புப் புளிப்பு தவிரவும்.

இளநீர்க்குழம்பு

இளநீர் படி-கசு அகலியசட்டியிலூற்றி அதில் எலு மிச்சம்வேர் வெட்டிவேர் பொன்னுங்காணிவேர் சிறு கிரைவேர் சங்கம்வேர் முத்தக்காசு ஓரிதழ்த்தாமரைவேர் தாமரைவளையம் செங்கழுநீர்க்கிழங்கு ஏலம் இலவங்கம் மதுரம் செங்கழுநீர்க்கோட்டம் கராம்பு சாத்திரபேதி பேரீஞ்சு முந்திரிகை இவை தனித்தனிபொடிசெய்து வகைக்குக் கழஞ்சு இரண்டுகூட்டி நாலுபடியாகவற்றக் காய்ச்சி ஆறினபின் சீலையில்வடித்துப்பிழிந்து தேன் படி ஒன்று கூடவிட்டுச் சிறுகக் குழம்பாகக்காய்ச்சிக் கோரை துவைத்துப்பார்க்க அதில் ஒட்டிவரும் பருவத்திலிறக்கி அகன்ற கலசத்திலேவூற்றி அதில் துத்தம் துரிசு இந் துப்பு பச்சைக்கர்ப்பூரம் சர்க்கரை இவைஐந்தும் வகைக்கு ஒருகழஞ்சுகூட்டி அக்கலசத்துள் அடங்கிய ஒருகலசத் தினுல் ஐந்துநாழிகை இழையத்தேய்த்து வழித்துப் பீங் கான் பாத்திரத்திலாவது செம்புப் பாத்திரத்திலாவது வைத்துக்கொள்ளவும். காரியத்தினுலே துடுப்புப்பண்ணி அந்தத்துடுப்பிலே குன்றிவிரையளவு குழம்பெடுத்துக் கண்ணிலிடவும். குழம்பு இறுகியிருந்தால் தேன்விட்டு இளக்கிக்கொள்ளவும். நெல்லிமுள்ளி மிளகு பொன்னுங் காணி சிறுகீரை இவை நாலுங்கூட்டியரைத்து உச்சந் தலையில் நிறையமத்தித்து ஆமணக்கிலைகொண்டுமூடிக் கட்

டிவைத்து ஒன்றைவிட்டொருநாள் நெந்நீரில் முழுகவும். உப்பு புளி கைப்பு நீக்கி மிளகு பருப்பு வெந்நீர்கூட்டிப் பத்தியமாயிருக்கவும். காசம் படலம் நயனசூலை நயனவாதம் முடமயிர் இரணசுக்கிரன் புழுமேய்ச்சல் வெள்ளெழுத்து முதலிய எல்லாக் கண்வியாதிகளுந்தீரும்.

### அரிதகிமாத்திரை

கடுக்காயரிசி-கஉ. கனத்தமிளகு-ரு. சிறுதிப்பிலி-ந. நெல்லிக்காய்ச்சாறுவிட்டரைத்துக் கயிறுபண்ணித் தேனிவிடக் கண்படலம் சிவப்பு மாறும்

### வெள்ளைச்சாரணைவேர்

வெள்ளைச்சாரணைவேர் பசுவின்பாலில் வேகவைத்து நிழலுலர்த்திவைத்துக்கொண்டு தேனிலுரைத்துக் கண்ணிவிட நீர்ப்பாய்ச்சல்மாறும். நெய்யிவிடப் பூமாறும். மஞ்சட்சாற்றிவிட்டாலும் கண்பூமாறும் கையாந்தகரைச் சாற்றிவிடக் கண்ணமரந்தீரும்.

### வயிரவன் அஞ்சனம்

பெருங்காயம் இந்துப்பு திப்பிலி சமன்கூட்டிப் பசு நெய்யிலரைத்துக் குளிகைபண்ணி நிழலுலர்த்தி இஞ்சி வெற்றிலை எலுமிச்சம்பழம் முலைப்பால் இவற்றிலுரைத்துக் கண்ணிவிடச் சன்னிதோஷந்தீரும்.

சிற்றாமணக்குப்பருப்பு பெருங்காயம் சமன்கூட்டி எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்து நிழலுலர்த்தி அனுபான விசேடங்களிலுரைத்துக் கண்ணிவிடப் பீளைசாறும் சன்னிதோஷந்தீரும்.

### வீரபத்திரன் அஞ்சனம்

நேர்வாளப்பருப்பு-உ0. மிளகு விராகனிடை- ௩0. இந்திரகோபம் விராகனிடை-ச. கறுத்த ஆட்டின் பித்திலரைத்துக் கயிறுசெய்து நிழலுலர்த்தி அனுபானவிசே

டங்களிலிலுரைத்துக் கண்ணிலிடக் கண்ணிலுள்ள தோஷங்கள் தீரும். யானை குதிரைகளுக்குக் கண்ணிலிடவும் நன்று.

சித்தாஞ்சனம்

நிலவேம்பு திப்பிலி மிளகு சமன் கூட்டிக் கோமூத்திரத்திலொருநாளூறவிட்டு மற்றநாளெடுத்து இலவங்கப்பட்டைச்சாறு தேன் கோமூத்திரம் இவை தனித்தனி விட்டரைத்துக் குழம்புசெய்து அடுப்பில் வைத்துக் காய்ச்சி மெழுகுபதத்தில் எடுத்து இரும்புச்சிமிழில் அடைத்துக்கொண்டு கண்ணில் அஞ்சனமிட வாதம் உன்மத்தபித்தம் வெறிபித்தந்தீரும்.

கெருடாஞ்சனம்

அஞ்சனக்கல் இந்துப்பு துத்தம் வெண்காரம் திரிகடுகு இரசம் செம்பரபொடி நீலக்கட்டி வகை பலம்-க, நேர்வாளப்பருப்பு பலம்-உ. முருங்கைவிரை பலம்-உ. எலுமிச்சம்பழச்சாற்றில் மூன்றுநாளரைத்துக் கபிறு செய்துலர்த்தி எலுமிச்சம்பழச் சாற்றிலுரைத்துக் கண்ணிலிடக் கண்தோஷங்கள் தீரும். பூதவேதாளம் பசாசுகளும் ஓடிப்போகும்.

விஷத்துக்கு அஞ்சனம்

அழிஞ்சில்வேர் வெள்ளைக்காக்குறட்டான்வேர் பெருங்காயம் வெள்ளையுள்ளி கோட்டம் பவளம் சமன் கூட்டி அரைத்துப்பொடிபண்ணி வைத்துக்கொண்டு விஷந்தீண்டி அறிவு மறந்தபோது தண்ணீரிற்கரைத்து அஞ்சனமிட்டு நசியம் பண்ணவும். சகலவிஷமுந்தீரும்

விஷத்துநசியம் குடோரி

இரசம் வெண்காரம் ஆர்க்கப்பொடிசெய்து வைத்துக்கொண்டு விஷந்தீண்டினபேர்க்குப் பொடியைத் தண்

ரில் இளக்கி உச்சந்தலையிற்கொத்தி உண்டைகட்டி உள் ங்கொடுத்து நசியமுமிடவும்.

### தேன் அஞ்சனம்

அழிஞ்சில்விரை புங்கம்விரை சமன்கூட்டித் தேன் ட்டு அரைத்துக் குழம்பாக்கி இரும்புச்சிமிழில் வைத்து ஞ்சனமிடத் தேள்விஷந்தீரும்.

### குளிர்சுரத்துக்கு அஞ்சனம்

முருங்கைவிரை அழிஞ்சில்விரை வேப்பம்விரை பப்பீர்க்கம்விரை சமன்கூட்டிக் குப்பைமேனிச்சாற்றி ரைத்து உண்டைசெய்து நிழலுலர்த்திக் கண்ணிலி க் குளிர்சுரந்தீரும்.

### சன்னிபேய்க்கு நசியம்

பேய்த்தும்மட்டிவேரும் திரிகடுகும் எருக்கலம்பழுப் புச்சாறுவிட்டரைத்து நசியம்பண்ணச் சன்னியும் பேயும் தீரும்.

---

## தைலவிதி.

### அமிர்தாமலகத் தைலம்.

சீந்திற்றண்டு நெல்லிக்காய் தாழைவிழுது மூவிலை கற்றாழை கரிசாலை முசுமுசுக்கை இவற்றின்சாறு பசுப்பால் நல்லெண்ணெய் வகை படி-க. கஷாயமிட்டு ஏலம் இலவங் கம் மதுரம் கோட்டம் கராம்பு சாதிக்காய் முந்திரிகைப் பழம் இலவங்கபத்திரி சதகுப்பை நற்சந்தனம் செஞ்சந்த னம் வெட்டிவேர் உருத்திராட்சம் வகை-கழ-க. அரைத் துக் கரைத்துப் பதத்தில்வடித்துப் பாதாதிகேசம் பூசிச் சிகைக்காய் வெந்நீரில்முழுகத் தலைப்பாரம் தலைமயக்கம் தலையாட்டம் சிரவாதம் நேத்திரரோகம் பயித்தியம் உட் ணம் தீரும்.

## காஞ்சூரைத் தைலம்.

காஞ்சூரைவிரை காஞ்சூரைவேர் அழிஞ்சில்வேர் ச
குப்பிவேர் விளாம்பட்டை சிவனார்வேம்பு கொடு
இவை சமன்கூட்டிக் குழித்தைலமிறக்கிப் படி-க. இ
சுரைக்கெந்தி கெல்லிக்கெந்தி மரமஞ்சள் கற்கடகசி
கருஞ்சீரகம் வெட்பாலையரிசி வகை-பல-வ. பொடிசெ
தைலத்திலிட்டு வைத்துக்கொண்டு தினம் ஒருகழ
தைலம் உட்கொள்ள குன்மம் பெருவியாதி செய்யா
செவ்வட்டை வண்டுகடி கண்டமாலை சகல புண்புரைக
எல்லாந்தீரும். மேலும் பூசவும்.

## குங்குலியத் தைலம்.

கருங்குங்கிலியம் பலம்-௰. ஓர் புதுக்கலசத்திலிட்டு
குங்கிலியமட்டத்தில் துவாரஞ்செய்து அதிற்குழாய்பதி
துக் குழாயின் சந்தில் சீலைமண்செய்து, மண்ணிலே த
ணீர் விட்டுப்பிசைந்து பொட்டளிகட்டி அதனாற் கலய
தின் வாயை அழுந்தமூடிக் கலயத்தைக் குழாய்ப்புறஞ்சா
அடுப்பில்வைத்துக் கனமாக எரியிட முக்காற்படி தைலம
றங்கும். பீங்கான் பாத்திரமாவது பழகின சட்டியாவது
வைத்துத் தைலத்தை ஏந்திக்கொள்ளவும். துட்டின
உட்கொள்ளச் சிரங்கு குட்டம் கடிவிஷம் சூலை நமைச்ச
தீரும். தாம்பிரபற்பம் பணவிடை எடுத்துத் தைலத்தி
விட்டு ௰-நாட்கொள்ளக் கெண்டைநோய் இரத்தமாய்
அறுத்துவிழும். பால் வெண்ணெய் முருங்கைப்பிஞ்
அவரைப்பிஞ்சு கத்தரிப்பிஞ்சு அறைக்கீரை பழஅரி
கூட்டவும்; உப்பு மிளகு வறுத்துக்கொள்ளவும்; கைப்பு
புளிப்பு நீக்கவும்.

## சண்டமாருதத் தைலம்.

வேம்பு இலுப்பை பூவரசு ஆவரை வில்வம் பு
கருங்காலி செம்பிளிச்சை வேங்கை இவற்றின்வயி

மன் கூட்டி இறக்கின் குழித்தயிலம் படி-க. பேய்ப்பிசுக்கு உக்காவி பேய்ச்சுரை அழிஞ்சில் கோழியவரை பருத்தி இவற்றின் விரைசமன் கூட்டியிறகின குழித்தயிலம் படி-க. எள்ளெண்ணெய் புங்கெண்ணெய் வேப்பெண்ணெய் குருந்தெண்ணெய் இலுப்பெண்ணெய் ஆமணக்கெண்ணெய் தெங்காயெண்ணெய் எருக்கலம்பால் திருகுகள்ளிப்பால் வகைபடி-க. விழுதி சாணாக்கி கோழியவரை வெதுப்படக்கி கழற்சி கண்டங்கத்தரி பேய்ப்பிசுக்கு ஊமத்தை தும்பை வேலிப்பருத்தி ஆடாதோடை கருநொச்சி பாவட்டை மணித்தக்காளி கரோட்டி கொட்டைக்கரந்தை முசுமுக்கை அழிஞ்சில் இண்டு இயங்கு வெண்ணொச்சி நறுந்தாளி செங்கீரை வெள்ளைச்சாரணை திராய் சவரிக்கொத்து முடக்கொத்தான் குப்பைமேனி சிறுசெருப்படி கையாந்தகரை பிரமி பொடுதலை இலைக்கள்ளி பிரண்டை இவற்றின்சாறு வகை படி-க. எல்லாங்கலந்து தாழியிலிட்டு அக்கருகாரம் அரத்தை மஞ்சிட்டி முச்சீரகம் சிறுதேக்கு கடுகுரோகணி, அதிவிடயம் வெளுத்தற்பிசின் குந்திருக்கம் வெட்பாலை வாலுழுவை நிலவேம்பு சித்திரமூலம் நீர்வெட்டி சுக்கு வசம்பு காட்டுமிளகு சதகுப்பை குக்கில் பஞ்சலவணம் எவச்சாரம் வெண்காரம் கல்நார் கல்மதம் ஊசிக்காந்தம் ஏலம் இலவங்கம் கோட்டம் மதுரம் சாதிக்காய் சாதிப்பூ தாளிசம் முந்திரிகை பேரீஞ்சு சிறுநாகம்பூ கஸ்தூரிமஞ்சள் கஸ்தூரி புனுகு பச்சைக்கர்ப்பூரம் தேவதாரு இலாமிச்சு நீர்வஞ்சிவேர் செவ்வள்ளி நெய்தற்கிழங்கு பூலா நிலப்பனை அமுக்கிரா முத்தக்காசு இலுப்பைப்பூ தாமரைவளையம் வில்வப்பழம் பெருங்குரும்பை ...கை கழஞ்சு-க. அரைத்துக் கரைத்துப் பழச்சாறு படி-உ. ...டக்கலந்து காய்ச்சி மெழுகுபதம்வருகிறநேரம் பசுப்பால்

வெள்ளாட்டுப்பால் தேன் இளநீர் இவையொவ்வொரு விட்டுப் பதத்தில்வடிக்கவும் குருபூசை சிவபூசைசெய் சர்வாங்கமுந் துவாலையிடத் திமிர்வாதம் சர்வாங்கவாத பிரலாபசன்னிவாதம் அலட்டுச்சன்னி பிரமை மதிமயக்கம் மோகினி பிரமராட்சதன் சூலை இன்னுமனேகவியாதிகள் தீரும்.

## வாதகரப்பன் தைலம்

புங்கிலை முருக்கிலை பொருழ்பி தழுதாழை சங்கங்குப்பி சாணாக்கி கோழியவரை சின்னி நொச்சி தூதுவளை கஞ்சாங்கோரை செருப்படி குப்பைமேனி கீழ்காய் நெல்லி மணித்தக்காளி இலைத்தக்காளி இவற்றின்சாறு சிற்றாமணக்கெண்ணெய் வகை படி-க. கலந்து அதில் பூதகரப்பன்பட்டை வசம்பு வெள்ளைபுள்ளி பெருங்காயம் அக்கராகாரம் கடுகுரோகணி இந்துப்பு திப்பிலி சீரகம் வகை பலம்-இ. கோமூத்திரத்திலரைத்துக் கரைத்து வடித்து உள்ளுங்கொடுத்து மேலும்பூச வாதகரப்பன் விஷகரப்பன் விஷவீக்கம் இவையெல்லாந்தீரும்.

## நாரத்தம்பழத் தைலம்

நாரத்தப்பழச்சாறு படி-க. நல்லெண்ணெய் படி-உ. ஆமணக்கெண்ணெய் படி-க. கலந்து திரிகடுகு அரேணுகம் அரத்தை மதூரம் மஞ்சள் வசம்பு கோட்டம் தேவதாரு பெருங்குரும்பை வகை கழஞ்சு-க. அரைத்துக்கரைத்து வடிதநுமுழுக எரிவு தலையில்வியாதி தீரும்.

வைத்தியசிந்தாமணி முற்றிற்று.

---